மணிக்கொடிப் பிரசுரம்: 3.

# பொம்மையா; மனைவியா?

[ஹென்றிக் இப்ஸன் எழுதியது]

க. நா. சுப்பிரமணியம், பி.ஏ.,
மொழிபெயர்த்தது

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்
ஜி. டி., மதராஸ்

காபினெட்] [8-அணா

PRINTED AT
THE JUPITER PRESS
MADRAS

# முன்னுரை

"கண்ணுள்ளவன் கவி."

—ஹென்றிக் இப்ஸன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கிய வுலகிலே புரட்சிகள் அனந்தம். அவைகளில் மிக முக்கியமானது நாடக இலக்கியத்தில் ஏற்பட்டது. அதன் மூலகர்த்தா ஹென்றிக் இப்ஸன் எனும் நார்வே நாட்டுக் கவி.

நார்வே சிறிய நாடு. அதன் பாஷையைப் பேசுகிறவர்கள் உலகத்தின் ஜனத் தொகையில் ஒரு சிறு பகுதியினர் தான். இப்ஸன் தம் காலத்திய நார்வேயின் வாழ்வைப் பற்றித் தம் சொந்த பாஷையில்தான் எழுதினார் எனினும், அவருக்கு உலகத்து இலக்கியத்திலே மகா உன்னத ஸ்தானம் கிடைத்தது. அவரை மேதை யென்று உலகம் புகழ்கிறது. அவர் நாடகங்கள் ஜப்பானிலிருந்து பெரு வரையில் பேசப்படும் முக்கியமான எல்லாப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. அவருக்குப் பின் வந்த இலக்கிய ஆசிரியர்கள் எல்லோரும்—ஒருவர்கூட விலக்கின்றி—எப் பாஷையில் எழுதுகிறவராயினும், எத்தேசத்தவராயினும், அவர் நாடகங்களாலும் அவைகளின் பாணிகளாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இது ஏன்?

மகா கவியின் உள்ளத்துடன், நார்வே நாட்டுச் சம்பவங்களுக்கும் மனிதர்களுக்கும் அவர் தம் எழுத்தில் உயிர் கொடுத்திருப்பதுதான் இதற்கு முக்கியமான காரணம். சமய சந்தர்ப்பங்களால் மனித சுபாவம் மேலெழுந்த வாரியாக மாறும்; ஆனால் மற்றைப்படி அது எல்லாத் தேசங்களிலும், சமூகங்களிலும், ஒரே படித்தா யுள்ளது. நார்வே நாட்டவர்களை

உள்ளபடியே தீட்ட முயன்ற இப்ஸன், தம் கவிதா விலாஸத்தால், மனித குலத்தையே தீட்டிவிடுகிறார். நார்வேயின் சமூகப் பிரச்னைகளை உண்மையாக உள்ளபடியே அலச முயன்றவர் உலகத்துப் பிரச்னைகளையே அலசி முடிவு காட்டுகிறார்.

அவர் கலைஞர். தம் காலத்து, தம் சமூகத்து மனிதர்களின் ஆத்ம சோதனைக்கு அவர் தம் கிரியா சக்தியை உபயோகிக்கிறார். இந்த ஆத்ம சோதனையைவிட கலைக்கு உயர்ந்த விஷயம் வேறு கிடைக்காது. இதை விஷயமாக வைத்து முதன் முதலாக நாடகங்கள் எழுதியவர் இப்ஸனே. இதுதான் அவர் நாடக உலகில் செய்த புரட்சி.

இலக்கியத்தை இரு விதமாகப் பிரிக்கலாம்: ஒன்று கனவு இலக்கியம், மற்றது நனவு இலக்கியம். கனவு இலக்கியம், வாழ்க்கையின் உண்மைகளை அங்கீகரித்து எதிர்த்துப் போராடத் தைரியமில்லாது ஓடி ஒளிவதின் சின்னம். நனவு இலக்கியம், பலர் குதிருக்குப் பின் மறைத்து வைக்க முயலும் அடிப்படையான உண்மைகளை அம்பலத்துக்கிழுத்து, ஆடவைக்கும். இந்தியாவில் காளிதாஸனுக்கு முன்னும், கிரீஸில் ப்ளேடோவுக்கு முன்னும், சரித்திர வரம்புக் குட்படாத நாட்களில், நனவுப் பாணியைப் பின்பற்றிய நாடகங்கள் இருந்திருக்கலாம். ஷேக்ஸ்பியரைக் கவியாகப் போற்றலாமே தவிர நாடகாசிரியராகப் போற்றுவதற் கில்லை. இப்ஸனுக்கு முன் நனவு இலக்கியப் பாணியைப் பின்பற்றிய நாடகங்கள் வழக்கில் இல்லை. சமீப காலத்தில் ஒரு சிலர் அப்படிப்பட்ட நாடகங்கள் சிருஷ்டிக்க முயன்றனர். ஆனால் அவர்களுக்குக் கவி உள்ளம் இல்லாததாலோ, தீவிரமும் தைர்யமு மில்லாததாலோ, அவர்கள் முயற்சி பலிக்கவில்லை.

நனவு இலக்கியப் பாணியை உபயோகித்து உயர்தர நாடகங்கள் சிருஷ்டிக்க முடியும் என்று சிருஷ்டித்துக் காட்டியவர் ஹென்றிக் இப்ஸன். அவர் நாடகங்களால் எழுப்பப்

பட்ட பிரச்னைகள் மேல்நாட்டுச் சமூகத்தையே ஒரு கலக்குக் கலக்கின. அவர் தம் சிருஷ்டிகளைப் பின்பற்றி 'உண்மை' வழியில் நடக்கையில், சமூகத்தின் ஊழல்கள் பலவற்றில் மோதி, அவைகளைக் கண்டிக்க வேண்டியிருந்தது. அவர் தனியாகச் சமூகத்தையே எதிர்க்கத் தயாராக இருந்தார். அது வியர்த்தமான எதிர்ப்பன்று; வீண் வாக்குவாதமன்று; மேலெழுந்தவாரியான எதிர்ப்பன்று; தீவிர விசாரத்தால் எழுந்து, உண்மையைத் தைரியமாக எடுத்துக்காட்டி அலசும் எதிர்ப்பு.

இப்ஸனுடைய மேதையில் இது ஒரு அம்சந்தான்—ஆனல் ஒரு முக்கியமான அம்சம். தவிர, அவர் கவி. சம்பவங்களை எடுத்துக் கையாளுவதில் மகா மேதை. அவருடைய நாடக சிருஷ்டிகள் அபூர்வப் படைப்புக்கள்; அவருடைய பாத்திரங்கள் நம்மைப் போல் சதையும் ரத்தமும் உள்ளவர்கள்; நம்மிடையே நம்மைப் போல் நடமாடுபவர்கள்; நம்மைப் போலவே பேசுபவர்கள், நிற்பவர்கள், நடப்பவர்கள். சில சமயம் அவர்கள் வெறும் நாடகப் பாத்திரங்கள் என்பதை நாம் மறந்தே விடுகிறோம். இப்படிப் பாத்திரங்களைச் சிருஷ்டித்த அவர், நாடகத்துக்கு ரொம்ப முக்கியமான காட்சி அமைப்பிலும், அரங்கில் கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவரத்தக்க ஜோடனைகள் செய்வதிலும் சமர்த்தர். உலகிலே நாடக இலக்கியம் இறந்தபோது, இருந்த அஸ்திவாரத்தை வைத்துக்கொண்டு, அதன் மேல் அழகிய மாளிகையை எழுப்பி, புதுப் புது ஜோடனைகள் செய்திருக்கிறார்.

ஆம், உலகத்து நாடக இலக்கியாசிரியர்களில் முக்கியமானவர்களில் ஒருவராக அவரை மதிப்பதில் தவறில்லை.

ஹென்றிக் இப்ஸன் தெற்கு நார்வேயில் ஸ்கியன் என்ற சிறு நகரில் 1828-ம் ஆண்டு மார்ச்சு 2-ம் தேதி பிறந்தவர். அவரைச் சுத்த நார்வே நாட்டாராகக் கருதுவதற்கில்லை. அவர் மூதாதையர்களிடம் முக்கியமாக ஸ்காட்டிஷ் ஜெர்மன்

கலப்பு இருந்தது. அவருடைய எட்டாவது வயதில் அவர் தந்தை ஆஸ்தியை யெல்லாம் இழந்து விட்டார். ஏழையான இப்ஸன் குடும்பத்தாரைக் கவனிப்பவரில்லை. அவர்கள் பணக்காரர்களாக இருந்த போது அவர்களிடம் உறவு கொண்டாடிக்கொண்டு வந்தவர்க ளெல்லோரும் ஒதுங்கி விட்டனர். இச் சம்பவத்தின் கசப்பு ஹென்றிக் கிழவரான பிறகும்கூட மறையவில்லை.

இள வயதிலிருந்தே அவர் மனமும் இதயமும் எதையும் கிரகிக்கும் சக்தி படைத்தததா யிருந்தது. அந்த நாட்களில் அவர் மனத்தில் பதிந்த எவ்விஷயத்தையும் அவர் பின்னர் மறக்கவில்லை. அவர் பள்ளி நாட்களைப் பற்றி அதிகம் சொல்வதற்கில்லை. தனிமையாக, யார் வழிக்கும் போகாமல், யார் நட்பையும் வேண்டாமல், விளையாடக்கூடத் தோழர்கள் இல்லாமல், காலந் தள்ளினார். பதினைந்தாவது வயதில் அவர் சித்திரப் பள்ளியில் சேர்ந்து படிக்க ஆசைப்பட்டார். ஆனால் அவர் தந்தையால் அவரைச் சாதாரணப் பள்ளிக்கு அனுப்பக் கூடச் சக்தியில்லை. எனவே க்ரிம்ஸ்டாட் என்ற நகரில் ஒரு டாக்டரிடம் வேலை கற்றுக்கொள்ள அமர்ந்தார் ஹென்றிக்.

க்ரிம்ஸ்டாடின் ஜனத்தொகை எண்ணூறு. அச் சிறிய நகரில் ஐந்து வருஷம் தங்கினார் இப்ஸன். பகல் நேரமெல்லாம் டாக்டருடன் சென்றுவிடும். இரவு ஊர் சுற்றுவதிலும், படிப்பிலும், வாழ்க்கையின் அர்த்தத்தைப் பற்றிய விசாரணைகளிலும் செல்லும். க்ரிம்ஸ்டாடின் ஜனங்களின் பழக்க நடவடிக்கைகளைக் கவனித்து, அவைகளைப் பரிகாசஞ் செய்து, கட்டுரைகளும், படங்களும் எழுதுவார். அவருக்கு யாரும் நண்பர்களே கிடையாது; ஏழை; அவரை ஏனென்று பிரியமாகக் கேட்பார் யாருமில்லை.

இருபதாவது வயது நெருங்கிய போது அவர் க்ரிஸ்டியானியா மருத்துவக் கலாசாலையில் சேரவேணுமென்று 'முதல்

பரீட்சைக்குப் படித்தார். பரீட்சை தேறவில்லை. ஆனால் அவர் பரீட்சைக்காகப் படித்த ஸால்லஸ்டும், ஸிஸரோவும் அவருடைய முதல் நாடக விஷயமாக உபயோகப்பட்டன. அவர் "காடிலைன்" என்ற மூன்றங்கச் சோக நாடகத்தை எழுதி முடித்தபோது அவருக்கு வயது இருபத்தொன்று. இதில் விசேஷ மென்ன வென்றால், அவர் அதுவரையில் ஒரு நாடகமாவது பார்த்ததுமில்லை; வாசித்ததுமில்லை.

பரீட்சையோ தேறவில்லை. டாக்டரிடம் வேலையு மில்லை. எழுதிப் பிழைக்கலாம் என்ற உத்தேசத்துடன் அவர் க்ரிஸ்டியானியா சென்றார். நிறைய எழுதினார். ஆனால் அந்த எழுத்தால் பிழைக்க வழியில்லை. அக்காலத்திய இலக்கியப் பாணிகள் அவருக்குப் பிடிக்கவில்லை. "மலர்களையும் குயில்களையும் பற்றி எழுதுவதைக் குறைப் போம். மலைகளையும் வனங்களையும் பற்றி எழுதுவானேன்? பண்டைப் புராணக் கதைகளை மறந்து விடுவோம். மௌன மாக, யாரும் அறியாமல், மனித ஹிருதயத்திலே நடப்பதை எழுதுவோம்" என்றார் இருபத்திரண்டு வயது நிரம்பாத இப்ஸன். அவர், க்ரிஸ்டியானியாவில், உண்ண உணவின்றி, இலக்கியத்தைத் தவிர சம்பாதிக்க வேறு தொழிலின்றி, இரண்டு வருஷம் அல்லாடினார்.

1851-ல் அவர் பெர்கன் என்ற நகரில் புதிதாக ஸ்தா பிக்கப்பட்ட தேசீய நாடக சாலையின் நிர்வாகஸ்தராக ஆக் கப்பட்டார். ஐந்து வருஷங்கள் அங்கிருந்தார். அவர் எழுதிய பல நாடகங்கள் அந்த நாடக சாலையில் நடிக்கப்பட் டன. அவைகளில் 1856-ல் அவர் எழுதிய "ஸோலேஹங் கில் விருந்து" என்ற நாடகம் முதன் முதலாக ஜனங்களின் மனத்தைக் கவர்ந்தது. அன்றுமுதல் அவர் புகழ் குன்றாது வளரத் தொடங்கிற்று. அதே வருஷம் அவர் கலியாணஞ் செய்துகொண்டார். "என் கலியாணத்திற்குப் பிறகுதான் என் வாழ்க்கையிலே தீவிரமும் நம்பிக்கையும் உண்டாயிற்று" என்று அவர் பின்னர் ஒரு முறை சொல்லியிருக்கிறார்.

1857-முதல் ஐந்து வருஷங்கள் இப்ஸன் க்ரிஸ்டியானியாவில் இரண்டு நாடகசாலைகளுக்கு நிர்வாகஸ்தராக இருந்தார். அந்த நாட்களில் அவர் எழுதிய நாடகங்களைப் பற்றி அதிகஞ் சொல்லுவதற்கில்லை. இப்ஸனின் தனிப் பாணியின் முக்கிய அம்சங்கள் அவைகளில் காணப்படவில்லை. அவை அக்காலத்திய நாடகங்களைப் போலக் கனவு இலக்கியப் பாணியில் அமைந்திருந்தன. நாடகங்களாக ஜனங்கள் அவைகளை ரஸித்தனர். நாடகசாலைகளில் அந்தப் பத்து வருஷங்களில் இப்ஸன் பெற்ற பயிற்சி பின்னர் பயன்பட்டது.

1862-ல் அவர் வேலை போய்விட்டது. மறுபடியும் இரண்டு வருஷம் சாப்பாட்டுக்கே யில்லாமல் கஷ்டப்பட்டார். நண்பர்கள் சிலர் சிபாரிசின் பேரில் அவருக்கு சர்க்கார் உதவிச் சம்பளம் அளித்தனர். அவர் 1864-ல் இதாலிக்குப் போனார். நார்வேயை விட்டு அப்போது வெளியேறியவர் 1891-வரையில் தம் சொந்த நாடு திரும்பவே யில்லை. அந்த இருபத்தேழு வருஷங்களையும் அவர், ஐரோப்பாவில் பல தேசங்களில், முக்கியமாக இதாலியிலும் ஜெர்மனியிலும், கழித்தார்.

1866-ல் அவருடைய "பிராண்ட்" வெளிவந்தது. அவருடைய பிரசுரகர்த்தா 500 பிரதிகள் பதிப்பதாக உத்தேசித்திருந்தவன், ஏதோ அசட்டுத் தைரியமாக 1250 பிரதிகள் பிரசுரித்தான்; அத்தனை பிரதிகளும் ஒரே மாதத்தில் செலவானதைக் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான்; இரண்டாவது பதிப்பும் வெளிவந்தது; அவ்வருஷ முடிவிற்குள் நான்கு பதிப்புக்களுக்கு அவசியம் ஏற்பட்டது. "பிராண்"டுடன் நார்வேயின் இலக்கியத்தில் இப்ஸனின் ஸ்தானம் நிலைத்துவிட்டது என்று சொல்லலாம். இப்ஸனையும் அவர் நண்பர் ப்ஜார்ண்ஸ்ட்ஜேர்ண் ப்ஜார்ண்ஸனையும் நார்வேயர்கள் தங்கள் முக்கிய நாடகாசிரியர்களாகக் கருதினர்.

அதற்கப்புறம் வரிசையாக "பியர் கிண்ட்" (1867), "வாலிப சங்கம்" (1869), "சக்கரவர்த்தியும் கலிலியனும்"

(1872) ஆகியவை வெளிவந்தன. இவைகளால் நார்வேயில் இப்ஸனின் மதிப்பு ஏறிற்று; அவர் புகழ் எல்லா ஸ்காண்டி நேவியத் தேசங்களிலும் பரவிற்று; அவர் பெயர் ஜெர்மனி வரையில் எட்டியது. அவரைக் கவியாக அறிந்து அங்கீகரித் தனர் நார்வேயர்கள்.

1877-முதல் 1882-க்குள் வெளிவந்த நான்கு நாடகங் களால்தான் இப்ஸனின் புகழ் ஐரோப்பா முழுவதும் பர விற்று. அவைகளே இப்ஸனின் எழுத்தில் சிரேஷ்டமானவை. "மிகச் சிரேஷ்டமானது—அவர் எழுத்தின் சிகரம் இது" என்று அந்த நான்கு நாடகங்களில் தனியாக ஒன்றைப் பற்றிச் சொல்வதற்கில்லை. அவை நான்கும் இப்ஸனுடைய நாடகங்களில் சிறந்தவை. இப்ஸனைச் சரியாகத் தெரிந்து கொள்ள விரும்பும் யாரும் அந்த நான்கையும் படித்தே ஆக வேண்டும்.

"சமூகத்தின் தூண்கள்" 1877-ல் வெளிவந்தது. அதை எழுத இப்ஸன் மிகவும் சிரமப்பட்டார். வழக்கமாகவே அவருக்கு எழுத்து சுலபமாக வராது. திருப்பித் திருப்பி யெழுதி, பல தடவை திருத்தினால்தான் அவர் மனம் திருப்தி யடையும். தவிரவும், பழைய மாதிரியாக எழுதாமல், புது வழி யைப் பின்பற்ற எண்ணிய அவர், ரொம்பவும் கஷ்டப்பட்டுத் தான் அதை எழுதி முடித்தார். கிரேக்க நாடக அஸ்திவாரம்; கட்டியது புது மாளிகை. அவர் பட்ட சிரமம் வீண் போக வில்லை. தக்க பயன் அளித்தது. புத்தகம் 6000 பிரதி களும் ஆறு வாரத்திற்குள் விற்பனையாகிவிட்டன. இரண்டா வது பெரிய பதிப்புக்கு அவசிய மேற்பட்டது. நாடக அரங் கிலும் அதன் மேன்மைகள் தயக்கமின்றி அங்கீகரிக்கப் பட்டன.

"சமூகத் தூண்கள்" பிரசுரமாய் ஏழெட்டு மாதங்கள் அதிலிருந்து வரவேண்டிய பணத்தைக் கணக்கெடுத்துக் காப்பாற்றுவதில் போய்விட்டன. 1878 கோடையில்தான்,

இப்ஸன் ஆல்ப்ஸ் பிரதேசத்தில் தங்கி யிருக்கையில், அடுத்த நாடகத்தின் விதை அவர் மனத்தில் ஊன்றப்பட்டது. அக் டோபரில் அவர் புது நாடகத்துக்குக் குறிப்புக்கள் எழுத ஆரம்பித்தார். சமூக விதிகளுக்கும் இயற்கைச் சுபாவத் துக்குமுள்ள வித்தியாச வேறுபாடுகளைப் புதுநாடகத்தில் அவர் தீட்டுவதாக உத்தேசித்திருந்தார். "நமது தற்போ தைய சமூகம் பிரம்மசாரி ஆத்மாக்களால் ஆக்கப்பட்டது" என்று 'சமூகத்தூண்க'ளில் எழுதினார் இப்ஸன். இந்த வாக்கியத்தை அடிப்படையாக வைத்துப் "புதிய சோக நாடக"த்தை எழுதுவதாகத் தீர்மானித்தார்.

"ஆண்களால் ஏற்படுத்தப்பட்ட விதிகள் இன்று நம்மைக் கட்டுப்படுத்துகின்றன. நமது நீதிபதிகளுக்கு ஸ்திரீகளின் கட்சி தெரியாது" என்று புது நாடகத்துக்குக் குறிப்பு எழுதினார் அவர். "சண்டையின்றி எப்படி இருக்க முடியும்? ஆண் ஆத்மாவின் வாழ்வு வேறு; பெண் ஆத்மாவின் வாழ்வு வேறு. ஆணும் பெண்ணும் ஒருவர் ஆத்மாவை ஒருவர் அறி வது அவசியமல்லவா?.........பெண்ணின் காரியங்களுக்கு உரைகல் 'அன்பு' தான். 'என் காதலால் அப்படிச் செய்தேன்' என்று அவள் சொன்னால், அது எப்படிப்பட்ட காரியமானா லும் குற்றமாகாது......ஆண்களால் ஏற்படுத்தப்பட்ட சமூக விதிகளை மீறி அவளை மன்னிக்கத் தயங்குபவனிடமிருந்து அவள் ஓடிவிட வேண்டியவள்தானே!......"

பல மாதங்கள் விஷயம் அவர் மனத்திலே கிடந்து புரண் டது. அவர் அப்போது ரோமில் இருந்தார். அங்கு பல சங்கங்களில் அவர் ஸ்திரீகளுக்கு உரிமைகளும், சுயேச்சையும் கொடுப்பதுபற்றிப் பிரஸ்தாபித்து விவாதத்தைக் கிளப்பி விடுவார். இப்படிப் பலவிதமாகவும் மனத்தில் விஷயம் முழு வதும் பதிந்த பிறகுதான் அவர் எழுத ஆரம்பித்தார். அவ ருக்கு நல்ல வெயிற் காலத்தில்தான் வேலை ஓடும்; நாடகம் 1879-கோடை முடிவதற்குள் தயாராகி விட்டது. ஆனால் அது கடைசியாகப் "பொம்மையா? மனைவியா?" ஆவதற்குள்

மூன்று தடவை அதைத் திருப்பி எழுதி விட்டார் இப்ஸன்.

முதல் பாடத்திலிருந்த பல குறைகள் திருந்தின. நாடகப் பாத்திரங்களே ஸ்திரீகளின் உரிமையைப் பற்றி விவாதிக்கின்றனர் முதல் பாடத்தில். வாழ்க்கையையே பிரதிபலித்த நாடகம் ஏன் விவாதங்களில் வீண் காலம் கழிக்கவேணும்? முதல் பாடத்தில் கதாநாயகன் ஹெல்மர் சரியாக உருவக மாகவில்லை. எல்லாக் கணவர்களும் "நான் தானே ஹெல்மர்?" என்று சந்தேகங் கொள்ளும்படி கடைசிப் பாடத்தில் ஹெல்மர் உருவக மாகிவிட்டான்.

செப்டம்பர் முடிவதற்குள் நாடகம் தயாராகி விட்டது. கிறிஸ்துமஸுக்கு மூன்று வாரங்க ளிருக்கையில் புத்தகம் பிரசுரமாயிற்று. எண்ணாயிரம் பிரதிகள்! ஒரு மாத மாவதற்குள் இரண்டாவது பதிப்பும் விற்பனையாகிவிட்டது. கிறிஸ்துமஸ் தாண்டு முன்னர் அது "நோரா" என்ற பெயருடன் ஜெர்மனியில் மொழிபெயர்க்கப்பட்டது. பின்னர் வரிசையாக, அது, பின்லாந்து (1880), இங்கிலாந்து (1882), போலந்து (1882), ருஷியா (1883), இதாலி (1884) முதலிய தேசத்துப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. வாசகர்களாலும் ரஸிகர்களாலும் குதூகலத்துடன் வரவேற்கப்பட்டது.

நாடக அரங்கிலும் அதன் பெருமைக்குக் குறைவில்லை. 1879-ல் அது கோபன்ஹாகனில் நடிக்கப்பட்டது. பின்னர் மறுபடியும் கோபன்ஹாகனிலும், ஹெல்ஸிங்போரிலும், ப்ளென்ஸ் போர்கிலும், மூனிச்சிலும் அது 1880-ல் நடிக்கப்பட்டது. மூனிச்சில் அது ஜெர்மன் பாஷையில் நடிக்கப்பட்டபோது, இப்ஸனே, தம் நாடகத்தைப் பார்க்க அங்கு பிரசன்னமாகி யிருந்தார். 1890-க்குள் அது எங்கெங்கு எந்தெந்தப் பாஷைகளில் நடித்துக் காட்டப்பட்டது என்று கணக்கெடுப்பது சாத்தியமில்லை. அதற்கப்புறமும் இன்று

வரையிலும் அரங்கில் அதன் பெருமை குறையவில்லை. ஏன், இந்த 1938-ல் கூட அது, தார்ண்டன் நீவன் வில்டர் என்ற அமெரிக்க இள மேதையால் ஆங்கிலத்தில் தழுவி எழுதப்பட்டு, நியூயார்க்கில் நடிக்கப்பட்டது.

நோராவின் பிரச்னையைப் பல தேசத்தில் பல பாஷைகளில் பலர் விவாதித்தனர். தற்கால சமூகத்தின் ஸ்திரீ புருஷ சம்பந்த விதிகளை அலசி அவை தவறு என்று முடிவு காட்டிய "பொம்மையா, மனைவியா?"வின் ஆசிரியரின் தைரியத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசினர். எவ்வளவுதான் 'மரப்பாச்சி'யாக இருந்தாலும் பொய்க் கையெழுத்திடுவது குற்றமென்று நோரா அறியாமலிருந்தது சாத்தியமான விஷயமா? அந்த 'மரப்பாச்சி' திடீரென்று கடைசிக் காட்சியில் எப்படிப் 'பெண்'ணாக மாறினாள்? நோரா எவ்வளவு தான் உரிமைகள் வேண்டினாலும் அவள் தன் குழந்தைகளை அப்படித் துறக்கலாமா? இவ்வாறெல்லாம் ஜனங்கள் விவாதித்தனர். நோரா ஒரு நாடகப் பாத்திர மென்பதை மறந்து, அவளை உயிருள்ள பெண்ணாக மதித்து; அவர்கள் இப்படி விவாதித்ததே இப்ஸனின் புதுப் பாணியின் வெற்றிக்கும் மேன்மைக்கும் போதுமான அத்தாட்சி.

முக்கியமாக ஜெர்மனியில் நாடகத்தின் முடிவு பலருக்குப் பிடிக்கவில்லை. நோராவாக நடிக்கவிருந்த ப்ரௌரோபே என்பவள், "முடிவை மாற்றாவிட்டால் நடிக்க மாட்டேன்" என்றாள். "நான் நோரா மாதிரி ஒருநாளும் என் குழந்தைகளை அப்படி விட்டுப் போகமாட்டேன்!" என்றாள் அவள். மொழிபெயர்ப்பாளன் கையில் அதை விட்டுவிட இஷ்டமின்றி, வேறு வழி காணாமல், இப்ஸன், தாமே, வெறுப்புடன், முடிவை மாற்றி எழுதிக் கொடுத்தார். நோரா வீட்டைவிட்டுக் கிளம்பும்போது அவள் கண்ணில் குழந்தைகள் படுகின்றன; அவள் குழந்தைகளை விட்டுப் போகத் தைரியமின்றி ஹெல்மருடன் தங்கிவிடுகிறாள். இதுதான்

மாற்றப்பட்ட புது முடிவு. ஆனால் இரண்டொரு முறை இப்புது முடிவுடன் நாடகத்தை நடித்துப் பார்த்த பிறகு ரஸிகர்களுக்குப் பழைய முடிவுதான் சரியானது என்ற உணர்ச்சி வந்தது. ப்ரௌ ரோபேயும், பழைய முடிவையே அங்கீகரித்து, அதில் நடித்துப் பெரும் புகழ் பெற்றாள்.

"பொம்மையா, மனைவியா ?"வுக்குப் பிறகு வெளிவந்த இரண்டு நாடகங்களும் அதே ரீதியைச் சேர்ந்தவை. அவை களையும் சமூக நாடகங்கள் என்று சொல்லலாம். "பழமை கள் (Ghosts)" (1851), "ஜனங்களின் விரோதி" (1882)— இவ்விரண்டிலும் சமூக சம்பிரதாயங்களின் ஊழல்கள் கலா சாதனமாகத் திகழ்கின்றன. இவைகளால் எழுப்பப்பட்ட பிரச்னைகளும் ஐரோப்பாவின் உள்ளத்தைக் கவர்ந்தன. இப்ஸனையும் அவர் நாடகங்களையும் பற்றிப் பேசாதவ ரில்லை, எழுதாத இலக்கியாசிரியர்கள் இல்லை.

அதற்கப்புறம் அவர் எழுதிய நாடகங்கள் பலதரப் பட்டவை. அவருடைய மேதையை நன்கு விளக்குகின்றன எனினும், அவைகளில் சமூக நாடகங்களில் உள்ள தீவிரம் இல்லை, தீர்மானமும் இல்லை. எனினும், அவைகளில் ஒவ்வொன்றையும் தனித் தனியே இப் ஸனின் முக்கிய நாடகம் என்று கருதுபவர்கள் இருக் கின்றனர். காரணமின்றியே அவர்கள் அப்படி எண்ணுகிறார் கள் என்றும் சொல்வதற் கில்லை. "காட்டு வாத்து" (1884), "ராஸ்மர்ஷோம்" (1886), "சமுத்திரத்துச் சீமாட்டி" (1888), "ஹெட்டா கேப்ளர்" (1890)—இவைகளிலும் அவருடைய திறமை நன்கு பிரகாசிக்கிறது.

அவர் நார்வேயை விட்டுக் கிளம்பி இருபத்தேழு வரு ஷங்க ளாகிவிட்டன. எனினும் நார்வேயைப் பற்றிய ஞாபகங் கள், எண்ணங்கள் அவர் மனத்தைவிட் டகலவில்லை. அவ ருடைய முக்கிய நாடகங்களெல்லாம் நார்வேயைப் பற்றித் தான். அவர் 1891-ல் சொந்த நாடு திரும்பினார். அப்போது

அவரைக் குதூகலத்துடன் வரவேற்றனர் நார்வேயர்கள். தம் முடைய பாக்கி நாட்களை அவர் க்ரிஸ்டியானியாவிலேயே கழித்தார்.

1892-ல் "கொத்து மேஸ்திரி", 1894-ல் "சின்ன இயால்ப்", 1895-ல் "ஜான் காப்ரியேல் போர்க்மன்", 1900-ல் "இறந்த நாங்கள் விழிக்கும்போது" என்ற நாடகங்கள் வெளிவந்தன. இவை நான்குந்தான் அவருடைய கடைசி நாடகங்கள். சமூக நாடகங்களில் சமூக விதிகளை அலசியது போல இந் நான்கிலும் இப்ஸன் மனித குலத்தைத் தனி மனிதர்களாகப் பிரித்து அலசுகிறார். அவைகளையும் ஆர்வத்துடன் வரவேற்றனர் வாசகர்கள். முதற் பதிப்பு ஒன்றிலாவது பதினாயிரம் பிரதிகளுக்குக் குறைந்து பிரசுரமாகவில்லை. "ஜான் காப்ரியேல் போர்க்ம"னில் பதினாறாயிரம் பிரதிகள் ஒரு மாதத்தில் விற்பனையாயின. இலக்கிய உலகில் அன்றுவரை அவ்வளவு பெரிய முதற் பதிப்பு வெளிவந்ததில்லை.

1898-ல் அவருடைய எழுபதாவது ஆண்டு நிறைவை ஐரோப்பா முழுவதும் கொண்டாடிற்று. இருபதாவது வயதில் கையில் பணமின்றி, உண்ண உணவின்றி, தங்க இடமின்றி, சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பாரின்றித் திரிந்த இப்ஸன், அதே க்ரிஸ்டியானியாவில், உலகம் புகழும் மேதை யென அங்கீகரிக்கப்பட்டு, நார்வேயின் கோடீசுவரர்களில் ஒருவராக, 1906-ல், மே 13-ந்தேதி, அவருடைய எழுபத்தியெட்டாவது வயதில் இறந்தார்.

"நான் எழுத்தாளனாக எழுதியதெல்லாம் ஜீவாதாரமான ஒரு உணர்ச்சியையோ சம்பவத்தையோ அடிப்படையாகக் கொண்டவை. எழுதக்கூடிய ஒரு விஷயம் அகப்பட்டது என்பதற்காக, எனக்கு நம்பிக்கையோ, அர்த்தமோ, அந்தமோ இல்லாத விஷயத்தைப் பற்றி நான் எழுதியதேயில்லை" என்றார் இப்ஸன் ஒரு சமயத்தில். அது உண்மை.

அவர் வார்த்தைகளிலேயே அவர் மேன்மையின் காரணத்தையும் சொல்லி முடித்துவிடலாம். "நான் நாடகங்கள் எழுத முயலவில்லை; வாழ்க்கையையே என் எழுத்து மூலம் மறுபடியும் சிருஷ்டிக்க முயன்றேன். நான் நாடகப் பாத்திரங்களைச் சிருஷ்டிக்கவில்லை; மனிதனையும் மனித ஹிருதயத்தையும் பற்றி எழுதினேன்; அவ்வளவுதான்."

* * *

இந்த நாடகம் படிப்பதற்கேயன்றி, நடிப்பதற்கன்று.

தமிழ் நாடக இலக்கியத்துக்கு ஆதர்சமாக, வழிகாட்டியாக, ஒரு நாடகம் வேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்து, அதற்குத் தக்க ஒரு நாடகத்தைச் சொந்தமாகச் சிருஷ்டிக்கச் சக்தியின்றி, இதை மொழி பெயர்த்திருக்கிறேன்.

ஆனால், இப்ஸனின் நாடகப் பாணியை, ஆசிரியர்கள் மட்டுமின்றி, பொது ஜனங்களும் ரஸிக்கலாம், தமிழர்கள் ரஸிப்பார்கள் என்றே நம்புகிறேன்,

க. நா. சுப்பிரமணியம்.

## பாத்திரங்கள்

| | |
|---|---|
| தார்வால்ட் ஹெல்மர் | ( Torvald Helmer ) |
| நோரா-அவன் மனைவி | ( Nora ) |
| டாக்டர் ராங்க் | ( Doctor Rank ) |
| மிஸிஸ் லிண்டே | ( Mrs. Linde ) |
| நில்ஸ் க்ராக்ஸ்டாட் | ( Nils Krogstad ) |
| ஹெல்மருடைய மூன்று சிறு குழந்தைகள் | |
| ஆன்-அவர்களுடைய தாதி | ( Anne ) |
| வேலைக்காரி | |
| கூலியாள் | |

இடம் : ஹெல்மருடைய வீடு

# பொம்மையா; மனைவியா?



## அங்கம் 1.

[இடம்—பணத்தை வாரிக் கொட்டி யிறைக்காமல் சௌக்கியமாகவும், ரஸனையுடனும் அலங்கரிக்கப் பெற்ற ஓர் அறை. பின்னால் வலது புறம் இருக்கும் கதவு வெளிக் கூடத்துக்கும், இடது புறம் இருக்கும் கதவு ஹெல்மரின் அறைக்கும் போகும் வழிகள். இரண்டு கதவுகளுக்கு மிடையே ஒரு பியானோ இருக்கிறது. இடது புறச் சுவரில் நடு மத்தியில் ஒரு கதவும் அதற்கடுத்தாற்போல் ஒரு ஜன்னலும் இருக்கின்றன. அந்த ஜன்னலுக் கருகில் ஒரு வட்ட மேஜையும், நாற்காலிகளும், ஒரு சிறிய ஸோபாவும் இருக்கின்றன. வலது புறச் சுவரின் கோடியில் இன்னொரு கதவு இருக்கிறது. அதே பக்கத்தில் காலடி விளக்குகளுக் கருகில் ஒரு கணப்பு, ஈஸிசேர்கள், ஒரு ராக்கிங் (ஆடுகிற) சேர் இவை இருக்கின்றன. கணப்புக்கும் கதவுக்கும் இடையே ஒரு சிறு மேஜை இருக்கிறது. சுவரில் பல செதுக்கப்பட்ட சித்திரங்கள். ஒரு கண்ணாடி அலமாரியில் பல சிறு சாமான்களும் பீங்கான்களும் இருக்கின்றன. ஒரு சிறிய புத்தக அலமாரியில் நல்ல கட்டிடங் கொண்ட பல புத்தகங்கள் இருக்கின்றன. தரையில் கம்பளங்கள் விரிக்கப் பட்டுள்ளன; கணப்பு எரிந்துகொண்டிருக்கிறது. மாரிக் காலம்.

வெளிக் கூடத்தில் ஒரு மணி யடிக்கிறது; சற்று நேரத்துக் கெல்லாம் கதவு திறப்பது காதில் விழுகிறது. நோரா, தனக்குள்ளே பாடிக்கொண்டு, உற்சாகத்துடன் வருகிறாள். அவள், வெளியே போகும்பொழுது அணியும் ஆடைகளுடன் இருக்கிறாள். அவள் கையில் பல பொட்டலங்கள் இருக் கின்றன; அவைகளை வலது புற மிருக்கும் மேஜைமேல் வைக்கிறாள். தான் உள்ளே வந்ததும் அவள் வெளிக் கதவைத் திறந்தபடியே வைத்துவிட்டு வருகிறாள். திறந்த கதவு வழியாகக் கூலியாள் ஒருவன் ஒரு கிறிஸ்துமஸ் மரத்தையும் ஒரு கூடையையும் வேலைக்காரியிடம் கொடுப் பது தெரிகிறது.]

நோரா—கிறிஸ்துமஸ் மரத்தை ஜாக்கிரதையாக மறைத்து வை, ஹெலன். அதைத் தயார் செய்யும் வரையில், இன்று சாயங்காலம் வரையிலாவது, அது குழந்தைகள் கண்ணில் படாம லிருக்கவேணும். (தன் மணி பர் ஸைக் கையில் எடுத்துக்கொண்டு, கூலியாளை நோக்கி) எவ்வளவு?

கூலியாள்—ஆறு பென்ஸ்.

நோரா—இந்தா, இதோ ஒரு ஷில்லிங். வேண்டாம், சில்லறையை நீயே வைத்துக்கொள்.

(கூலியாள் தன் வந்தனத்தைத் தெரிவித்துவிட்டு வெளியேறு கிறான். நோரா கதவை மூடுகிறாள். தன் தொப்பியையும் கோட்டையும் கழற்றும்போது தனக்குள்ளேயே மெதுவாகச் சிரித்துக் கொண்டிருக்கிறாள். தன் கைப் பையிலிருந்து ஒரு பொட்டலம் மிட்டாயை எடுத்து ஒன்றிரண்டு சாப்பிடு கிறாள். அப்புறம் தன் கணவன் அறைப் பக்கம் போய் ஜாக்கிரதையாகக் கதவண்டை நின்று உற்றுக் கேட்கிறாள்.)

நோரா—ஆம், உள்ளேதான் இருக்கிறார்.

(பாடிக்கொண்டே வலதுபுறம் மேஜையண்டை பேருகிறாள்.)

ஹெல்மர்—(தன் அறையிலிருந்தபடியே) என்னுடைய குயில் தானு அங்கே ஆலாபனம் பண்ணிக்கொண்டிருப்பது?

நோரா—(சுறுசுறுப்பாகச் சில பொட்டலங்களைப் பிரித்துக் கொண்டே) ஆமாம்!

ஹெல்மர்—என்னுடைய சின்ன அணில்தானு அங்கே அப்படிக் குறுக்கும் நெடுக்கும் ஓடுவது?

நோரா—ஆம்.

ஹெல்மர்—எப்போ என் அணில் குஞ்சு வீட்டுக்கு வந்துது?

நோரா—இப்போதான். (மிட்டாய்ப் பொட்டலத்தைப் பையில் போட்டுப் பத்திரப்படுத்திவிட்டு, தன் வாயையும் துடைத்துக்கொள்ளுகிறுள்.) இங்கே வாயேன், தார்வால்ட், நான் என்ன வாங்கி வந்திருக்கிறேன், பார்.

ஹெல்மர்—என்னை இப்போ தொந்தரவு பண்ணுதே. (சற்று நேரங் கழித்து, கையில் பேனுவுடன் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே எட்டிப் பார்க்கிருன்.) வாங்கினதாகவா சொன்னுய்? இத்தனையுமா? என் ஊதாரிக் குட்டி மறுபடியுங் கையிலிருந்த பணம் எல்லாவற்றையும் ஆழும் பாழு மாக்கிவிட்டதா?

நோரா—ஆமாம். ஆனுல், தர்வால்ட், நாம் இந்தத் தடவை நம் மிஷ்டப்படி செலவழிக்கலா மல்லவா? நாம் செட்டாக இருக்கவேண்டிய அவசியமில்லாத முதல் கிறிஸ்துமஸ் இதுதானே?

ஹெல்மர்—இருந்தாலும் பணத்தை வாரியிறைத்து வீணுக்க வேண்டிய அவசியம் என்ன?

நோரா—இனிமேல் நாம் கொஞ்சந் தாராளமாக இருக்கலாமில்லையா? ரொம்பத் தாராளமாக வேண்டாம்; கொஞ்சந் தாராளமாக இருக்கலாம் இல்லையா? உனக்குத்தான்

பெரிய சம்பளம் வரப்போகிறது: ரொம்ப ரொம்பப் பணம் சம்பாதிக்கப் போகிறாயே!

ஹெல்மர்—ஆம்: அது புது வருஷத்தில்தானே. அதுவும் மூன்று மாதங் கழித்துத்தானே சம்பளம் வரும்.

நோரா—பூ! அதனாலென்ன? அதுவரையில் செலவுக்கு ஏதாவது கடன் வாங்கிக்கொண்டால் போச்சு.

ஹெல்மர்—நோரா! (அவளருகில் போய் விளையாட்டாக அவள் காதைப் பிடிக்கிறான்.) இன்னமும் பழைய படியே மூளையில்லாதவளாகவேதான் இருக்கிறாயா நீ? யோசித்துப் பார். இன்று நான் ஐம்பது பவுன் கடன் வாங்கி விடுகிறேன்; கிறிஸ்துமஸ் வாரத்தில் நீ அதை யெல்லாம் செலவழித்துவிடுகிறாய்; புது வருஷத்துக்கு முதல் நாள் என் தலையில் ஒரு ஓடு விழுந்து என் உயிர் போய்விட்டால்—

நோரா—(அவன் வாயைத் தன் கையால் பொத்திக்கொண்டு) ஓ! அந்த மாதிரிப் பயங்கரமாக ஒன்றுஞ் சொல்லாதே!

ஹெல்மர்—அப்படி நடந்தது என்று வைத்துக்கொள். அப்போ?

நோரா—அப்படி நடந்துவிட்டால், நான் கடனுளியா இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப் படமாட்டேன் என்றேதான் நினைக்கிறேன்.

ஹெல்மர்—அது சரி! ஆனால் கடன் கொடுத்தவர்கள்?

நோரா—யார்? அவர்களைப் பற்றி நான் என்னத்துக்குக் கவலைப்படணும்? அவர்கள் யார் என்றுகூட எனக்குத் தெரியாதே!

ஹெல்மர்—பொம்மனாட்டிப் பேச்சுத்தான் அது! ஆனால், நோரா, நிஜமாகவே நான் அதைப் பற்றி என்ன நினைக்

கிறேன் தெரியுமோல்லியோ உனக்கு? கடன் வாங்கக் கூடாது. என்றும் கடன் படவே கூடாது. கடனாளியின் வீட்டு வாழ்விலே சுயேச்சை யில்லை, சுகம் இல்லை, அழ கில்லை. இதுவரையில் இருவரும் நேர் வழியில் தைரிய மாக நடந்தாய்விட்டது: இன்னும் கொஞ்ச நாட்கள் தானே கஷ்டப்பட வேண்டியிருக்கும்: இந்த நாட்களி லும் நாம் நேர் வழியிலேயே நடப்போம்.

நோரா—(கணப்புப் பக்கம் நகர்ந்துகொண்டு) உன்னிஷ்டம், தார்வால்ட்.

ஹெல்மர்—(அவளைப் பின்தொடர்ந்து கொண்டே) வா, வா. என் சின்னக் குயில் அதன் இறக்கைகளை ஒடித்துக் கொள்ளக் கூடாது. இது என்ன இது? என் அணில் குஞ்சுக்குக் கோபம் வந்துவிட்டதா? (தன் பர்ஸை எடுத்துக் கொண்டு) நோரா, இதில் என்ன வைத்திருக் கிறேன், தெரியுமா?

நோரா—(அவசரமாகத் திரும்பி) பணம்!

ஹெல்மர்—இந்தா, (அவளிடம் கொஞ்சம் பணம் கொடுக் கிறான்) கிறிஸ்துமஸ் காலத்தில் வீட்டுச் செலவுக்கு நிறையப் பணம் வேணுமென்று எனக்குத் தெரியாது என்று நினைக்கிறாயா நீ?

நோரா—(பணத்தை எண்ணிக்கொண்டு) பத்து ஷில்லிங்-ஒரு பவுன்—இரண்டு—இரண்டு பவுன்! வந்தனம், ரொம்ப வந்தனம், தார்வால்ட்! இது எனக்கு ரொம்ப நாளைக்கு வருமே!

ஹெல்மர்—வரத்தான் வேணும்.

நோரா—வரும், வரும். இங்கு வாயேன், தார்வால்ட். நான் என்னென்ன வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன் என்று

காட்டுகிறேன். எல்லாம் கொள்ளை மலிவு. இதோ பார், ஐவருக்கு ஒரு புது ஸூட்டும் ஒரு கத்தியும்; பாபுக்கு ஒரு குதிரையும் ஊதலும்; எம்மிக்கு ஒரு பொம்மையும், பொம்மைக்கு ஒரு படுக்கையும்—இந்த இரண்டும் நன்ருகத்தான் இல்லை: ஆனால் அவள் எல்லாத்தையும் அதி சீக்கிரம் பிச்சு எறிந்து விடுவாள்! இதோ வேலைக்காரிக்குச் சீட்டித் துணியும், கைக்குட்டைகளும்: ஆன் கிழவிக்கு நல்லதாக ஏதாவது கொடுக்கணும்.

ஹெல்மர்—இந்தப் பொட்டலத்தில் என்ன இருக்கிறது?

நோரா—(இரைந்து) வேண்டாம், வேண்டாம். அதைப் பிரிக்காதே தார்வால்ட். இன்று சாயங்காலம் வரையில் நீ அதைப் பார்க்கக் கூடாது.

ஹெல்மர்—அப்போ சரி, ஆனால் என்னிடம் சொல்லு, ஊதாரிக் குட்டி, உனக்கு என்ன வேணும்?

நோரா—எனக்கா? ஓ! எனக்கு ஒண்ணும் வேண்டாம்.

ஹெல்மர்—சரி, ஆனால் நீயும் ஏதாவது வாங்கிக்கொள்ள வேணு மோல்லியோ? உனக்குப் பிரியமானதைச் சொல்லு—அதிக விலையில்லாததாக—நான்...

நோரா—வேண்டாம். எனக்கு என்ன வேணும்? ஒண்ணும் வேண்டாம். ஆனால், தார்வால்ட்...

ஹெல்மர்—என்ன?

நோரா—(அவன் சட்டைப் பொத்தான்களை நிமிட்டிக் கொண்டு, அவனை நேரே நிமிர்ந்து பார்க்காமல்) எனக்கு ஏதாவது கொடுக்கணு மென்று உனக்கு உண்மையிலேயே மனமிருந்தால், நீ...நீ...நீ...

ஹெல்மர்—என்னதான் வேணும், சொல்லேன்.

நோரா—(வேகமாக) நீ எனக்குப் பணமாகக் கொடுத்துவிடு, தார்வால்ட், எவ்வளவு உன்னால் இப்போ கொடுக்க முடியுமோ அவ்வளவும் கொடுத்துவிடு. அப்புறம் நான் என்னிக்காவது எனக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ளுகிறேன்.

ஹெல்மர்—ஆனால், நோரா......

நோரா—ஆட்சேபம் சொல்லாதே, தார்வால்ட். கொடு. தயவு செய்து பணமாகவே கொடுத்துவிடு. அதை நான் அழகான கில்ட் காகிதத்தில் சுற்றி கிறிஸ்துமஸ் மரத்தில் தொங்கவிடுகிறேன். வேடிக்கையாக இருக்கும்.

ஹெல்மர்—எப்போ பார்த்தாலும் பணத்தை விரயம் பண்ணிக் கொண்டிருப்பவர்களுடைய பெயர் தெரியுமோ உனக்கு ?

நோரா—ஊதாரிகள்—தெரியும். ஆனால் நீ சொல்லுகிற படியே செய்யலாம், தார்வால்ட். எனக்கு எது ரொம்பப் பிடித்த வஸ்து என்று தீர்மானித்து வாங்க எனக்குச் சாவகாசமும் இருக்கும். அது சரியான யுக்திதான், இல்லையா ?

ஹெல்மர்—(சிரித்துக்கொண்டு) நிஜமாகவே நல்ல யுக்தி தான்—அதாவது நான் கொடுக்கும் பணத்தை நீ ஜாக்கிரதையாக வைத்திருந்து உனக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டால் சரிதான். ஆனால் நீ அதெல்லாத்தையும் வீட்டுச் செலவுக்கும், வேண்டாத சாமான்கள் வாங்கவும் செலவிட்டுவிட்டு, என்னை மறுபடியும் பணம் கேட்பாய், அவ்வளவுதான்.

நோரா—ஆனால், தார்வால்ட்...

ஹெல்மர்—இதை உன்னால் மறுக்க முடியாது, என் அருமை நோரா. (அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு) இது

ஒரு அருமையான சிறிய ஊதாரிக் குட்டி. என்ன பணந்தான் செலவழிக்கிறாள் இவள்! இவ்வளவு சின்ன வள் இப்படி அள்ளிச் செலவழிக்கிறாள் என்று நம்புவது கூடக் கஷ்டம்.

நோரா—அப்படி யெல்லாம் சொல்லாதே. நான் என்னால் முடிந்தவரையில் செலவை மட்டுப்படுத்திக்கொண்டு செட்டாக மீதப்படுத்தி வைக்கத்தான் பார்க்கிறேன்.

ஹெல்மர்—(சிரித்துக்கொண்டு) அதுவும் நிஜந்தான். உன் னால் கூடியவரையில் சேர்த்து வைக்கத்தான் பார்க்கி றாய். ஆனால் உன்னால் ஒன்றும் மிச்சப்படுத்தவே முடியவில்லையே!

நோரா—(அமைதியாயும் சந்தோஷமாயும் புன்சிரிப்புச் சிரித்து) குயில்களும் அணில்களுமாகிய எங்களுக்கு எத்தனை செலவுகள் இருக்கின்றன என்று உனக்குத் தெரியாது, தார்வால்ட்.

ஹெல்மர்—நீ விசித்திரமான சின்னஞ் சிறுசா யிருக்கிறாய், நோரா. நீயும் உங்கப்பாவைப் போலத்தான். என்னிட மிருந்து பணம் பிடுங்க நீ புதிது புதிதாக எவ்வளவு வழிகள் கண்டுபிடிக்கிறாய்? உன் கையில் பணம் வந்த தோல்லியோ, அது உடனே மாயமாகக் கரைந்து விடுகிறது. அது எங்கே போச்சு என்று எனக்கே தெரியவில்லை. ஊதாரித்தனம் உன் ரத்தத்தில் ஊறிக் கிடக்கிறது: நிஜமாகவே அதெல்லாம் தந்தையிட மிருந்து மகளுக்கு என்று தலைமுறை தலைமுறையாக வருவதுதான்.

நோரா—அப்பாவின் பாக்கிக் குணங்களையும் நான் பெற் றிருக்கக் கூடாதா என்று நான் எண்ணி ஆசைப்படு கிறேன்.

ஹெல்மர்—என் இன்பக் குயிலே! நீ இப்போது இருக்கிற படியே இருக்கவேணு மென்பதுதான் என் விருப்பம். ஆனால் உனக்குத் தெரியுமோ, உன்னைப் பார்த்தால் நீ ஏதோ—அதை எப்படிச் சொல்வது?—நீ என்னமோ சந்தோஷமில்லாமல் இருக்கிறதுபோல் காண்கிறாயே!

நோரா—நிஜமாகவா?

ஹெல்மர்—நிஜமாகத்தான். இதோ பார், என்னை நேரே நிமிர்ந்து பார்.

நோரா—(நிமிர்ந்து அவனைப் பார்த்துக்கொண்டு) என்ன?

ஹெல்மர்—(அவளைப் பார்த்து விரலை யாட்டிக்கொண்டே) இன்று கடைத் தெருவில் மிட்டாய்க்காரி (நீ) என் விதிகளை மீறி நடக்கவில்லையா?

நோரா—இல்லையே! உனக்கேன் அப்படித் தோணுகிறது.

ஹெல்மர்—இன்று நீ மிட்டாய்க் கடைக்குப் போகவில்லையா?

நோரா—இல்லவே இல்லை, தார்வால்ட்...

ஹெல்மர்—நீ மிட்டாய் வாங்கித் தின்னவில்லை?

நோரா—இல்லை, நிச்சயமாக இல்லை.

ஹெல்மர்—ஒன்றிரண்டு மிட்டாய்கூடக் கடித்துப் பார்க்கவில்லையா?

நோரா—இல்லை, தார்வால்ட்! நிஜமா சொல்லுகிறேன்; இல்லவே யில்லை.

ஹெல்மர்—அப்போ சரி. நானும் விளையாட்டுக்குத்தான் சொன்னேன்.

நோரா—(வலது புறம் மேஜையண்டை போய்க்கொண்டு) நீ சொல்லுவதற்கு மாறாக நான் நினைப்பேனா?

ஹெல்மர்—அப்படி நடக்க மாட்டா யென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்; தவிரவும் இனிமேல் வில்லை சாப்பிடுவதில்லை என்றுதான் எனக்கு வாக்களித்திருக்கிறுயே! (அவள் அருகில் போய்) உன் கிறிஸ்துமஸ் மரத்துக்கு விளக்கேற்றும் போது எல்லாம் தானே தெரிந்துவிடும்.

நோரா—டாக்டர் ராங்கை அழைக்க உனக்கு ஞாபகம் இருந்ததோ?

ஹெல்மர்—இல்லை, ஆனல் அழைக்க வேணுமென்று அவசியமில்லை; வழக்கப்படி அவர் நம்மோடு சாப்பிட வருவார். எதற்கும் இன்று காலை வரும்போது சொல்லி விடுகிறேன். நல்ல மதுவாகக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். நான் இன்று இரவை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் என்று உனக்குத் தெரியாது, நோரா!

நோரா—எனக்கு மட்டும் ஆவலில்லையோ? குழந்தைகள் எவ்வளவு சந்தோஷப்படும், தார்வால்ட்?

ஹெல்மர்—நிரந்தரமான வேலையும் தக்க சம்பளமும் இருக்கிறது என்ற நிச்சயத்தைப் போல் வேறு பெருமை உலகில் இல்லை. அதை எண்ணிப் பார்ப்பதற்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது! இல்லையா?

நோரா—நிஜந்தான்.

ஹெல்மர்—போன வருஷ கிறிஸ்துமஸ் ஞாபகமிருக்கிறதா உனக்கு? ஒவ்வொரு நாளும் இரவு பனிரண்டு மணி வரையில் கதவைச் சாத்திக்கொண்டு யார் கண்ணிலும் படாமல் மூணு வாரம் கிறிஸ்துமஸ் மரத்துக்கு அலங்காரங்கள் தயார் செய்துகொண்டிருந்தா யல்லவா? அந்த மூன்று வாரங்களிலும் எனக்குப் பொழுதே போகவில்லை.

நோரா—எனக்கு அப்படி யில்லையே!

ஹெல்மர்—(சிரித்துக்கொண்டே) அவ்வளவு சிரமப்பட்டுக் கண்ட பயன் என்ன, நோரா?

நோரா—நீ அதைப் பற்றி இன்னமும் என்னைப் பரிகாசஞ் செய்துகொண்டிருக்கக் கூடாது. பூனை உள்ளே போய் நான் கிறிஸ்துமஸ் மரத்துக்குச் செய்திருந்த அலங் காரங்களை யெல்லாம் அலங்கோலம் பண்ணிவிடும் என்று கண்டேனா? அதை நான் எப்படித் தடுத்திருக்க முடியும்?

ஹெல்மர்—வாஸ்தவந்தான்; உன்னால் அதைத் தடுத்திருக்க முடியாது. எங்கள் எல்லோரையும் மகிழ்விக்கவேணு மென்ற உன் எண்ணம் நல்லெண்ணம்தான்; இல்லை யென்று சொல்ல முடியுமா? ஆனால் நம் கஷ்டகால மெல் லாம் நீங்கி விட்டது என்பது சந்தோஷப்படவேண்டிய விஷய மில்லையா?

நோரா—நிஜந்தான்: அதை நினைத்தால் ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

ஹெல்மர்—இந்தத் தடவை இரவெல்லாம் நான் தனியாக உட்கார்ந்துகொண்டு கஷ்டப்படவேண்டாம். நீயும் உன் கண்ணைக் கெடுத்துக்கொண்டு, உன் அழகிய சிறு கைகள் வலிக்க......

நோரா—(கையைக் கொட்டிக்கொண்டு) வேண்டியதில்லை, தார்வால்ட்: நான் இனிமேல் அது மாதிரி யெல்லாம் கஷ்டப்பட வேண்டியதில்லை. நீ அதைச் சொல்வதைக் கேட்கச் சந்தோஷமாகவும் ஆச்சரியமாகவும் இருக் கிறது. (அவன் கையைப் பிடித்துக்கொண்டு) நாம் எல்லாவற்றையும் எப்படி ஏற்பாடு செய்ய வேணும் என்று யோசித்திருக்கிறேன் என்பதை இப்போ

சொல்லுகிறேன், கேள். கிறிஸ்துமஸ் ஆனதும்—(கூடத்தில் மணி யடிக்கிறது.) கூடத்து மணி யடிக்கிறது. (அறையை ஒழுங்குபடுத்திக் கொண்டே) வாசலில் யாரோ வந்திருக்கிறார்கள். என்ன தொந்தரவு!

ஹெல்மர்—யாராவது என்னைத் தேடிக்கொண்டு வந்திருந்தால் நான் 'வீட்டிலில்லை' என்பது ஞாபகமிருக்கட்டும்.

வேலைக்காரி—(நிலைப்படியில் நின்றுகொண்டு) அம்மா, உங்களைப் பார்க்க ஒரு ஸ்திரீ வந்திருக்கிறாள்: யாரோ புதுசாக இருக்கிறது.

நோரா—உள்ளே வரச் சொல்லு.

வேலைக்காரி—(ஹெல்மரிடம்) அதே சமயம் டாக்டரும் வந்தார், ஸார்.

ஹெல்மர்—நேரே என் அறைக்குள் போனாரா?

வேலைக்காரி—ஆம்.

(ஹெல்மர் தன் அறைக்குள் போகிறான். வேலைக்காரி, பிரயாண ஆடைகள் அணிந்திருக்கும் மிஸிஸ் லிண்டேயை உள்ளே அழைத்துக்கொண்டு வந்து விட்டுவிட்டு, கதவைச் சாத்துகிறாள்.)

மிஸிஸ் லிண்டே—(துக்ககரமான மெல்லிய குரலில்) சௌக்யமா, நோரா?

நோரா—(சந்தேகமாய்) சௌக்யமா?

லிண்டே—என்னைத் தெரியவில்லை என்று நினைக்கிறேன்.

நோரா—இல்லை: எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக...... இருந்தாலும் தெரிஞ்சாப்போலேதான் இருக்கு! (திடீரென்று) ஆமாம், கிறிஸ்டினா! நிஜமாகவே கிறிஸ்டின் தானே நீ?

லிண்டே—ஆம்: நான்தான்.

நோரா—கிறிஸ்டின்! உன்னை நான் முதலில் தெரிந்துகொள்ளாதிருந்தது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? (மிருதுவான இரக்கமுள்ள குரலில்) அடையாளமே தெரியாமல் நீ எவ்வளவு மாறியிருக்கிறாய், கிறிஸ்டின்?

லிண்டே—நான் மாறித்தான் இருக்கிறேன். ஒன்பது, பத்து வருஷங்களில்......

நோரா—நாம் சந்தித்து அத்தனை வருஷங்கள் ஆய்விட்டதா? ஆகிவிட்டது போலத்தான் இருக்கிறது. சென்ற எட்டு வருஷங்கள் எனக்கு ரொம்ப இன்பமாகக் கழிந்துவிட்டன, கிறிஸ்டின். நீயும் இப்போது நகரத்துக்கு வந்துவிட்டாயா?—இவ்வளவு தூரம் இந்தக் கடுங் குளிரில் துணிந்து வந்திருக்கிறாயே!

லிண்டே—இன்று காலைதான் கப்பலில் வந்தேன்.

நோரா—கிறிஸ்துமஸ் சமயம் பட்டணத்திலிருந்து ஆனந்திக்கத்தானே? அதுதான் சரி. எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமோ? நாம் இரண்டு பேருமாக உல்லாசமாக இருக்கலாம். உன் சட்டையெல்லாம் கழட்டிவிடேன். ரொம்பக் குளிராக இருக்கிறதோ? இல்லையே? (அவள் சட்டையைக் கழட்டிவிடுகிறாள்) இப்போ கணப்புக் கிட்ட உட்காருவோம். சௌக்யமாக இருக்கும்; நீ இந்த ஈஸிசேரில் உட்கார்ந்துகொள். நான் இதில் உட்காருகிறேன். (அவள் கையைப் பிடித்துக்கொண்டு) இப்போ பார்த்தால்தான் பழைய கிறிஸ்டின் மாதிரி இருக்கிறது. இருந்தாலும் எனக்கு முதலில்—நீ முன்னைவிட இப்போது வெளுத்திருக்கிறாய்: கொஞ்சம் இளைத்தும் போயிருக்கிறாய்.

லிண்டே—நான் ரொம்ப ரொம்பக் கிழமாகிவிட்டேன், நோரா.

நோரா—ஏதோ கொஞ்சம் வயதானதாகத் தெரிகிறது; ரொம்பக் கொஞ்சந்தான். அப்படி ரொம்பக் கிழமாகவில்லை; (திடீரென்று விளையாட்டுப் பேச்சை நிறுத்திவிட்டு) எனக்கு மூளையே கிடையாது, கிறிஸ்டின்: இதுமாதிரி சளசளவென்று பேசிக்கொண்டே யிருக்கிறேன். என் அருமைக் கிறிஸ்டின், என்னை மன்னிப்பாயா நீ?

லிண்டே—என்ன நோரா இது?

நோரா—(இரக்கமாக) பாவம்: கிறிஸ்டின்: நீ இப்போ ஒரு விதவையாய்ப் போனாயே!

லிண்டே—ஆம்: என் புருஷன் போய் மூன்று வருஷம் ஆய்விட்டதே.

நோரா—ஆமாம், தெரியும். பத்திரிகையில் பார்த்தேன். அந்தச் சமயம் உனக்கு எழுதணும் எழுதணும் என்று எண்ணிக்கொண்டே யிருந்தேன். என்னவோ எழுதாமலே இருந்துவிட்டேன். ஏதேனும் ஒன்று எழுதவொட்டாமல் குறுக்கிட்டுக்கொண்டே யிருந்தது.

லிண்டே—அதனாலென்ன? பாதகமில்லை.

நோரா—நான் அப்படி இருந்திருக்கலாமா, கிறிஸ்டின்! பாவம், நீ எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாய். உன் கணவன் உனக்கு ஒன்றுமே வைத்துவிட்டுப் போகவில்லையாமே!

லிண்டே—இல்லை.

நோரா—குழந்தை குட்டிகளு மில்லையா?

லிண்டே—இல்லை.

நோரா—அப்படியானால் ஒன்றுமே யில்லையா?

லிண்டே—நெஞ்சிலே போற்றி வளர்க்க ஒரு துன்பம், ஒரு குறைகூட வைத்துவிட்டுப் போகவில்லை.

நோரா—(நம்பிக்கையின்றி அவளைப் பார்த்துக்கொண்டு) அப்படியும் இருக்க முடியுமோ?

லிண்டே—(துக்கங் கலந்த புன்சிரிப்புடன் அவள் தலைமயிரைத் தடவிக்கொண்டு) நோரா, சில சமயம் அப்படியும் நடக்கிறது.

நோரா—ஆகவே நீ ஒண்டியாக இருக்கிறாய்: தனிமையாயிருப்பது எவ்வளவு பயங்கரமான துயரம்? எனக்கு மூன்று அழகான குழந்தைகள் இருக்கிறார்கள். தாதியுடன் வெளியே போயிருப்பதால் இப்போ நீ அவர்களைப் பார்க்க முடியாது...ஆனால் இப்போ உன்னைப் பற்றிய விஷயங்கள் எல்லாவற்றையுஞ் சொல்லு.

லிண்டே—இல்லை, இல்லை: உன்னைப் பற்றித்தான் நான் அறிய விரும்புகிறேன்.

நோரா—இல்லை, நீதான் ஆரம்பிக்க வேண்டும். நான் இன்று என்னைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கக் கூடாது. உன் விஷயங்களை மட்டுந்தான் பேசவேணும். ஆனால் ஒன்று மாத்திரம் உனக்கு நான் சொல்ல வேண்டும். இப்போது எங்களுக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டம் வந்திருக்கிறது, உனக்குத் தெரியுமோ?

லிண்டே—தெரியாதே, அது என்னது?

நோரா—தெரியாதா? என் கணவர் பாங்கி மானேஜராக்கப்பட்டிருக்கிறார்!

லிண்டே—உன் கணவரா? தேவலையே: நல்ல அதிர்ஷ்டந்தான்!

நோரா—ஆம்: ரொம்ப அதிர்ஷ்டந்தான்: பாரிஸ்டர் உத்தியோகம் எப்பவுமே அவலப் பிழைப்புத்தான். அதுவும்

இவரைப் போல் தன் மனத்திற்குப் பிடிக்காத கேஸ்களை வாங்காம லிருப்பவர்களுக்கு ...... தார்வால்டின் நல்ல குணத்தைப் பற்றி நான் குறை கூறவில்லை. ஆனால் ......இந்த வேலை அவருக்குக் கிடைத்தது பற்றி எங்கள் சந்தோஷம் சொல்லி முடியாது. புது வருஷத்தி லிருந்து பாங்கி வேலையை ஒப்புக்கொள்ள வேண்டும். பிறகு நிறையச் சம்பளமும் ஏகப்பட்ட கமிஷனும் கிடைக்கும். இனிமேல் நாங்கள் வேறு தினுசாக வாழலாம்—எங்கள் இஷ்டப்படி செய்யலாம். எனக்கு ஏதோ பாரம் நீங்கினது போலவும், சந்தோஷமாகவும் இருக்கிறது, கிறிஸ்டின். கவலை யில்லாமல், கை நிறையப் பணமும் இருப்பது எவ்வளவு நேர்த்தியாக விருக்கும்?

லிண்டே—ஆமாம். நமக்கு வேண்டியது இருந்துவிட்டால் சந்தோஷமாகத்தா னிருக்கும்.

நோரா—வேண்டியது மட்டுமில்லை: அதற்கு மேலும் குவியல் குவியலாகப் பண மிருக்கும்.

லிண்டே—(புன்சிரிப்புடன்) நோரா! நோரா! உனக்கு இன்னமும் புத்தி வரவில்லையா? நாம் பள்ளிக்கூடத்தில் இருக்கும் போதும் நீ ரொம்ப ஊதாரியாகத்தான் இருந்தாய்.

நோரா—(சிரித்துக்கொண்டு) ஆம்: இப்போ தார்வால்டும் அப்படித்தான் சொல்லுகிறார். (தன்னைச் சுட்டிக் காட்டிக்கொண்டு) ஆனால் 'இந்த நோரா' ஒன்றும் நீ நினைக்கிறபடி அவ்வளவு அசடில்லை. நாங்கள் பணத்தை வீணுக்கக் கூடிய நிலைமையி லில்லை. நாங்கள் இருவருமே உழைக்கவேண்டித்தான் இருந்தது.

லிண்டே—நீ கூடவா?

நோரா—ஆம், நான் கூடத்தான். ஏதாவது சில்லறையாகத் தையல், பூப்போடுகிறது, பின்னல் இது மாதிரி வேலைகள். (குரலைத் தாழ்த்திக்கொண்டு) இன்னும் வேறு வேலைகளும்கூடப் பார்த்தேன். நாங்கள் கலியாணம் செய்துகொண்ட பொழுது தார்வால்ட் ஆபீஸ் வேலையை விட்டுவிட்டது தெரியுமோல்லியோ உனக்கு ? அங்கே சம்பள உயர்வு ஒன்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. அவர் ஆபீஸை விட்டு வெளிவந்ததும் அதிகமாகச் சம்பாதிக்க ஏற்பாடு செய்ய முயற்சித்தார். அதனால் முதல் வருஷம் ரொம்ப அதிகமாக வேலை செய்து உடம்பை அலட்டிக்கொண்டு விட்டார். எப்படியாவது நிறையச் சம்பாதிக்க வேண்டுமே யென்று இரவு பகல் பார்க்காமல் உயிரைக் கொடுத்து வேலை செய்தார். அது தாங்கவில்லை. உடம்புக்குப் பெரிய நோயாய் வந்துவிட்டது. டாக்டர்கள் அவர் கொஞ்ச நாள் தெற்கே போய் இருந்துவிட்டு வந்தால்தான் உடம்பு தேறும் என்று சொல்லிவிட்டார்கள்.

லிண்டே—நீங்கள் ஒரு வருஷம் முழுவதும் இதாலியிலே போயிருந்தீர்கள் அல்லவா ?

நோரா—ஆம், கிளம்புவது சுலபமாகவா இருந்தது ? ரொம்பக் கஷ்டமென்றுதான் சொல்லுவேன். அது ஐவர் பிறந்த சமயம். ஆனால் எப்படியும் போகத்தான் வேணும் என்று இருந்தது. பிரயாணத்தைப் பற்றிய மட்டில் அழகாகத்தா னிருந்தது; அதுதான் தார்வால்டின் உயிரையும் காப்பாற்றியது. ஆனால், கிறிஸ்டின், ஏகப்பட்ட பணம் செலவாகி விட்டது.

லிண்டே—ஆயிருக்கும்.

நோரா—கிட்டத்தட்ட இருநூற்றைம்பது பவுன் ஆகிவிட்டது. அது பெரிய தொகையில்லையா?

லிண்டே—ஆமாம், ஆனால் சமயத்துக்கு அந்தப் பணம் இருந்ததே பெரிதில்லையா?

நோரா—அந்தப் பணமெல்லாம் என்னுடைய அப்பாவிடமிருந்து வந்தது என்பதை உனக்குச் சொல்லித் தீர வேண்டும்.

லிண்டே—ஓ, அப்படியா? அவர் சாகக் கிடந்த சமயம் இல்லையா அது!

நோரா—ஆம்; நான் போய் அவருக்கருகில் இருக்கக்கூட முடியவில்லையென்பதை நினைத்துப் பார். ஐவர் இன்றோ நாளையோ பிறந்து விடுவான் என்று ஒவ்வொரு நாளும் நான் எதிர்பார்த்திருந்தேன். தவிரவும், சீக்காயிருந்த தார்வால்டையும் பார்க்கவேண்டியிருந்தது. என் அருமை அப்பாவை நான் அதற்கப்புறம் பார்க்கவேயில்லை, கிறிஸ்டின். எனக்குக் கலியாணமான பிறகு எனக்கு மகா துக்ககரமான காலம் அதுதான்.

லிண்டே—உங்கப்பாவிடம் உனக்கு எவ்வளவு பிரியம் என்று எனக்கு நன்றாகத் தெரியுமே! அதற்கப்புறம் நீ இதாலிக்குக் கிளம்பிவிட்டாயாக்கும்.

நோரா—ஆம். அப்போது கையில் பணமும் இருந்தது. டாக்டர்களும் போய்த்தான் ஆகவேணுமென்று கட்டாயமாகச் சொல்லிவிட்டார்கள். அதற்கப்புறம் ஒரு மாதம் கழித்துக் கிளம்பிவிட்டோம்.

லிண்டே—அங்கே போய்விட்டு வந்ததில் உன் கணவருக்கு உடம்பு நன்றாகத் தேறிவிட்டதா?

நோரா—ஓ, நன்றாகக் குணமாகிவிட்டது! திரும்பி வந்த பிறகு அவருக்கு ஒருவித உபாதையும் இல்லை...

லிண்டே—ஆனால்...அந்த டாக்டர்?

நோரா—எந்த டாக்டர்?

லிண்டே—நான் வந்தபோது யாரோ வந்திருக்கிறார் என்று சொன்னாளே வேலைக்காரி, அவர்தானே டாக்டர்?

நோரா—ஓ, அவரா? அவர் டாக்டர் ராங்க். அவர் இங்கு டாக்டர் என்ற ஹோதாவில் வருகிறவ ரில்லை. எங்களுடைய ஆப்த சிநேகிதர் அவர்; தினம் ஒரு தரமாவது எங்களை வந்து பார்க்காமல் இருக்க மாட்டார். இல்லை, அதற்கப்புறம் ஒரு நாளாவது தார்வால்ட் உடம்பு சரியாக இல்லை என்று படுத்துக் கொண்டதே கிடையாது. என் குழந்தைகளும் திடமாக இருக்கிறார் கள். நானும் சௌக்கியமாகத்தான் இருக்கிறேன். (எழுந்திருந்து இரண்டு முறை குதித்துவிட்டு, கையைக் கொட்டிக் கொண்டு) கிறிஸ்டின்! கிறிஸ்டின்! நோய் நொடியில்லாமல் சந்தோஷமாக வாழ்வதைப் போல ஆனந்தம் வேறு என்ன இருக்கிறது? ஆனால் என்ன அசட்டுத்தனம்! நான் சும்மா என்னைப் பற்றியே பேசிக்கொண் டிருக்கிறேனே! (மிஸிஸ் லிண்டேக்குப் பக்கத்தில் ஒரு ஸ்டூல் மேல் உட்கார்ந்து அவள் முழங் கால்கள் மேல் கையை வைத்தபடி) நீ என்னிடம் கோபித்துக்கொள்ளக் கூடாது. சொல்லு: நிஜந்தானா? நீ உன் கணவரைக் காதலிக்க வில்லையாமே? காதலின்றி நீ ஏன் அவரைக் கலியாணஞ் செய்து கொண்டாய்?

லிண்டே—அப்பொழுது என் அம்மா உயிருட னிருந்தாள். எழுந்திருக்க மாட்டாமல் வியாதியாய்ப் படுத்த படுக்கை

யாகக் கிடந்தாள். நானே என்னுடைய இரண்டு தம்பிகளேயும் வைத்துக் காப்பாற்ற வேண்டியிருந்தது. ஆகையால்தான் அவர் என்னைக் கலியாணஞ் செய்து கொள்ளுவதாய்ச் சொன்னவுடன் அதைத் தட்டிவிடுவது சரியில்லை யென்று எனக்குத் தோன்றிற்று.

நோரா—இல்லை, நீ செய்ததும் சரியாக இருக்கலாம். அப்படியானல் அப்போது அவரிடம் நிறையப் பண மிருந்ததா?

லிண்டே—நல்ல ஸ்திதியில் இருந்தார் என்றே நம்புகிறேன். ஆனல் அவருடைய தொழில் நிலையற்ற வியாபாரம். அவர் இறந்ததும் எல்லாம் போய்விட்டது; ஒன்றும் மிச்சமே யில்லை.

நோரா—அப்புறம்?

லிண்டே—என்ன வேலை கிடைத்ததோ அதைச் செய்து சம்பாதித்தேன்—முதலில் ஒரு சின்னக் கடை. அப்புறம் ஒரு சின்னப் பள்ளிக்கூடம்; இப்படி யெல்லாம் பலவிடங்களில் வேலை செய்து சம்பாதித்தேன். சென்ற மூனு வருஷமும் ஓய்வொழிவில்லாத ஒரே வேலை நாளாகத் தோன்றுகிறது. இப்பொழுது எல்லாம் முடிந்துவிட்டது, நோரா. என் தாயார் இறந்துவிட்டாள். அவளுக்காக இனி நான் கஷ்டப்பட வேண்டியதில்லை. என் தம்பிகளுக்கும் இனி என் உதவி தேவையில்லை. அவர்களும் வேலைகளிலிருக்கிறார்கள்; எப்படியாவது தங்கள் விஷயங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ளுவார்கள்.

நோரா—ஒரு பெரிய பாரம் நீங்கிற்று உனக்கு...

லிண்டே—அதுதானே இல்லை! என் வாழ்க்கையிலே ஒன்றுமில்லாமல் சுத்த சூனியமாகப் போய்விட்டதை உணர்கிறேன் நான். நான் இனி யாருக்காகவும் வாழ வேண்

டியதில்லை. (சஞ்சலத்துடன் எழுந்திருக்கிறாள்.) அதனால்தான், என் ஆயுள் முழுவதும் பழகிப் போயிருந்தாலும், எங்கேயோ ஒரு மூலையி லிருக்கும் சின்ன இடத்தில் அவிந்து கிடக்க எனக்குப் பிடிக்கவில்லை. என் மனசில் வேறு எண்ணங்கள் தோன்றவே இடமில்லாதபடி செய்துகொண்டிருக்க இங்கு ஏதாவது வேலை கிடைப்பது எளிது என்று நம்புகிறேன். என் வாழ்வின் சூனியம் அதனால் மறையும். ஏதாவது நிரந்தரமான வேலை கிடைக்குமானால்—அதிர்ஷ்டமிருந்து எந்த விதமான ஆபீஸ் வேலையாக இருந்தால்...

நோரா—ஆனால், கிறிஸ்டின், அந்த மாதிரி வேலை ரொம்பக் கடினமாக இருக்குமே. நீ இப்பவே ரொம்பக் களைத்து அலுப்புற்றவளாகக் காண்கிறாய். எங்கேயாவது நல்ல இடமாகப் பார்த்துத் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டு உடம்பைத் தேற்றிக்கொண்டு வா.

லிண்டே—(ஜன்னலண்டை நடந்துகொண்டே) அதற்கெல்லாம் பணம் கொடுக்க எனக்கு அப்பா இல்லையே, நோரா!

நோரா—(எழுந்துகொண்டே) ஓ, என்னிடம் கோபித்துக் கொள்ளாதே.

லிண்டே—(அவளிடம் போய்) நீயல்லவா என்னிடம் கோபித்துக்கொள்ளாம லிருக்கவேணும், பிரிய நோரா. என்னைப் போன்றவர்களுக்கு வாழ்வு கசந்து போய்விடுகிறது. அதுதான் கஷ்டம். உலகிலே யாருமின்றி, யாருக்காகவும் உழைக்க வேண்டிய அவசிய மின்றி, ஆனால் எப்போதும் ஏதாவது கிடைக்காதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது. வாழ்ந்தாக வேணுமே; அதற்காகப் பிறரைப் பற்றிய ஞாபகத்தை ஒழித்துவிட வேண்டி யிருக்கிறது. நீ சற்றுமுன் உன்

அதிர்ஷ்டத்தைப் பற்றிச் சொன்னாயே—அப்போது நான் உனக்காகச் சந்தோஷப்படவில்லை—நம்பினால் நம்பு—எனக்காகத்தான் சந்தோஷப்பட்டேன்.

நோரா—அதுக்கு என்ன அர்த்தம்? ஓ, இப்பொழுது புரிகிறது. தார்வால்ட் உனக்கு ஏதாவது வேலை பண்ணித் தரமாட்டாரா என்று நினைக்கிறாய்.

லிண்டே—ஆம். நான் அதை எண்ணித்தான் சந்தோஷப்பட்டேன்.

நோரா—அவர் செய்யத்தான் வேணும், கிறிஸ்டின். அது என் பொறுப்பு. நான் செய்யச் சொல்லுகிறேன். விஷயத்தைச் சாமர்த்தியமாகவும் அவருக்குப் பிரியமான வழியிலும் சொல்லுவேன். உனக்கு நான் கொஞ்சமாவது உதவி செய்தேனானால் நான் எவ்வளவு சந்தோஷமடைவேன், தெரியுமோ?

லிண்டே—உனக்கு எவ்வளவு இரக்கமான மனது, நோரா? எனக்கு உதவி செய்ய ஆத்திரத்துடனிருக்கிறாய். வாழ்க்கையின் பாரமும், கஷ்ட நிஷ்டூரங்களும் என்ன என்பதே தெரியாத நீ இவ்வளவு பிரியமாயிருப்பது ரொம்பப் பெரிதுதான்.

நோரா—எனக்கா? எனக்கா தெரியாது?

லிண்டே—(சிரித்துக்கொண்டே) என்னருமை நோரா, அற்பமான வீட்டுக் கவலைகள் முதலியவையெல்லாம் ஒரு கவலையில் சேர்ந்ததா?......நீ இன்னும் ஒரு குழந்தைதானே, நோரா?

நோரா—(தலையை வெகு வேகமாக ஆட்டிக்கொண்டு, குறுக்கே நடந்துகொண்டு) நீ ரொம்பப் பெரிய மனுஷி மாதிரிப் பேசாதே!

லிண்டே—பேசக்கூடாதா? நான் பட்டிருப்பது......

நோரா—நீயும் மற்றவர்களைப் போலவேதான் என்னைப் பற்றி நினைக்கிறாய். எல்லோரும் என்னால் ஒரு பெரிய காரியமும் சரியாகச் செய்ய முடியாதென்றுதான் நினைக்கிறார்கள்.

லிண்டே—அதெல்லா மில்லை.

நோரா—நான் வாழ்விலே ஒரு கவலையும் பட்டதில்லையென்று எண்ணுகிறாயோ நீ?

லிண்டே—ஆனால், நோரா இப்போதானே நீ உன்னுடைய கவலைகள் எல்லாவற்றையும் என்னிடம் சொன்னாய்!

நோரா—பூ! அதெல்லாம் அற்பம். (தன் குரலைத் தாழ்த்தி) மிகவும் முக்கியமான விஷயத்தை நான் இன்னும் உன்னிடம் சொல்லவில்லை.

லிண்டே—முக்கியமானதா? என்ன? புரியவில்லையே எனக்கு!

நோரா—என்னைப் பார்த்தால் உனக்கு இளப்பமாக இருக்கிறது, இல்லையா, கிறிஸ்டின்? ஆனால் உண்மையில் நீ அப்படி நினைக்கக்கூடாது. நீ உன் தாயாருக்காக அவ்வளவு காலம் பாடுபட்டதைப் பற்றிப் பெருமை கொள்ளுகிறாய் அல்லவா?

லிண்டே—உண்மையில் நான் யாரையும் இளப்பமாக நினைக்கவில்லை. ஆனால் ஒரு விதத்தில் நான் என்னுடைய தாயாரின் அந்திக் காலத்தில் அவள் கவலையின்றி இருக்க உதவியாக இருந்தது பற்றிப் பெருமையும் சந்தோஷமும் அடைகிறேன்.

நோரா—உன் தம்பிகளுக்காக நீ செய்திருப்பதை எண்ணிப் பார்க்கும்போது நீ பெருமிதம் அடைகிறாய் இல்லையா?

விண்டே—நான் பெருமை யடையக் காரணம் இருக்கிறது.

நோரா—நான் இல்லை யென்று சொல்லவில்லையே! ஆனால் இப்பொழுது இதையுங் கேள். நானும் பெருமைப் படவும் சந்தோஷப்படவும் ஏதோ கொஞ்சம் இருக்கத் தான் செய்கிறது.

விண்டே—இருக்கும்: அதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் நீ எதைப் பற்றிச் சொல்லுகிறாய்?

நோரா—மெதுவாகப் பேசு; தார்வால்ட் காதில் விழுந்து விடப் போகிறது! இது அவருக்கு எந்த விதத்திலும் எட்டக் கூடாது. உன்னைத் தவிர உலகில் வேறு யாருக்குமே இது தெரியக் கூடாது, கிறிஸ்டின்!

விண்டே—ஆனால் அப்படி யென்ன விசேஷம் அது?

நோரா—(தனக்குப் பக்கத்தில் ஸோபாவில் மிஸிஸ் விண்டேயை இழுத்து உட்கார வைத்துக்கொண்டு) நானும் எண்ணிப் பார்த்துப் பெருமித மடைய, சந்தோஷப்பட, ஏதோ கொஞ்ச மிருக்கிறது என்று காட்டுகிறேன், பார். நான்தான் தார்வால்டின் உயிரைக் காப்பாற்றினேன்.

விண்டே—'காப்பாற்றி'னையா? எப்படி?

நோரா—நாங்கள் இதாலிக்குப் போய் வந்ததைப் பற்றிச் சொன்னே னல்லவா? நாங்கள் அங்கு போயிராவிட்டால் தார்வால்டின் உயிர்......

விண்டே—ஆம்: ஆனால் உன் தகப்பனா ரல்லவா அதற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தார்.

நோரா—(புன்சிரிப்புடன்) ஆம்: அப்படித்தான் தார்வால்டும் பாக்கி யெல்லோரும் நினைத்திருக்கிறார்கள். ஆனால்...

விண்டே—ஆனால்...

நோரா—அப்பா ஒரு ஷில்லிங் கூடக் கொடுக்கவில்லை. நான் தான் அந்தப் பணத்தைச் சம்பாதித்தேன்.

லிண்டே—நீயா? அத்தனை பணத்தையுமா?

நோரா—இருநூற்றைம்பது பவுன்கள். இப்போ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் நீ?

லிண்டே—அவ்வளவு பணம் சேர்க்க உன்னால் எப்படி முடிந்தது, நோரா? ஏதாவது லாட்டரியில் பரிசு கிடைத்ததா?

நோரா—(அலட்சியமாக) லாட்டரியில் விழாதோ? விழும், விழும். அப்படி வந்திருந்தால் அதில் பெருமைப் பட என்ன இருக்கிறது?

லிண்டே—நிஜந்தான். அப்படியானால் நீ எப்படி அவ்வளவு பணத்தையும் சம்பாதித்தாய்?

நோரா—(ஆலாபனம் பண்ணிக்கொண்டே, எதையோ மறைத்து வைப்பது போன்ற புன்னகையுடன்) உம்... உம்...ஹி! ஹி!...

லிண்டே—நீ அதைக் கடனாக வாங்கியிருக்க முடியாது என்பதால் அப்படிக் கேட்டேன்.

நோரா—கடனாக வாங்க முடியாதா? ஏன் முடியாது?

லிண்டே—முடியாது. தன் கணவனுடைய அனுமதியின்றி ஒரு மனைவியும் கடன் வாங்க முடியாது: வாங்கவும் கூடாது.

நோரா—(தலையை ஆட்டிக்கொண்டு) கூடாதா? அது அசட்டு மனைவிகளுக்கன்றோ விதி!—ஒரு காரியத்தை எடுத்து முடிக்கத் தெரியாதவர்களுக்கு அது! கொஞ்சங் கெட்டிக்காரர்களா யிருப்பவர்களுக்கு...

லிண்டே—இதெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை, நோரா.

நோரா—நீ புரிந்துகொள்ள வேண்டிய அவசிய மென்ன? நான் கடன் வாங்கினதாகச் சொல்லவே யில்லையே! பணம் எனக்கு வேறு விதமாகக் கிடைத்திருக்கலாம். (ஸோபாவில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு) என்னைப் பார்த்துக் காதல் கொண்ட எவனிடமாவது வாங்கியிருக்கக் கூடாதா? என்னைப் போல் அழகுள்ள...

லிண்டே—பைத்தியக்காரிடீ நீ!

நோரா—இப்போ விஷயத்தைத் தெரிந்துகொள்ளத்தான் வேணுமென்று உனக்கு ஆவல் அளவு கடந்து எழுகின்றது, இல்லையா? அப்படித்தானே, கிறிஸ்டின்?

லிண்டே—நான் சொல்வதைக் கேள், நோரா. நீ கொஞ்சம் அசட்டுத்தனமாக நடந்துகொண்டுவிட்டாய் போலிருக்கிறது.

நோரா—(நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு) கணவருடைய உயிரைக் காப்பாற்றுவது அசட்டுத்தனமாக்கும்!

லிண்டே—எனக்குத் தோன்றுவது என்னவென்றால்—அவருக்குத் தெரியாமல் நீ, அசட்டுத்தனமாக........

நோரா—அவருக்குத் தெரியக் கூடாது என்பதுதானே விஷயம்; அதுகூடப் புரியவில்லையா உனக்கு? அவர் உடம்பு எவ்வளவு கேவலமான நிலையில் இருந்தது என்பதை அவர் அறிந்துகொள்ளக் கூடாது என்பதற்காகத்தானே இத்தனை பாடும்? டாக்டர் ரகசியமாக வந்து, அவர் உயிருக்கு ஆபத்து வந்துவிடும்போலிருக்கிறது என்றும், அது விஷயம் அவருக்குத் தெரியக்கூடாது என்றும், கொஞ்ச நாள் தெற்கே போய் இதாலியில் வசித்துவிட்டு வந்தால் சரியாகப்

போய்விடும் என்றும் என்னிடந்தானே சொன்னார்! மூதன் முதலில் நான் அவரிடம் எனக்கு இதாலி போக ஆசையாக இருக்கிறது என்றும், எனக்காகப் போகலாம் என்றும் சொல்லிப் பார்க்கவில்லை யென்று நினைக்கிறாயா என்ன? அழுது பார்த்தேன், கெஞ்சிப் பார்த்தேன். அது நான் கர்ப்பமாக இருந்த சமயம். அதற்காக வேனும் என்னிடம் இரக்கங்கொண்டு என்னை இதாலிக்கு அழைத்துப் போகக் கூடாதா என்று கேட்டேன். பணமில்லாவிட்டால் கடன் வாங்கியாவது...... என்றெல்லாம் சொல்லிப் பார்த்தேன். அவருக்குக் கோபந்தான் வந்தது. எனக்கு மூளையே கிடையா தென்றும், என்னிஷ்டப்படி எல்லாம் கூத்தடிக்க விடா திருப்பது அவர் கடமை என்றும் சொல்லிவிட்டார். 'இருக்கட்டும்: உன்னைக் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றி விடுகிறேன்!' என்று நினைத்துக்கொண்டே இதாலிக்குப் போகப் பணத்துக்கு நானாக வழியைக் கண்டுபிடித்தேன்.

லிண்டே—உன் அப்பா பணம் அனுப்பவே யில்லை யென்று உன் கணவரிடம் சொல்லவே யில்லையா?

நோரா—இல்லை: அந்தச் சமயந்தான் அப்பாவும் இறந்தது. ரகசியத்தை அவருக்குஞ் சொல்லி அதை வெளியிடக் கூடாது என்று வேண்டிக்கொள்வதாகத்தான் எண்ணி யிருந்தேன். ஆனால் அவருக்கு அப்போது உடம்பு ரொம்ப மோசமாக இருந்தது. ஐயோ! அவருக்குச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லாமற் போய் விட்டது!

லிண்டே—உன் ரகசியத்தை நீ இதுவரையில் உன் கண வருக்குச் சொல்லவே யில்லையா?

நோரா—தெய்வமே! இல்லை. நான் எப்படிச் சொல்லியிருக்கலாம் என்று நினைக்கிறாய் நீ? இம்மாதிரி விஷயங்களில் அவருடைய தீவிரமான கொள்கைகளை நீ அறியமாட்டாய். தவிரவும் இம்மாதிரி என்னால் உதவி பெற்றது தன் புருஷத் தன்மைக்கு இழிவு என்று அவர் கருதுவார். தன்னைச் சிறுமைப்படுத்தி விட்டதாக எண்ணிக் கொள்வார். அதனால் எங்க ளிருவரின் சம்பந்தமும் சீர்கெடும். எங்களுடைய வீடு, குடும்ப வாழ்வு இப்போது இருப்பது போல இன்பகரமாக அதற்கப்புறம் ஒரு நாளும் இருந்திராது.

விண்டே—அதைப்பற்றி அவரிடம் ஒன்றும் சொல்வதாகவே உனக்கு உத்தேசமில்லையா?

நோரா—(யோசனையி லாழ்ந்தவளாய் அரைச் சிரிப்புடன்) ஆம், என்றைக்காவது சொல்லவேண்டும். பல வருஷங்களுக் கப்புறம், நான் இப்போது இருக்கிற மாதிரி யில்லாமல் அழகு குன்றிப் போகும்போது, சொல்லவேண்டும். என்னைப் பார்த்துச் சிரிக்காதே, கிறிஸ்டின்! நான் சொல்வது என்னவென்றால்—தார்வால்ட் என்னிடம் இப்போது இருப்பது போல அன்பாக இல்லாமல், என் சல்லாபங்களில் அலுப்புக்கொள்ள ஆரம்பிக்கும் போது சொல்லுவேன்; அவருக்கு மறுபடியும் என்னிடம் பிரிய முண்டாகச் செய்ய இந்த ரகசியத்தை உபயோகிப்பேன். என்...(பாக்கி சொல்ல வந்ததைச் சொல்லாமல் அடக்கிக்கொண்டு) என்ன மடத்தனம்? அந்த நாள் என்றும் வராது. இப்போ சொல்லு. என்னுடைய பெரிய ரகசியத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? இப்போ சொல்லு, கிறிஸ்டின். இன்னமும் நான் ஒரு உபயோகமற்ற குழந்தைதான் என்று தோன்றுகிறதா

உனக்கு? இன்னமும் சொல்லுகிறேன் கேள்! இதைப் பற்றி நான் பட்ட கவலை சொல்லி முடியாது. காலா காலத்தில் கடனுக்காகச் செலுத்த வேண்டியதைச் செலுத்துவது கஷ்டமாக இருக்கிறது. இந்தப் பேரத்தில் மூன்று மாத வட்டியென்று ஒன்று, முதலுக்காகத் தவணைகளாகச் செலுத்துவது ஒன்று. இப்படி என்னெல்லாமோ இருப்பது தெரியுமா உனக்கு? தவறாமல் கணக்குப் பண்ணி வைத்துக்கொள்வதும் கஷ்டமாகத்தானிருக்கிறது. எங்கெங்கு எப்படியெல்லாம் செலவழிக்காமல் மீதம் பிடிக்க முடியுமோ அப்படியெல்லாம் சேர்த்துவைக்க வேண்டியிருக்கிறது. சாப்பாட்டுச் செலவிலிருந்து அதிகம் சேருவதில்லை. என் தார்வால்ட் நன்றாகச் சாப்பிட வேண்டாமா? குழந்தைகளுக்காக அவர் கொடுக்கும் பணத்தையும் தொடுவதற் கில்லை. அவைகளுக்கு நல்ல துணிமணிகள் வாங்கிக் கொடுக்காமல் வஞ்சனை செய்யலாமா?

லிண்டே—எனவே உன் செலவைத்தான் ஒடுக்கிக் கொண்டிருக்கிறாய் என்று சொல்லு, நோரா! ஐயோ பாவம்!

நோரா—ஆமாம். தவிரவும் என்னால்தானே இந்தக் கடன் வந்ததே! புதுத் துணி, இது மாதிரி ஏதாவது வாங்கிக் கொள்ள தார்வால்ட் காசு கொடுத்தால், அதில் பாதிதான் நான் செலவழிப்பேன். நான் எளிய மலிவான துணிகள்தான் வாங்குவேன். நல்ல வேளையாக நான் எதைக் கட்டிக் கொண்டாலும் எனக்கு நன்றாக இருக்கிறது. இதனால் தார்வால்ட் என் துணிமணிகளை அதிகம் கவனிப்பதில்லை. ஆனால், கிறிஸ்டின், எனக்கு ரொம்பக் கஷ்டமாகத்தானிருந்தது; நல்ல துணி கட்டிக்கொள்

வதைப் போல் சந்தோஷகரமானது வேறு ஏதாவ துண்டா?

லிண்டே—நிஜந்தான்.

நோரா—இது மாத்திரமா? நான் பணம் சம்பாதிக்க வேறு வழிகளும் கண்டுபிடித்திருக்கிறேன். போன கிறிஸ்து மஸின் போது அதிர்ஷ்டவசமாக நிறைய 'காப்பி' எழுதும் வேலை கிடைத்தது. என் அறைக் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு ராத்திரி வெகுநேரம் வரையில் 'காப்பி' எழுதினேன். பாதி நாள் எனக்கு ரொம் பக் களைப்பாக இருக்கும். ஆனால் சிரமப்பட்டு அப் படி உட்கார்ந்துகொண்டு சம்பாதிப்பதிலேயும் ஒரு இன் பம் இருக்கத்தான் இருந்தது. ஒரு புருஷன் போல் வாழ்வது மாதிரி இருந்தது எனக்கு.

லிண்டே—இது மாதிரி இதுவரையில் எவ்வளவு பணம் கொடுத்தாய்விட்டது?

நோரா—எனக்கு நிச்சயமாகச் சொல்லத் தெரியாது. இம் மாதிரி பேரங்களில் கணக்கு வைத்துக்கொள்வது ரொம் பக் கஷ்டம். என்னால் சுரண்டிச் சுரண்டிச் சேர்க்க முடிந்ததை யெல்லாம் கொடுத்துவிட்டேன். அவ்வளவு தான் எனக்குத் தெரியும். பல சமயங்களில் எனக்கு என்ன பண்ணுவது என்று தெரியாது. (சிரித்துக் கொண்டு) அப்போதெல்லாம் நான் இப்படி உட்கார்ந்து கொண்டு கற்பனை செய்து பார்ப்பேன்: ஒரு கிழப் பணக்காரன் என்னிடம் காதல்கொண்டு......

லிண்டே—என்ன? யார் அது?

நோரா—கொஞ்சம் சும்மா இரு—அக் கிழவன் இறந்து விடு கிறான். அவன் உயிலைப் பார்த்தபோது அதில் பெரிய

எழுத்துக்களில், 'அழகி மிஸிஸ் நோரா ஹெல்மருக்கு என் ஆஸ்தி யெல்லாவற்றையும் பணமாக மாற்றிக் கொடுத்துவிடுவது' என்று எழுதியிருக்கிறது......

லிண்டே—ஆனால் என் அருமை நோரா, யார் அந்தக் காதலன்?

நோரா—அட தெய்வமே! உனக்குப் புரியவில்லையா? ஒரு கிழவனும் இல்லை. நான் இங்கே உட்கார்ந்தபடியே என் கற்பனையால் அவனையும் அவன் உயிலையும் சிருஷ்டித்தேனே தவிர வேறில்லை. வேறு ஒன்றும் பணம் வர வழியில்லாததால் அப்படி எண்ணிப் பார்ப்பேன். ஆனால் இனிமேல் பாதகமில்லை. அந்தக் கிழவனும் வேண்டாம். அவனுடைய உயிலும் வேண்டாம் எனக்கு. அவன் இருக்கிற இடத்திலேயே இருக்கலாம். எனக்காகச் சாகவேண்டியதில்லை அவன். எனக்கு இனிமேல்தான் கவலையே கிடையாதே! (குதித்து எழுந்திருக்கிறாள்) நினைக்க நினைக்கச் சந்தோஷமாகத் தான் இருக்கிறது, கிறிஸ்டின். கவலையின்றி யிருப்பது! கவலைகளை யெல்லாம் உதறிவிட்டு இருப்பதைப் போல வேறு வாழ்வுண்டோ! குழந்தைகளோடு குழந்தையாக மனச் சஞ்சலமின்றி விளையாடலாம். வீட்டை அழகாக வைத்துக்கொள்ளவும், எல்லாவற்றையும் தார்வால்டுக்குப் பிடித்தபடி வைத்துக்கொள்ளவும் செய்யலாம். சீக்கிரம் வசந்த காலம் வர, வானும் வெளிவாங்கிவிடும். இன்னொரு யாத்திரை புறப்பட வேணுமானாலும் முடியும். நான் மறுபடியும் சமுத்திரத்தைப் பார்க்க விரும்புகிறேன். சந்தோஷமாய்க் காலங் கழிப்பது எவ்வளவு இன்பம்! (கூடத்தில் மணி யடிக்குஞ் சப்தங் கேட்கிறது.)

விண்டே—(எழுந்துகொண்டு) அதோ மணி யடிக்கிறது. நான் வேணுமானுல் போகட்டுமா ?

நோரா—இல்லே. போகாதே. இங்கு யாரும் வரமாட்டார்கள், அநேகமாய்த் தார்வால்டாகத்தான் இருக்கும்.

வேலேக்காரி—(கூடத்துக் கதவுப்படியில் நின்றுகொண்டு) அம்மா, என்னே மன்னிக்கவும். யாரோ ஐயாவைப் பார்க்க ஒரு கனவான் வந்திருக்கிருர். அவருடன் டாக்டரும் இருப்பதால்—

நோரா—யாரது ?

க்ராக்ஸ்டாட்—(கதவண்டையி லிருந்தபடியே) நான்தான். மிஸிஸ் ஹெல்மர். (மிஸிஸ் விண்டேக்குத் தூக்கி வாரிப் போடுகிறது. அவள் உடம்பு நடுங்குகிறது ; ஜன்னல் பக்கம் திரும்புகிருள்.)

நோரா—(க்ராக்ஸ்டாட் பக்கம் ஒரு அடி எடுத்துவைத்து, மெல்லிய பதட்டமான குரலில்) நீரா ? என்ன அது ? என் கணவரை எதற்காகப் பார்க்கவேணும் ?

க்ராக்ஸ்டாட்—ஒரு பாங்க் விஷயமாக. நான் பாங்கில் ஒரு சின்ன வேலேயில் இருக்கிறேன். உங்கள் கணவர்தான் இப்போது மானேஜர் என்று கேள்விப்பட்டு......

நோரா—அப்படியானுல்......

க்ராக்ஸ்டாட்—வேறு ஒன்றும் விசேஷமில்லே, மிஸிஸ் ஹெல்மர்; வேறு ஒன்றுமே யில்லே.

நோரா—அப்படியானுல் அவருடைய அறைக்குப் போங்கள். (அவனுக்கு அலட்சியமாகத் தன் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, கூடத்துக் கதவைச் சாத்துகிருள். திரும்பி வந்து கணப்பை மூட்டுகிருள்.)

லிண்டே—நோரா! யார் அந்த மனிதன்?

நோரா—ஒரு லாயர்: க்ராக்ஸ்டாட் என்று பெயர்.

லிண்டே— அவன்தானு அது?

நோரா—உனக்குத் தெரியுமா அவனை?

லிண்டே—தெரியும்—ரொம்ப நாளைக்கு முன். ஒரு காலத்தில் எங்களூரில் ஒரு ஸொலிசிடர் ஆபீஸில் குமஸ்தாவாக இருந்தான்.

நோரா—ஆமாம்: இருந்தான்.

லிண்டே—அவன் ரொம்ப மாறியிருக்கிறுன்.

நோரா—அவன் கலியாணம் பண்ணியது ரொம்பத் துக்ககரமாக முடிந்தது.

லிண்டே—இப்பொழுது அவனுடைய மனைவி இறந்துவிட்டா ளில்லையா?

நோரா—ஆம்: ஏகப்பட்ட குழந்தைகளை விட்டுவிட்டு...... ஒரு மட்டுக்கு கணப்பு எரிய ஆரம்பித்துவிட்டது. (கணப்பண்டையிலிருந்து நகர்ந்து வருகிறுள். ஆடு நாற்காலியை நகர்த்தி வைக்கிறுள்.)

லிண்டே—அவன் எத்தனையோ தொழில்கள் செய்வதாக ஜனங்கள் சொல்லுகின்றனர்.

நோரா—நிஜமாகவா? செய்கிறுனே என்னவோ? எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனுல் இப்பொழுது ஒரு தொழிலையும் பற்றிப் பேச வேண்டாம். எனக்குக் களைப்பாக இருக்கிறது.

டாக்டர் ராங்க்—(ஹெல்மரின் அறையிலிருந்து வெளியே வருகிறுர். கதவைச் சாத்துமுன் ஹெல்மரைக் கூப்

பிட்டுப் பேசுகிருர்.) இல்லே, ஹெல்மர், நான் உன்னைத் தொந்தரவு பண்ணவில்லே; சிறிது நேரம் உன் மனைவியைப் பார்த்துவிட்டு வருகிறேன், (கதவைச் சாத்துகிருர்: மிஸிஸ் விண்டேயைப் பார்க்கிருர்.) ஓ! மன்னிக்கணும்: நான் உங்களுக்கும் தொந்தரவு கொடுக்கிறேன் போலிருக்கிறதே!

நோரா—இல்லே, இல்லே. (இருவரையும் அறிமுகஞ் செய்து வைத்துக்கொண்டு) டாக்டர் ராங்க் — மிஸிஸ் விண்டே.

டாக்டர்—உங்கள் பெயரை இவ் வீட்டில் நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். நான் மாடிப் படி யேறும்போது உங்களேத் தாண்டி வந்தேன் என்று நினைக்கிறேன், மிஸிஸ் விண்டே?

விண்டே—ஆம், என்னல் வேகமாக மாடிப் படி ஏற முடியாது.

டாக்டர்—ஓ! உள்ளூர ஏதாவது பலஹீனமோ?

விண்டே—அதெல்லாம் ஒன்றுமில்லே. உண்மை யென்ன வென்ருல், நான் அதிகமாக வேலே செய்து சிரமப்படுத்திக்கொண்டு விட்டேன்.

டாக்டர்—அவ்வளவுதான? அதற்காக நகரத்தில் சில நாள் தங்கி கிறிஸ்துமஸ் காட்சிகளேப் பார்த்து ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று வந்திருக்கிறீர்களோ?

விண்டே—இல்லே, இல்லே! வேலே ஏதாவது அகப்படும் என்று பார்த்துத்தான் வந்தேன்.

டாக்டர்—அதிக வேலே செய்து களேப்படைந்ததற்கு மருந்து அதுதானே?

லிண்டே—இல்லை: ஆனால் எப்படியும் வயிறு வளர்க்க வேண்டுமே, டாக்டர் ராங்க்!

டாக்டர்—ஆம். பொதுவாக எல்லோருமே வாழவேண்டியது அவசியந்தா னென்று எண்ணுகின்றனர்.

நோரா—இங்கே பாருங்கள், டாக்டர் ராங்க்—நீங்கள் வாழ விரும்புவது உங்களுக்கே தெரியவில்லையா?

டாக்டர்—நன்றாகத் தெரிகிறது, நான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அக்கஷ்டம் நீடித்திருக்கச் செய்வதில் எனக்கு ஆசை இருக்கத்தான் இருக்கிறது. என்னைத் தேடி வரும் நோயாளரும் அப்படியேதான். குணத்திலே வியாதி பிடித்து அரித்து, நல்ல குணமே யில்லாதவர்களும் அப்படித்தான். இப்படிப்பட்ட ஒருவன்—மகா மோசமானவன்—இந்த நிமிஷம் ஹெல்மருடன் இருக்கிறான்: அவன்......

லிண்டே—(துக்கத்துடன்) ஹா!

நோரா—யாரைச் சொல்லுகிறீர்?

டாக்டர்—அவன் ஒரு லாயர். அவன் பெயர் க்ராக்ஸ்டாட். அவன் ஒரு வியாதியஸ்தன்; அவன் வியாதி அவனுடைய ஆத்மாவையும் நல்ல குணத்தையும் அரித்துத் தள்ளிவிட்டது, மிஸிஸ் ஹெல்மர். ஆனால் அவன்கூடத் தான் உயிர் வாழவேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறான்.

நோரா—ஹும், அப்படியா? தார்வால்டுடன் அவன் என்ன பேச விரும்புகிறான்?

டாக்டர்—எனக்குத் தெரியாது. ஏதோ பாங்க் விஷயம் என்று மட்டும் காதில் விழுந்தது.

நோரா—அவன் பெயரென்ன?—க்ராக்ஸ்டாட்டா?—அவனுக்கும் பாங்குக்கும் என்ன சம்பந்தம்?

டாக்டர்—பாங்கில் அவன் ஏதோ வேலையி லிருக்கிறான் என்று நம்புகிறேன். (மிஸிஸ் லிண்டேயிடம்) உங்கள் ஊரில் கூட இது உண்டோ என்னவோ எனக்குத் தெரியாது. அயோக்யத்தனத்தை உலகினின்றும் ஒழிக்க முயலும் சிலர், ஒரு அயோக்கியனைக் கண்டதும் அவனுக்கு ஒரு நல்ல வேலையைக் கொடுத்துப் பலர் கண்ணிலும் படும் படியாக வைத்துவிட்டால் அவன் திருந்திவிடுவான் என்று எண்ணுகின்றனர். இதனால் நல்லவர்களுக்கு வேலை கிடைப்பது அரிதாகி விடுகிறது.

லிண்டே—இருந்தாலும் வியாதியஸ்தர்களைத்தானே நாம் முதலில் கவனிக்க வேணும்?

டாக்டர்—(தலையை யாட்டிக்கொண்டு) அதுதான் பாருங்களேன். இப்படித்தான் நம் சமூகம் ஒரு ஆஸ்பத்திரியாக மாறி விடுகிறது.

(யோசனையி லாழ்ந்திருந்த நோரா திடீரென்று அடக்கமாகச் சிரித்துக் கைகளைக் கொட்டுகிறாள்.)

டாக்டர்—இதில் சிரிப்பதற்கு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே! உண்மையில் சமூகம் என்றால் என்ன என்றே உனக்குத் தெரியாதென்று நம்புகிறேன்.

நோரா—ஓ! அந்தப் பாழும் சமூகத்தைப் பற்றி யெல்லாம் எனக்கென்ன கவலை? நான் நீங்கள் சொன்னதைக் கேட்டுச் சிரிக்கவில்லை. வேறு வேடிக்கையான விஷயம் ஒன்று. டாக்டர் ராங்க், நீங்கள் சொல்லுங்கள்: இனி மேல் பாங்கில் வேலையா யிருப்பவர்கள் எல்லோரும் என் கணவரின் கையை எதிர்பார்த்து நிற்க வேணுமா?

டாக்டர்—இதிலே வேடிக்கை யென்ன?

நோரா—(புன்சிரிப்புடன் ஆலாபனம் பண்ணிக்கொண்டு) அது என் ரகஸ்யம். (அறையில் குறுக்கும் நெடுக்கும் நடக்கிறாள்.) எங்கள்—அதாவது தார்வால்டின் கைக்குள் இவ்வளவு பேர் அடங்கி யிருக்கிறார்கள் என்று நினைக்க எனக்கு ரொம்பப் பெருமையாகத்தானிருக்கிறது. (தன் பையிலிருந்து மிட்டாய்ப் பொட்டலத்தை எடுத்து) டாக்டர், உங்களுக்கு ஒரு மிட்டாய் வேணுமோ?

டாக்டர்—என்ன? மிட்டாயா? இங்கே அதெல்லாம் சாப்பிடக் கூடாது என்றல்லவோ நான் எண்ணி யிருந்தேன்?

நோரா—அது சரி. ஆனால் இவை எனக்குக் கிறிஸ்டின் கொடுத்தவை.

லிண்டே—என்ன? நானா?......

நோரா—ஓ! அதனால் ஒன்றுமில்லை, கிறிஸ்டின். நான் மிட்டாய் தின்னக் கூடாது என்று தார்வால்ட் தடுத்திருப்பது உனக்கெப்படித் தெரியும்? என் பல் கெட்டுப் போய் விடும் என்று அவர் பயப்படுகிறார். ஆனால் ச்சூ! எப்பவாவது ஒரு தரம் தின்றால் என்ன? அப்படித் தானே? இல்லையா டாக்டர்? உத்தரவு கொடுத்தால், (டாக்டர் வாயில் ஒரு மிட்டாயைத் திணிக்கிறாள்) நீயும் ஒன்று எடுத்துக் கொள்ள வேணும், கிறிஸ்டின். நானும் ஒன்று, இல்லை, இரண்டு எடுத்துக் கொள்ளுகிறேன். (நடந்துகொண்டே) நான் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன், தெரியுமா? இப்போ ஒரு காரியம் செய்யணும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது.

டாக்டர்—அதென்னது ?

நோரா—தார்வால்டின் காதில் விழும்படியாக நான் அதைச் சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர்—சொல்லேன், ஏன் சொல்லக் கூடாது ?

நோரா—மாட்டேன். எனக்குத் தைரியம் இல்லை; அதை என்னைப் போன்றவர்கள் சொல்லக்கூடாது என்று சமூகம் விதித்திருக்கிறது.

லிண்டே—அதென்ன அப்படி ?

டாக்டர்—அப்படியானால் சொல்லாதே யென்றுதான் நான் சொல்லுவேன். தார்வால்டின் காதில்தானே விழக் கூடாது ? எங்களுக்குச் சொன்னால் என்ன ? அதென்ன ?

நோரா—இதுதான்—நான் அதோகதி யடைந்து விட்டேன் !

டாக்டர்—பைத்தியமா உனக்கு ?

லிண்டே—நோரா !

டாக்டர்—இதோ வந்துவிட்டான். அவன் காதிலும் விழும் படியாகச் சொல்லிவிடேன்.

நோரா—(மிட்டாய்ப் பொட்டலத்தை மறைத்துக்கொண்டு) உஸ்...உஸ்...

(ஹெல்மர் தன் அறையிலிருந்து கையில் தொப்பியுடன் கோட்டை மாட்டிக்கொண்டு வருகிறான்.)

நோரா—என்ன தார்வால்ட், அவன் போய்விட்டானா ?

ஹெல்மர்—உம். இப்பொழுதுதான் போனான்.

நோரா—உங்களை அறிமுகஞ் செய்துவைக்கிறேன். இது தான் கிறிஸ்டின் ; பட்டணத்துக்கு வந்திருக்கிறாள்.

ஹெல்மர்—கிறிஸ்டின்...! என்னை மன்னிக்கவும், எனக்குத் தெரியவில்லையே ?

நோரா—மிஸிஸ் லிண்டே, தார்வால்ட்; கிறிஸ்டின் லிண்டே.

ஹெல்மர்—என் மனைவியும் நீங்களும் சேர்ந்தாற்போல் படித் தீர்களில்லையா ?

லிண்டே—ஆம். அந்த நாட்களிலிருந்தே நாங்க ளிருவரும் சிநேகிதம்.

நோரா—உன்னைப் பார்க்கத்தான் இவ்வளவு தூரம் வந்திருக் கிறாள் கிறிஸ்டின்.

ஹெல்மர்—என்ன விசேஷம் ? என்னையா ?

லிண்டே—இல்லை : உண்மையில் நான்......

நோரா—கிறிஸ்டின் கடைகளில் கணக்கு வேலை பார்ப்பதில் தேர்ச்சி பெற்றவள். யாராவது கெட்டிக்காரரிடம் வேலை செய்யவேண்டுமென்று......

ஹெல்மர்—நல்ல யோசனைதான், மிஸிஸ் லிண்டே.

நோரா—உனக்கு பாங்கில் மானேஜர் வேலையானது தெரிந்த தும்—செய்தி தந்தியிலன்றோ பறந்தது—எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இங்கு வந்துவிட்டாள், தார்வால்ட். கிறிஸ்டினுக்கு எனக்காக ஏதாவது ஒரு வேலை பண்ணிக் கொடு. செய்வா யில்லையோ ?

ஹெல்மர்—முடியாது என்று சொல்லுவதற்கில்லை. உங்கள் கணவர் இறந்துவிட்டாரில்லையா ?

லிண்டே—ஆம்.

ஹெல்மர்—கணக்கு வழக்குப் பார்ப்பதில் ஏதாவது பரிச்சய முண்டோ ?

லிண்டே—ஏதோ கொஞ்சம் தெரியும்.

ஹெல்மர்—ஆ! அப்படியானால் ஏதாவது வேலை செய்து தர முடியும் என்றுதான் எண்ணுகிறேன்.

நோரா—(கையைக் கொட்டிக்கொண்டு) நான்தான் சொன்னேனே, கிறிஸ்டின்! சொல்லவில்லையா!

ஹெல்மர்—உங்கள் அதிர்ஷ்டம். நீங்கள் வந்த சமயம் சரியான சமயம்.

லிண்டே—என் வந்தனத்தை நான் தங்களுக்கு எப்படித் தெரிவிப்பது?

ஹெல்மர்—அதற்கு அவசியமே யில்லை. என்னை மன்னிக்க வேணும்: இன்று எனக்கு வெளியே கொஞ்சம் வேலை யிருக்கிறது, போகிறேன்.

டாக்டர்—ஒரு நிமிஷம் இரு. நானும் வந்து விடுகிறேன். (கூடத்திலிருந்து தன் கம்பளிச் சட்டையைக் கொண்டு வந்து கணப்பில் சூடு படுத்துகிறார்.)

நோரா—ரொம்ப நாழி யாகாதே, தார்வால்ட்?

ஹெல்மர்—ஒரு மணி நேரம்: அதற்கு மேல் ஆகாது.

நோரா—நீயும் கிளம்பி விட்டாயா என்ன, கிறிஸ்டின்?

லிண்டே—(தன் போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு) ஆம்: நானும் போகத்தான் வேண்டும். தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்ய வேண்டாமா?

ஹெல்மர்—அப்படியானால் நீங்களும் எங்களுடன் தெருக் கோடி வரையில் வரலாமே!

நோரா—(கிறிஸ்டினின் போர்வையை இழுத்துச் சரிப்படுத்திக் கொண்டு) இங்கே என் வீட்டிலேயே போதுமான இட

மில்லையே யென்று எனக்கு வருத்தமாக இருக்கிறது. இருந்தால் வேறு இடந் தேடி.......

லிண்டே—அதனால் பாதகமில்லை. போய் வருகிறேன், நோரா. ரொம்ப வந்தனம்.

நோரா—போய் வா. சாயந்திரம் வருவாயில்லையா? டாக்டர் ராங்க், நீங்களும் சாயங்காலம் வாருங்கள். என்ன சொல்லுகிறீர்கள்? உடம்பு சரியாக இருந்தாலா? உடம்பு சரியாக இருக்கத்தான் வேணும். நன்றாக இறுக இழுத்துப் போர்த்திக்கொண்டு போங்கள்.

(எல்லோரும் கதவண்டை போகிறார்கள். மாடிப் படியில் குழந்தைகளின் குரல் கேட்கிறது.)

நோரா—அதோ வந்துவிட்டார்களே! அதோ! (அவள் கதவைத் திறக்க ஓடுகிறாள். தாதியும் குழந்தைகளும் உள்ளே வருகின்றனர்.) வாருங்கோ! வாருங்கோ! (குனிந்து குழந்தைகளுக்கு முத்தங் கொடுக்கிறாள்.) ஓ! என் ஆசைச் செல்வங்களே! பார்த்தாயா கிறிஸ்டின்?

டாக்டர்—கதவைத் திறந்து வைத்துக்கொண்டு குழந்தைகளுடன் இந்தச் சாரலில் நிற்க வேண்டாமே!

ஹெல்மர்—வாருங்கோ போகலாம், மிஸிஸ் லிண்டே. இங்கு இனிமேல் அவைகளுடைய தாயாரைத் தவிர வேறு யாரும் இருந்து சமாளிக்க முடியாது.

(டாக்டர் ராங்க், ஹெல்மர், மிஸிஸ் லிண்டே எல்லோரும் வெளியேறுகின்றனர். குழந்தைகளை அழைத்துக்கொண்டு தாதி உள்ளே வருகிறாள்: நோரா கதவைச் சாத்துகிறாள்.)

நோரா—எவ்வளவு குறுகுறுப்பாயும் அழகாயும் இருக்கின்றன! கன்னங்கள் ஆப்பிளையும் ரோஜாவையும் போலச் சிவந்திருக்கின்றன. (அவள் பேசுகையில் குழந்தைகள்

எல்லாம் சேர்ந்தாற்போல் பேசுகின்றன.) நன்ரு விளை யாடினேளா? ரொம்ப சரி. என்ன? நீ பாப், எம்மி இருவரையும் வண்டியில் வைத்து இழுத்தயா? அட சமத்தே! நீ கெட்டிக்காரண்டா ஐவர். ஆன், இப்படிக் கொடு அவளை: நான் கொஞ்ச நேரம் வைத்துக் கொள்ளுகிறேன். (குழந்தையைத் தாதியிட மிருந்து வாங்கி நாட்டிய மாட வைக்கிருள்) அம்மா பாபுடனும் நாட்டிய மாடுவாள்: இன்னுஞ் சிறிது நாழி கழித்து, என்ன? பனிக்கட்டியால் பந்து பண்ணி விளையாடி னேளா? நானும் உங்களுடன் விளையாட வராமல் இருந்து விட்டேனே என்று இருக்கிறது எனக்கு. வேண்டாம்: நான் இதுகளுக் கெல்லாம் புது ஆடை போட்டுவிடுகிறேன், ஆன். நானே இன்று மாத்திரம் போடுகிறேன். நீயும் பனியில் நனைந்து போயிருக் கிருயே! அடுப்பில் சுடச்சுடக் காப்பி வைத்திருக் கிறேன்: எடுத்துச் சாப்பிடு, போ.

(தாதி இடது புற மிருக்கும் அறைக்குள் போகிருள். நோரா குழந்தைகளின் பழந் துணிகளைக் களைந்து கண்டபடி அறை யில் எங்கு பார்த்தாலும் எறிந்துவிட்டு, புது ஆடைகள் அணி விக்கிருள். குழந்தைக ளெல்லாம் சேர்ந்தாற் போலப் பேசு கின்றன.)

நோரா—நிஜமாகவா? நாய் உன்னைத் துரத்திக்கொண்டு வந்ததா? பெரிய நாயா? ஆனல் அது உன்னைக் கடிக்க வில்லையா? இல்லை, நாய்கள் நல்ல பெண்களைக் கடிக் காது. ஏய் ஐவர், அந்தப் பொட்டலத்தை யெல்லாம் பார்க்காதே! ஆ! அதில் என்ன இருக்கிறதென்று தெரியணுமா? ரொம்ப அவசியந்தான்! அதில் உனக்கு ஒன்றும் இல்லை. இப்படி வா. நாம் எல்லோரும் விளை யாடுவோம். என்ன விளையாடலாம்? ஓடிப் பிடிக்க

லாமா? ஒளிந்து பிடிக்கலாமா? சரி, பாப் முதலில் ஒளிந்து கொள்ளட்டும். நானும் ஒளிந்து கொள்ளணுமா? சரி, ஒளிந்து கொள்ளுகிறேன்.

(அவளும் குழந்தைகளும் சிரித்துக் கூச்சல் போட்டுக்கொண்டு ஒளிந்து பிடிக்கின்றனர். கடைசியில் நோரா மேஜைக் கடியில் ஒளிந்துகொள்ளுகிறாள். குழந்தைகள் அவளைக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளேயும் வெளியேயும் ஓடித் தவிக்கின்றன. நோரா சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்து விடுவதால் மேஜைத் துணியைத் தூக்கிக் குழந்தைகள் அவளைக் கண்டு விடுகின்றன. மண்டியிட்டபடியே நகர்ந்து குழந்தைகளைத் தூத்திப் பயமுறுத்துகிறாள் நோரா. குழந்தைகள் 'கடகட'வென்று சிரிக்கின்றன. இந்தச் சப்தத்தில் வெளிக் கதவை யாரோ தட்டுவது அங்கு யார் காதிலும் விழவில்லை. பாதி திறந்திருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறான் க்ராக்ஸ்டாட். அவன் சற்று நேரம் வாசற்படியிலேயே நிற்கிறான். அவனை யாரும் கவனிக்காமல் விளையாட்டில் ஈடுபட்டிருக்கின்றனர்.)

க்ராக்ஸ்டாட்—என்னை மன்னிக்கவும், மிஸிஸ் ஹெல்மர்.

நோரா—(திடுக்கிட்டுத் திரும்பி எழுந்திருக்கிறாள்.) ஹா! என்ன வேணும் உங்களுக்கு?

க்ராக்ஸ்டாட்—என்னை மன்னிக்கவும்; வெளிக் கதவு திறந்திருந்தது; யாரோ சாத்த மறந்து விட்டாற்போல் இருக்கிறது.

நோரா—(அவனை நெருங்கி) என் கணவர் வீட்டிலில்லை, மிஸ்டர் க்ராக்ஸ்டாட்.

க்ராக்ஸ்டாட்—தெரியும்.

நோரா—அப்படியானால் உங்களுக்கு இங்கே என்ன வேணும்?

க்ராக்ஸ்டாட்—தங்களுடன் ஒரு வார்த்தை பேச வேணும்.

நோரா—என்னுடனு? (குழந்தைகளைப் பார்த்து மெதுவாக) நீங்கள் எல்லோரும் உள்ளே தாதியிடம் போங்கள். என்ன? இவரா? இவர் அம்மாவை ஒன்றும் பண்ண மாட்டார். இவர் போனதும் நாம் மறுபடியும் விளையாடலாம். (குழந்தைகளை இடது பக்கம் இருக்கும் அறையில் விட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு வருகிறுள்.) என்னுடன் பேச விரும்புகிறீர்களா?

க்ராக்ஸ்டாட்—ஆம்.

நோரா—இன்றேயா? இன்னம் முதல் தேதி வரவில்லையே?

க்ராக்ஸ்டாட்—இல்லை: இன்று கிறிஸ்துமஸுக்கு முந்திய நாள். தங்கள் கிறிஸ்துமஸ் சந்தோஷகரமானதாக இருக்குமா, இராதா என்பது தங்களைப் பொறுத்தது.

நோரா—எனக்குப் புரியவில்லை. என்னுல் இன்று நிச்சயம் பணம் தர முடியாது. நான்......

க்ராக்ஸ்டாட்—அதைப் பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம்—இப்போ வேறொரு விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. ஒரு நிமிஷம் எனக்கு அளிக்க முடியுமா?

நோரா—முடியும், முடியும்; ஆனுல் எனக்கு......

க்ராக்ஸ்டாட்—சரி. நான் ஒல்ஸன் ஹோட்டலில் இருந்தேன். உங்கள் கணவர் தெருவோடு......

நோரா—ம்......

க்ராக்ஸ்டாட்—ஒரு ஸ்திரீயுடன் போவதைக் கண்டேன்.

நோரா—அதனுல் என்ன?

க்ராக்ஸ்டாட்—அந்த ஸ்திரீ மிஸிஸ் லிண்டேதானு என்று நான் கேட்கலாமா?

நோரா—ஆமாம், அது மிஸிஸ் லிண்டேதான.

க்ராக்ஸ்டாட்—இப்பொழுதுதான் இங்கு வந்தாளா அவள்?

நோரா—ஆம், இன்றுதான்.

க்ராக்ஸ்டாட்—அவள் உங்களுக்கு ரொம்ப சிநேகிதம், இல்லையா?

நோரா—ஆம். ஆனால் எனக்கு......

க்ராக்ஸ்டாட்—நானும் ஒரு காலத்தில் அவளை அறிவேன்.

நோரா—அது தெரியும் எனக்கு.

க்ராக்ஸ்டாட்—தெரியுமா? அப்படியானால் உங்களுக்கு அதைப் பற்றி எல்லாந் தெரியுமாக்கும். அப்படித்தான் நினைத்தேன் நானும். சுற்றிச் சுற்றி வராமல் நான் தங்களைக் கேட்க வந்ததைக் கேட்டுவிடுகிறேன். பாங்கில் மிஸிஸ் லிண்டேக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா?

நோரா—என் கணவரின் கீழ் வேலை செய்யும் நீர் என்னை எப்படி இதுமாதிரியெல்லாம் கேட்கலாம், மிஸ்டர் க்ராக்ஸ்டாட்? இருந்தாலும் நீர் கேட்டுவிட்டதால் சொல்லுகிறேன். ஆம்; மிஸிஸ் லிண்டே பாங்கில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறாள். நான்தான் அவளுக்குச் சிபாரிசு செய்தேன், மிஸ்டர் க்ராக்ஸ்டாட். அதையும் நீர் தெரிந்துகொள்ளவும்.

க்ராக்ஸ்டாட்—அப்படியானால் நான் நினைத்தது சரிதான்.

நோரா—(குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டு) சில சமயங்களில் ஒருவர் வார்த்தைக்கு மதிப்பு இருக்கிறதென்றே நம்புகிறேன் நான். ஒரு ஸ்திரீ என்பதற்காக அதனால் அவசியம்......ஒருவருக்குக் கீழ் வேலை செய்யவேண்டியிருப்பவர்கள் ஜாக்கிரதையாகப் பேசவேணும். அதுவும்

கோபமூட்டப்படுபவரின் வார்த்தைக்கு........வார்த்தைக்கு......

க்ராக்ஸ்டாட்—மதிப்பு இருக்குமானல்?...

நோரா—ஆம்.

க்ராக்ஸ்டாட்—(குரலை மாற்றிக்கொண்டு) மிஸிஸ் ஹெல்மர், நீங்கள் உங்கள் செல்வாக்கை எனக்கு அதிகமாக உபயோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நோரா—என்ன? எனக்குத் தெரியவில்லையே!

க்ராக்ஸ்டாட்—நான் பாங்கில் உத்தியோகத்தை இழந்துவிடாமல் தாங்கள்தான் பாதுகாக்க வேண்டும்.

நோரா—நீங்கள் சொல்லுவதின் அர்த்தம் என்ன? யார் உங்களை வேலையை விட்டு நீக்குவதாகச் சொன்னது?

க்ராக்ஸ்டாட்—ஒன்றுமே தெரியாதது போல் என்னுடன் பாசாங்கு பண்ண வேண்டிய அவசியமில்லை. உங்கள் சிநேகிதைக்கு என்னுடன் உட்கார்ந்து வேலை செய்ய மனமிராதுதான்; அது எனக்குத் தெரிகிறது. நான் நீக்கப்படுவதற்கு யார் காரணம் என்றும் நன்ருகத் தெரிகிறது.

நோரா—நான் சத்தியமாகச் சொல்லுகிறேன்......

க்ராக்ஸ்டாட்—இருக்கலாம். ஆனல் இப்போது விஷயம் இவ்வளவுதான். என் வேலை போய்விடாமல் உங்கள் செல்வாக்கைக் கொண்டு கவனித்துக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.

நோரா—ஆனல், மிஸ்டர் க்ராக்ஸ்டாட் எனக்கு என்ன செல்வாக்கு இருக்கிறது?

க்ராக்ஸ்டாட்—இல்லையா? இப்போதானே நீங்களே:.....

நோரா—நீர் அப்படி அர்த்தம் பண்ணிக்கொள்ள வேணு மென்று சொல்லவில்லை நான். நானு! நான் சொல்லும் வார்த்தைகளுக்கு என் கணவரா மதிப்புக் கொடுத்துக் கேட்டுவிடுவார்?

க்ராக்ஸ்டாட்—ஓ! உங்கள் கணவரை எங்களுடைய பள்ளிப் படிப்பிலிருந்து எனக்குத் தெரியும். மற்ற புருஷர்க ளிடம் கட்டாயப்படுத்திச் சாதித்துக் கொள்ளக்கூடிய காரியத்தை அவரிடமும் சாதிக்க முடியு மென்றுதான் நான் எண்ணுகிறேன்.

நோரா—என் கணவரைப் பற்றி ஏதாவது அவமரியாதை யாகப் பேசினுல் உம்மை என் வீட்டை விட்டு வெளியே துரத்திவிடச் சொல்லுவேன்.

க்ராக்ஸ்டாட்—நீங்கள் ரொம்பத் தைரியசாலிதான், மிஸிஸ் ஹெல்மர்.

நோரா—உம்மைக் கண்டு எனக்கென்ன இனிமேல் பயம்? புது வருஷம் பிறந்தவுடன்தான் எல்லாம் கொடுத்துத் தீர்த்தாகி விடுமே!

க்ராக்ஸ்டாட்—(தன் கோபத்தை யடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு) நான் சொல்வதைச் சற்று காதில் வாங்க வேண்டும், மிஸிஸ் ஹெல்மர். அவசியம் நேர்ந்தால் என் உயிரையே காப்பாற்றச் சண்டையிடுவது போல் பாங் கில் எனது அற்பச் சம்பளத்துக்கும் சண்டையிட நான் தயார்.

நோரா—அதுதான் தெரிகிறதே!

க்ராக்ஸ்டாட்—அந்தச் சம்பளத்துக்காக மட்டும் இல்லை. உண்மையில் அந்தச் சம்பளத்தைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை. நான் இப்படிச் சண்டை பிடிப்ப

தற்கு இன்னொரு காரணம் இருக்கிறது. உங்களிடம் ஒளித்து வைப்பானேன்? அதையும் சொல்லி விடுகிறேன். விஷயம் இதுதான். பல வருஷங் களுக்கு முன் ஒரு தரம் ஏதோ ஒரு தப்புக் காரியம் செய்துவிட்டேன். அது எல்லோருக்கும் தெரிந்திருப் பதுபோல் உங்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நம்பு கிறேன்.

நோரா—ஏதோ கேள்விப்பட்டதாக ஞாபகம் இருக்கிறது.

க்ராக்ஸ்டாட்—விஷயம் கோர்ட்டு வரையில் போகவில்லை. ஆனால் அச் சம்பவத்துக் கப்புறம் எனக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. அதற்கப்புறந்தான் நான்—உங்களுக் குத் தெரியுமே—அந்தத் தொழிலை ஆரம்பித்தேன். நான் ஏதாவது செய்து பிழைத்துத்தானே யாக வேணும். உண்மையில் நான் என்றும் யாருடனும் ரொம்ப மோசமாக நடந்து கொண்டதே கிடையாது. ஆனால் இப்போது நான் என் பழைய வாழ்வை மறக்க வேணும். என் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகிக் கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்காகவேணும் நான் இந்த நகரில் ஏதோ மதிப்புத் தேடிச் சம்பாதித்தாக வேணும். இந்தப் பாங்கில் ஒரு கௌரவமான ஸ்தா னத்தை—அது எவ்வளவு சின்னதானாலும்—நான் இழந்துவிட்ட மதிப்பை மீண்டும் பெற எனக் குதவும் என்று நம்பியிருந்தேன். இப்போது உங்கள் கணவர் என்னை உதைத்துத் தள்ளி மறுபடியும் சேற்றில் அமுக்கிவிடப் பார்க்கிறார்.

நோரா—என்னை நம்ப வேண்டும் நீர், மிஸ்டர் க்ராக்ஸ்டாட். தங்களுக்கு உதவி செய்ய எனக்குச் சக்தி யில்லை.

க்ராக்ஸ்டாட்—எனக்கு உதவி செய்யத் தங்களுக்குச் சக்தி யில்லாததற்குக் காரணம் தங்களுக்கு மனமில்லாதது தான். ஆனால் எனக்கு உதவி செய்ய நான் தங்களைக் கட்டாயப்படுத்துவேன்; அதற்கு வேண்டிய வழியும் எனக்கிருக்கிறது.

நோரா—நான் தங்களுக்குப் பணம் கொடுக்க வேணுமென் பதை என் கணவரிடம் தெரிவித்து விடுவீர்கள் என்று சொல்லுகிறீர்களா?

க்ராக்ஸ்டாட்—...உம்...ம்...சொல்லி விடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்...

நோரா—என்ன அயோக்யத்தனம்! (அழுதுகொண்டு) என் பெருமைக்கும் என் சந்தோஷத்துக்கும் காரணமாக இருந்த ரகசியத்தை இவ்வளவு விரஸமாக அவர் அறிய வேண்டி வந்தால்—ஹூம், உம்மிட மிருந்தா அவர் அறிய வேணும்? நான்...என்ன விகாரம்?

க்ராக்ஸ்டாட்—விகாரம் மட்டுந்தானா?

நோரா—(கோபமாக) போய்ச் சொல்லிக் கொள்ளும், அப்படி யானால்!—உமக்குத்தான் கஷ்டம் அதற்கப்புறம்—நீர் எவ்வளவு அயோக்யன் என்று அவருக்குச் சந்தேக மின்றித் தெரிந்து விடும். அதற்கப்புறம் உம் வேலை வேலைதான்...

க்ராக்ஸ்டாட்—விஷயம் உங்கள் கணவருக்குத் தெரிந்தால், விகாரத்தையும் விரஸத்தையுந் தவிர வேறு ஒன்று மில்லையா?

நோரா—என் கணவருக்குத் தெரிந்தால் பாக்கி யிருப்பதை உடனே கொடுத்து விடுவார். அப்புறம் நான் உம் முகத்தில் விழிக்க வேண்டியதே யில்லை...

க்ராக்ஸ்டாட்—(ஓரடி கிட்ட நகர்ந்து) இதைக் கேளுங்கள், மிஸிஸ் ஹெல்மர்: உங்களுக்கு ஞாபகப் பிசகா? அல்லது உண்மையிலேயே ஒரு விஷயமும் தெரியாதா? நான் உங்களுக்கு இரண்டொரு சில்லறை விஷயங்களை ஞாபகப்படுத்தட்டுமா?

நோரா—என்னது?

க்ராக்ஸ்டாட்—உங்கள் கணவருக்கு உடம்பு சரியாக இல்லாத போது நீங்கள் என்னிடம் இருநூற்றியைம்பது பவுன் கடன் வாங்க வந்தீர்கள்.

நோரா—வேறு யாரிடம் வாங்க முடியும் என்று தெரியவில்லை.

க்ராக்ஸ்டாட்—நான் உங்களுக்குப் பணம் தருவதாக வாக்களித்தேன்—

நோரா—ஆம், கொடுக்கவும் கொடுத்தீர்.

க்ராக்ஸ்டாட்—சில நிபந்தனைகளுக் குட்பட்டு அந்தப் பணத்தைத் தருவதாக வாக்களித்தேன் நான். உங்கள் கணவரின் உடம்பைப் பற்றிய கவலையாலும், யாத்திரைக்குப் பணம் வேணு மென்கிற அவசரத்தாலும், நீங்கள் அந்த நிபந்தனைகளைப் பற்றி அதிகக் கவலைப்படவில்லை யென்று எண்ணுகிறேன். அந்த நிபந்தனைகளை இப்போது உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டி யிருப்பது என் தவறில்லை. நான் உங்களிடம் பணம் கொடுக்கு முன் உங்களிடம் ஒரு பத்திரம் எழுதிக் காட்டினேன்.

நோரா—ஆம், நான் அதில் கையெழுத்திட்டு உம்மிடம் கொடுத்துவிட்டேனே!

க்ராக்ஸ்டாட்—ஆம். ஆனால் உங்கள் கையொப்பத்துக்குக் கீழே நாலு வரிகள் அந்தப் பணத்துக்கு ஜாமீனாக உங்

கள் தகப்பனுரைக் கண்டு எழுதி யிருந்தது. இதற்கு அவருடைய ஒப்பம் வேணு மென்று சொன்னேன்.

நோரா—ஆம், அவரும் கையொப்பமிட்டுக் கொடுத்தாரே!

க்ராக்ஸ்டாட்—நான் அதற்குத் தேதி போடாமல் கொடுத்தேன் உங்களிடம். அதாவது உங்கள் தகப்பனுர் கையெழுத்திட்டுவிட்டுத் தேதியும் போட்டிருக்க வேணும். ஞாபகம் இருக்கிறதா?

நோரா—இருக்கிறது.

க்ராக்ஸ்டாட்—பத்திரத்தைத் தபாலில் அவருக்கு அனுப்பச் சொல்லி உங்களிடம் கொடுத்தேன், இல்லையா?

நோரா—ஆம்.

க்ராக்ஸ்டாட்—நீங்கள் அதை உடனே அனுப்பிவிட்டீர்கள் போலிருக்கிறது. ஏனெனில் அதற்கு நாலைந்து நாட்களுக் கப்புறம் பத்திரத்தை உங்கள் தகப்பனுருடைய கையெழுத்துடன் நீங்கள் என்னிடம் கொண்டு வந்தீர்கள். நானும் பணத்தைக் கொடுத்தேன்.

நோரா—ஆம். நானும் மாதந் தவருமல் உமது பணத்தை வட்டியுடன் சிறுகச் சிறுகக் கொடுத்துக்கொண்டுதானே வருகிறேன்?

க்ராக்ஸ்டாட்—கிட்டத்தட்டச் சரியாகத்தான் செலுத்தி வருகிறீர்கள்—அது கிடக்கட்டும்—இப்போது பேசுவது வேறு விஷயம். அப்போது உங்களுக்கு ரொம்ப சிரமமான காலம் இல்லையா, மிஸிஸ் ஹெல்மர்?

நோரா—உண்மையாகவே ரொம்ப சிரமமான காலந்தான்.

க்ராக்ஸ்டாட்—உங்கப்பாவுக்கும் உடம்பு சரியாக இல்லை, இல்லையா?

நோரா—ஆம் : அவர் அந்தியகாலம் சமீபித்திருந்தது.

க்ராக்ஸ்டாட்—அதற்கப்புறம் அவர் சீக்கிரம் மரண மடைந்துவிட்டார், இல்லையா?

நோரா—ஆம்.

க்ராக்ஸ்டாட்—உங்கப்பா என்றைக்குச் செத்துப் போனார் என்று ஞாபகம் இருக்கிறதா உங்களுக்கு? எந்தத் தேதி, எந்த மாதம் என்று ஞாபகம் இருந்தால் சொல்லுங்கள், மிஸிஸ் ஹெல்மர்?

நோரா—அப்பா செப்டம்பர் 29-ந் தேதி இறந்தார்.

க்ராக்ஸ்டாட்—சரி; நானும் அந்தத் தேதியை விசாரித்து அறிந்துகொண்டேன். ஆம். (சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்துக்கொண்டே) அப்படியானால் இதில் இருக்கும் ஒரு தவறுக்கு என்னால் அர்த்தம் கண்டுபிடிக்க முடியவில்லை.

நோரா—எந்தத் தவறு? என்ன அது? எனக்கு ஒன்றும் புரியவில்லை.

க்ராக்ஸ்டாட்—இதுதான் தவறு, மிஸிஸ் ஹெல்மர் : உங்கள் தகப்பனார் இறந்து மூன்று நாட்களுக்குப் பிறகு இந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்!

நோரா—என்னது? எனக்குப் புரியவில்லை—

க்ராக்ஸ்டாட்—உங்கப்பா இறந்தது செப்டம்பர் 29-ந் தேதி. ஆனால் இங்கே பாருங்கள். உங்கப்பா இந்தக் கையெழுத்துக்கு அக்டோபர் 2 என்று தேதி போட்டிருக்கிறார். இது தவறுதானே? (நோரா மௌனமாக இருக்கிறாள்) அதன் அர்த்தம் என்ன? (நோரா ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாகவே இருக்கிறாள்) இன்

ஞெரு விசேஷங்கூட. தேதியும் வருஷமும் உங்கப்பா கையெழுத்தில் இல்லை; யாரோ எனக்குத் தெரிந்தவர்களுடைய கையெழுத்து மாதிரி இருக்கிறது. அதற்கு அர்த்தம்—வேறு ஏதாவதாக இருக்கலாம். உங்கப்பா கையெழுத்து மாத்திரம் போட்டுவிட்டுத் தேதி போட மறந்து போயிருக்கலாம்; அவர் இறந்துவிட்டதை யறியாது யாராவது தற்செயலாகத் தேதியைப் போட்டு உங்களுக்கு அனுப்பி யிருக்கலாம். அப்படி யிருந்தால் அதில் தப்பில்லை. கையொப்பந்தான் சரியாக இருக்க வேண்டும், மிஸிஸ் ஹெல்மர்: அதுதான் முக்கியம். ஒப்பம் உண்மையானதுதானே? உங்கப்பாதானே கையெழுத்திட்டார் இங்கு?

நோரா—(சற்று நேரங் கழித்து, மிடுக்காய்த் தலை நிமிர்ந்து, அவனை எதிர்க்கத் துணிந்தவளாய் ஒரு பார்வை பார்த்து) அதுவும் சரியில்லை. நான்தான் அப்பாவின் கையெழுத்தைப் போட்டேன்.

க்ராக்ஸ்டாட்—இப்படி ஒப்புக்கொள்ளுவது ரொம்ப ஆபத்தானது என்று தெரியுமா உங்களுக்கு?

நோரா—எந்த விதத்தில்? உமது பணந்தான் வட்டியுடன் ஒழுங்காகத் திருப்பிக் கொடுக்கப்பட்டு வருகிறதே!

க்ராக்ஸ்டாட்—நான் ஒன்று கேட்கிறேன் சொல்லுங்கள்—நீங்களேன் இந்தப் பத்திரத்தை உங்கள் தகப்பனுரிடம் அனுப்பவில்லை?

நோரா—அது சாத்தியப்படவில்லை. அவர் சாகக் கிடந்தார். அவரைக் கையெழுத்துப் போடச் சொன்னால் பணம் எதற்காக என்று அவரிடம் சொல்ல வேண்டியிருக்கும். அவர் தன் உயிருக்கே மன்றாடிக்கொண் டிருக்கையில்

அவர் மனத்தில் என் கணவனைப் பற்றியும் கவலை எழுப்பலாமா?

க்ராக்ஸ்டாட்—நீங்கள் உங்கள் பிரயாணத்தை நிறுத்தியிருந்தால் இப்போ கஷ்டப்படாமல் இருக்கலாம்.

நோரா—அதெப்படி முடியும்? என் கணவரின் உயிரைக் காப்பாற்ற அந்தப் பிரயாணம் அவசியமாக இருந்ததே!

க்ராக்ஸ்டாட்—நீங்கள் செய்தது என்னை ஏமாற்றுவதாகுமே என்று எண்ணிப் பார்க்கவே யில்லையா?

நோரா—நான் அதைப் பற்றி யோசிக்கவே யில்லை. உம்மைப் பற்றி எனக்கென்ன கவலை? உம்மைக் கண்டால் எனக்குப் பிடிக்கவே யில்லை. என் கணவன் எவ்வளவு அபாயகரமான நிலையில் இருந்தார் என்று அறிந்தும், நீர் எனக்குப் பணங் கொடுக்கு முன் ஏகப்பட்ட இடைஞ்சல்களையும், நிபந்தனைகளையும் புகுத்தினீர்!

க்ராக்ஸ்டாட்—மிஸிஸ் ஹெல்மர்! உண்மையிலேயே நீங்கள் இன்னம் உங்கள் குற்றம் பூராவையும் அறியவில்லை என்றே தெரிகிறது. ஆனால் சத்தியமாகச் சொல்லுகிறேன்: நான் என் மதிப்பு, கௌரவம், பெயர் எல்லாவற்றையும் இழந்து, அயோக்யன் என்ற பட்டம் பெற்றது இது மாதிரி ஒரு காரியத்தினால்தான். நான் செய்த குற்றம் நீங்கள் செய்திருப்பதைவிடச் சற்றும் உயர்ந்ததுமில்லை, தாழ்ந்ததுமில்லை.

நோரா—நீரா? நீர் உம் மனைவியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இப்படி ஒரு காரியம் செய்தீர் என்று என்னை நம்பச் சொல்லுகிறீரா?

க்ராக்ஸ்டாட்—சட்டம் எந்த நோக்கத்துடன் ஒரு காரியம் செய்யப்பட்டதென்று கவனிப்பதில்லை.

நோரா—அப்படியானால் அது மிகவும் பைத்தியக்காரத்தன மான சட்டம்.

க்ராக்ஸ்டாட்—பைத்தியமோ இல்லையோ, அந்தச் சட்டம் நான் இந்தப் பத்திரத்தைக் கோர்ட்டில் காட்டினால் என்னைப் போலவே உங்களையும் மதிப்பிட்டுவிடும்.

நோரா—நான் நம்பவில்லை. சாகக் கிடக்கும் தன் தகப்பனைக் கவலைப்படாமல் வைத்துக்கொள்ள மகள் கடமைப்பட்டவள் இல்லையா? தன் கணவரின் உயிரை எப்படியாவது காப்பாற்ற ஒரு மனைவிக்குச் சுதந்திரங் கிடையாதா? எனக்குச் சட்டத்தைப் பற்றி அதிகந் தெரியாது. ஆனால் நான் இப்படிச் செய்தது சரி என்று சொல்லும் சட்டங்கள் இருக்கத்தான் வேணும். நீரும் வக்கீல் தானே! உமக்கு இது மாதிரிச் சட்டங்கள் இருப்பது தெரியாதா? அசட்டு வக்கீல் நீர், மிஸ்டர் க்ராக்ஸ்டாட்.

க்ராக்ஸ்டாட்—இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட பேரங்கள் சம்பந்தப்பட்ட வரையில்—நமக்குள் ஏற்பட்ட இந்தப் பேரத்தைப் பற்றித் தெரியவேண்டியதெல்லாம் எனக்குத் தெரியும். தெரியாதென்று நினைக்கிறீர்களா? உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள். ஆனால் ஒன்று சொல்லிவிடுகிறேன்—இந்த இரண்டாவது தடவையும் நான் என் வேலையை யிழந்து விழ நேரிடுமானால் நீங்களும் என்னுடன் விழ வேண்டியவர்கள் தான்.

(குனிந்து வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, கூடத்தின் வழியே வெளியேறுகிறான்.)

நோரா—(சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்திருக்கிறாள். அப்புறம் தலையை ஒரு தரம் குலுக்கிக்கொண்டு) பேத்தல்! என்னை அவன் இப்படி யெல்லாம் பயமுறுத்தப் பார்க்

கிறுன்! அவன் நினைக்கிறபடி அவ்வளவு அசடில்லை நான். (அறையில் குழந்தைகளின் சட்டைத் துணிகள் சிதறிக் கிடப்பதைச் சுறுசுறுப்பாகப் பொறுக்கிக் கொண்டே) இருந்தாலும்......அப்படி ஒண்ணும் இருக்க முடியாது! நான் என் அன்பினுல் அன்றோ அப்படிச் செய்தேன்!

குழந்தைகள்—(இடது புறக் கதவுப் படியிலிருந்து) அம்மா! அவன், அந்த அந்நியன் கேட்டு வழியாகப் போய் விட்டான்.

நோரா—ஆமாம், என் கண்ணுகளா! எனக்குத் தெரியும். ஆனுல் அவனைப் பற்றி நீங்கள் யாரிடமும் சொல்லக் கூடாது. காதில் விழுகிறதோ? அப்பாவிடங்கூடச் சொல்லக்கூடாது.

குழந்தைகள்—இல்லை, அம்மா: சொல்லல்லை. அம்மா! மறுபடியும் விளையாடலாம் வரயா?

நோரா—இல்லை: இப்போ வேண்டாம்.

குழந்தைகள்—அவன் போனதும் விளையாட வரேன்னு சொன்னயே, அம்மா!

நோரா—ஆமாம்: ஆனுல் இப்போ என்னுல் விளையாட வர முடியாது. உள்ளே ஓடிப் போங்கள்: எனக்கு ரொம்ப வேலை யிருக்கிறது, என் செல்லக் கண்மணிகளா!

(குழந்தைகளை ஒவ்வொன்ருய் உள்ளே விட்டு கதவைச் சாத்திக்கொண்டு வருகிருள். அப்புறம் ஸோபாவில் உட்கார்ந்து தையல் வேலையை எடுத்து இரண்டு தையல் போடுகிருள். சீக்கிரம் அதையும் நிறுத்தி விடுகிருள்.)

வேண்டாம்!

(தைத்ததைக் கீழே போட்டுவிட்டுக் கூடத்துக் கதவண்டை போய், உரக்க)

ஹெலன்! அந்தக் கிறிஸ்துமஸ் மரத்தைக் கொண்டுவா!

(இடது புறம் மேஜையை யணுகி, டிராயரைத் திறக்கிருள். அங்கு செய்ய வந்ததையும் பாதியில் நிறுத்தி விடுகிருள்.) இப்போ முடியாது!

வேலைக்காரி—(கிறிஸ்துமஸ் மரத்துடன் உள்ளே வந்து) இதை எங்கே வைக்க அம்மா?

நோரா—இங்கே, அறை நடுவில், தரையில் வை.

வேலைக்காரி—வேறு ஏதாவது வேணுமா?

நோரா—வேண்டாம், எல்லாம் இங்கேயே இருக்கு. (வேலைக்காரி போகிருள்.)

நோரா—(கிறிஸ்துமஸ் மரத்துக்கு அலங்காரம் பண்ண ஆரம்பித்துக்கொண்டு) இங்கு ஒரு மெழுகுவத்தி, இங்கே பூக்கள்—அயோக்ய சிகாமணி; எல்லாம் பேத்தல்—தப்பு ஒன்றுமில்லை. மரம் அழகாக இருக்க வேணும். தார்வால்ட், உனக்காக, உன்னைத் திருப்தி செய்ய நான் என்ன வேணுமானுலுஞ் செய்வேனே!—ஆடுவேன்—பாடுவேன்! (ஹெல்மர், கையில் பல கடிதங்களுடன், உள்ளே வருகிருன்) ஓ! அதுக்குள் வந்தாச்சா?

ஹெல்மர்—ஆம். நான் போன பிறகு இங்கு யாராவது வந்தார்களா?

நோரா—இங்கேயா? இல்லையே!

ஹெல்மர்—இல்லையா? க்ராக்ஸ்டாட் வெளி கேட்டு வழியாகப் போவதை நான் பார்த்தேனே!

நோரா—ஓ! க்ராக்ஸ்டாட்டா? ஆம். அவன் இங்கு வந்து ஒரு நிமிஷம் இருந்தான்.

ஹெல்மர்—நோரா உன்னைப் பார்த்தால் தெரிகிறதே! அவன் தன்னைப் பற்றி என்னிடம் ஒரு நல்ல வார்த்தை சொல்ல வேண்டிக்கொண்டான் என்று தோன்றுகிறது.

நோரா—ஆம்.

ஹெல்மர்—தான் இங்கு வந்ததை என்னிடம் சொல்லக் கூடாது என்றும், நீயாகச் சொல்லுவது போலச் சொல்ல வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டானுக்கும்?

நோரா—ஆம், தார்வால்ட். ஆனால்...

ஹெல்மர்—நோரா! நோரா! நீயும் இப்படிச் செய்யலாமா? அந்த மாதிரி மனிதனுடன் நீ பேசலாமோ? அதுவும் அவனுக்கு நீ ஏதாவது வாக்களிக்கலாமோ? போதாத தற்கு என்னிடம் ஒரு பொய்யும் சொல்லத் துணியலாமா?

நோரா—பொய்யா?

ஹெல்மர்—யாரும் வரவில்லை யென்று சொன்னாயே! (அவளைப் பார்த்து விரலை ஆட்டிக்கொண்டு) என் கிளிக் குஞ்சு மறுபடியும் இது மாதிரிச் செய்யக்கூடாது! தெரியுமோ? நன்றாய்ப் பாடுகிற கிளி பொய் சொல்லித் தன் நாக்கை அழுக்குப் பண்ணிக் கொள்ளலாமோ? (அவள் இடுப்பைப் பிடித்துக் கட்டிக்கொண்டு) அப்படித்தானே! இல்லையா? அப்படித்தான். (அவளை விட்டு நகருகிறான்) அதைப் பற்றி இனிமேல் பேச வேண்டாம். (கணப்பின் அருகில் உட்கார்ந்துகொண்டு) எவ்வளவு சௌக்யமாக இருக்கிறது இங்கே! (கையில் கொண்டு வந்த கடிதங்களைப் புரட்டுகிறான்.)

நோரா—(கிறிஸ்துமஸ் மரத்துக்கு அலங்காரஞ் செய்து கொண் டிருக்கிருள். சற்று நேரங் கழித்து) தார்வால்ட்!

ஹெல்மர்—ஏன் ?

நோரா—நாளனன்று ஸ்டென்ஸ்போர்க் தம்பதிகளின் வீட் டில் விநோத ஆடைக ளணிந்து நடனமாடும் கச்சேரியை நான் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் தெரி யுமோ ?

ஹெல்மர்—நீ எந்த ஆடை அணிந்து போகப் போகிருய் என்று அறிந்து ஆச்சரியப்பட நான் தயாராக இருக் கிறேன்.

நோரா—உன்னை ஆச்சரியப்பட வைக்கவேணு மென்று நான் எண்ணியது என்ன அசட்டுத்தனம் ?

ஹெல்மர்—ஏன், நோரா ?

நோரா—எந்த ஆடையில் போவது என்று என்னல் தீர் மானிக்க முடியவில்லை. நான் நினைப்பதெல்லாம் சரியாக இல்லை : அழகாகவுமில்லை !

ஹெல்மர்—அப்பாடி ! இப்பதான் இது என் அருமை நோரா வுக்கு தெரியவந்ததாக்கும் !

நோரா—(ஹெல்மரின் நாற்காலிக்குப் பின்னல் நின்று கொண்டு நாற்காலியின் கைகளின் பேரில் தன் கைகளை வைத்தபடி) ரொம்ப வேலை இருக்கிறதா, தார்வால்ட் ?

ஹெல்மர்—உம்...ம்...ம்.

நோரா—இதெல்லாம் என்ன காகிதங்கள் ?

ஹெல்மர்—பாங்கைப் பற்றிய காகிதங்கள்.

நோரா—அதற்குள்ளேயா ?

ஹெல்மர்—பாங்க் ஆபீஸில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களை யெல்லாம் இப்பவே ஆரம்பிக்க வேலையிலிருந்து விலகிக்கொள்ளும் மானேஜர் எனக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். குமஸ்தாக்களை மாற்றவும், போகச் சொல்லவும், வேலை முறையைத் திருத்தி யமைக்கவும் வேண்டியிருக்கிறது. கிறிஸ்துமஸ் வாரத்தை அதற்கு உபயோகப்படுத்தி விட்டால், புது வருஷத்தைத் திருப்திகரமாக ஆரம்பிக்கலாம்.

நோரா—ஓ! அதனால்தான் இந்த ஏழை க்ராக்ஸ்டாட்......

ஹெல்மர்—ம்......ம்......ம்......

நோரா—(அவன் நாற்காலி மேல் சாய்ந்து அவன் தலைமயிரைத் தடவிக்கொண்டு) உனக்கு இப்போ வேலை அதிகமில்லையானால் எனக்கு ஒரு பெரிய காரியம் உன்னைச் செய்யச் சொல்லுவேன், தார்வால்ட்.

ஹெல்மர்—என்ன செய்ய வேண்டும், சொல்லு.

நோரா—உன்னைப் போல் ரஸனை யுடையவர்கள் யாருமில்லை. தார்வால்ட். அந்த விநோத ஆடை நடனத்தில் நான் அழகாக இருக்க வேண்டாமா? தார்வால்ட், நான் எப்படி எந்த ஆடை தரித்துப் போவது என்று நீதான் தீர்மானித்துச் சொல்லேன்.

ஹெல்மர்—ஹோ! இந்தப் பிடிவாதப் பெண்ணுக்கு இப்போதான் ஒத்தாசைக்கு யாரோ வரவேண்டி யிருக்கோ?

நோரா—ஆமாம். தார்வால்ட், உன் உதவியின்றி நான் எப்படிக் காலந்தள்ள முடியும்?

ஹெல்மர்—ரொம்ப சரி, நான் யோசனை செய்து பார்க்கிறேன். நாம் நல்லதாக, அழகாக ஏதாவது கண்டுபிடிக்கலாம்.

நோரா—உன்னைப் போல் உண்டோ! (கிறிஸ்துமஸ் மரத்தண்டை போகிறாள். சற்று நேரம் மௌனம்) இந்த சிவப்புப் பூக்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன—ஆனால், எனக்குச் சொல்லேன்: க்ராக்ஸ்டாட் என்ன அவ்வளவு பெரிய குற்றம் செய்தான்?

ஹெல்மர்—அவன் பொய்க் கையெழுத்திட்டான்—அப்படியென்றால் உனக்கு அர்த்தந் தெரியுமோ?

நோரா—அவன் அப்படிச் செய்ய ஏதாவது அவசியமிருந்ததோ என்னவோ? வேறு வழி ஒன்று மில்லாமல் அப்படிச் செய்திருக்கலா மல்லவா?

ஹெல்மர்—இருக்கலாம். இல்லை, பல இடங்களில் நடப்பது போல், முன்பின் யோசனையின்றிச் செய்யப்பட்டதோ என்னவோ? அது மாதிரித் தவறுதலாக ஒரு தப்பு அடி எடுத்து வைத்துவிட்டதற்காக நான் யாரையும் மனப்பூர்வமாகக் குற்றஞ் சாட்டுபவன் அல்ல. என் மனம் அதற்கு இடங் கொடுக்காது.

நோரா—இல்லை. நீ அப்படிச் செய்யமாட்டாய், இல்லையா? தார்வால்ட்?

ஹெல்மர்—எத்தனையோ பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையையும் அநுபவித்துத் திருந்தியதில்லையா, என்ன?

நோரா—தண்டனை......?

ஹெல்மர்—ஆனால் க்ராக்ஸ்டாட் இது மாதிரியெல்லாம் ஒன்றுஞ் செய்யவில்லை. ஒரு கெட்டிக்காரத்தனமான தந்திரத்தால் எல்லோரையும் ஏமாற்றிவிட்டுத் தண்டனையிலிருந்து தப்பினான். அதனால்தான் அவன் முற்றிலும் சேற்றில் அழுந்தி விட்டான்.

நோரா—ஆனால் நீ அதுவும்......

ஹெல்மர்—சற்று யோசனை செய்து பார். அவனைப் போலக் குற்றம் செய்தவன் ஒருவன் எவ்வளவு பொய் சொல்ல வேண்டி வருகிறது; எத்தனை பேர்களிடம் ருத்திராக்ஷப் பூனையாக நடிக்க வேண்டி யிருக்கிறது. அவனுக்கு நெருங்கியவர்களிடம், அவனிடம் அன்புள்ளவர்களிடம் தன் உண்மை ரூபத்தைக் காட்டாமல், அவன் ஏமாற்ற வேண்டி யிருக்கிறது. அவன் மனைவியும் குழந்தை களும்கூட அவனுடைய சுய ரூபத்தை அறிய மாட்டார்களே! குற்றவாளியின் குழந்தைகள்—அதுதான் மகா கொடூரமான விஷயம், நோரா.

நோரா—எப்படி?

ஹெல்மர்—ஏனெனில் அத்தகைய பொய்க் காற்று ஒரு குடும்பத்தில் நோய்க்கிருமிகளை நிறைத்து, விஷத்தைப் பரப்புகிறது. அப்படிப்பட்ட குடும்பத்தில் குழந்தைகள் இழுக்கும் ஒவ்வொரு மூச்சிலும் தீவினையின் விதைகள் நிறைந்திருக்கும்.

நோரா—(அவனை நெருங்கி) நிஜமாகத்தானா? உண்மையிலேயா?

ஹெல்மர்—என் கண்ணே, உண்மைதான் இது. நான், வக்கீல் என்ற ஹோதாவில், ஒவ்வொரு வினாடியும் இதன் உண்மையைக் கண்டிருக்கிறேன். சிறு வயதிலேயே குற்றம் செய்த ஒவ்வொருவனுக்கும் அவன் ரத்தத்தில் பாவ வித்துக்களை ஊன்றியவள் அவனுடைய அயோக்யத் தாயாய்த்தா னிருக்கவேணும்.

நோரா—ஏன் தாய் என்று மட்டும் சொல்லுகிறாய்?

ஹெல்மர்—தகப்பனின் கெட்ட பழக்கங்களுக்கும் இதே பலன் இருப்பினும், அநேகமாகத் தன் தாயினால் கெட்டவனாக்கப்படுவதுதான் உலகில் சகஜமாகக் காணப்படுவது. இந்த உண்மை எல்லா வக்கீலுக்கும தெரியும். இந்த க்ராக்ஸ்டாட் இருக்கிறானே, இவன் தன் சொந்தக் குழந்தைகளுக்கே இடைவிடாமல் இம்மாதிரி விஷ விதைகளை ஊட்டி வந்திருக்கிறான்; அதனால்தான் நான் அவனை ஒழுக்கமெல்லாம் கெட்ட படுபாவி என்கிறேன். (தன் கைகளை அவள் பக்கம் நீட்டி) அதனால்தான் இனிமேல், என் பிரிய நோரா, அவனுடைய விஷயத்தைப் பிரஸ்தாபிக்கக் கூடாது என்கிறேன். உன் கையைக் கொடு இப்படி. வா, வா. அதைப் பற்றி இனிமேல் என்ன? கையைக் கொடு. இப்போ எல்லாம் சரியாகப் போய்விட்டது. என்னால் அவனுடன் உட்கார்ந்து வேலை செய்ய முடியாது என்பது நிச்சயம்; இம்மாதிரி மனிதர்களுடன் இருக்கும் போது எனக்கு உடம்பை என்னவோ பண்ணுகிறது. வாந்தி யெடுக்க வருகிறது எனக்கு.

நோரா—(தன் கையை அவன் கையிலிருந்து விடுவித்துக் கொண்டு, கிறிஸ்துமஸ் மரத்தைத் தாண்டி அந்தண்டை நடக்கிறாள்) எவ்வளவு புழுக்கமாய் இருக்கிறது இங்கே? ஏகப்பட்ட வேலை இன்னம் பாக்கி கிடக்கிறது!

ஹெல்மர்—(எழுந்து தன் கடிதங்களை அடுக்கிக் கையில் எடுத்துக்கொண்டு) ஆம்: சாப்பாட்டுக்கு முன் நானும் இதில் ஏதாவது கொஞ்சமாவது பார்த்தாக வேண்டாமா? உன் ஆடையைப் பற்றியும் யோசிக்க வேணும், இல்லையா? தங்கத் தாளில் கிறிஸ்துமஸ் மரத்தில் தொங்கவிட நான்கூட ஏதாவது தயார் பண்ணி வைத்தாலும் வைக்கி

றேன். (அவள் தலையை மெதுவாகத் தட்டிக்கொண்டே) நீ என் அருமைக் குயில்தானே! (அவன் தன் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொள்ளுகிறான்.)

நோரா—(சற்று நேரங் கழித்து, மெல்லிய குரலில், குசுகுசுவென்று) இருக்காது, இருக்காது—அது உண்மையில்லை. அது சாத்தியமில்லை. அப்படி இருக்கவே முடியாது! (தாதி இடதுபுறக் கதவைத் திறக்கிறாள்.)

தாதி—குழந்தைகளெல்லாம் இங்கு உங்களிடம் வரவேணுமென்று கெஞ்சுகின்றன.

நோரா—வேண்டாம்! வேண்டாம்! வேண்டாம்! அவர்களை என்னிடம் வரவிடாதே! நீ அவர்களுடனேயே இரு, ஆன்.

தாதி—சரி, அம்மா. (கதவைச் சாத்தி விடுகிறாள்.)

நோரா—(பீதியால் வெளுத்து) என் குழந்தைகளையே கெடுத்துப் பாழ் பண்ணிவிடுவேனா? என் வீட்டில் விஷமா நான்? (சிறிது நேரம் மௌனம். அப்புறம் இல்லையென்ற பாவனையில் தலையை ஆட்டிக்கொண்டு) அது உண்மையில்லை; உண்மையாக இருக்கவே முடியாது.



## அங்கம் 2.

[அதே இடம்—பியானோவுக் கருகில் மூலையில் கிறிஸ்துமஸ் மரம நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது; அதன் அலங்காரங்கள் எல்லாம் காணப்படவில்லை. அதில் வைத்திருந்த மெழுகுவத்திகள் அடி வரையில் எரிந்துவிட்டன; அதன் கிளைகள் அலங்கோலமாகப் பிய்த்தெடுக்கப்பட் டிருக்கின்றன. நோராவின் போர்வையும் தொப்பியும் ஸோபாவின் மேல் கிடக்கின்றன. அறையில் அவள் மட்டுந்தா னிருக்கிறாள்; மன நிம்மதியின்றி நடப்பது போல அங்குமிங்கும் தளர்வாக நடந்துகொண் டிருக்கிறாள். அவள் சோபாவுக்கருகில் நின்று தன் போர்வையை எடுத்துக் கொள்ளுகிறாள்.]

நோரா—(தன் போர்வையைக் கீழே போட்டுவிட்டு) யாரோ வருகிறாப்போல் இருக்கிறதே! (கதவண்டை போய்க் கவனிக்கிறாள்.) இல்லை—யாருமில்லை. நிச்சயமாக, இன்று யாரும் வர மாட்டார்கள்—இன்று கிறிஸ்துமஸ்—நாளைக்கும் யாரும் வரமாட்டார்கள். ஆனால், ஒருகால்—(கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்க்கிறாள்) இல்லை, கடிதங்கள் போடும் பெட்டியிலும் ஒன்றுமில்லை; அது காலியாக இருக்கிறது. (முன் வருகிறாள்) என்ன அசட்டுத்தனம்! நிச்சயம் அவன் அதெல்லாவற்றையும் என்னைப் பயமுறுத்தவே சொல்லியிருப்பான்! அதில் அவனுக்குத் தீவிரம் இருக்க முடியாது. அந்த மாதிரியும் எனக்கு நடக்க முடியுமா? சாத்யமில்லை. எனக்கு மூன்று சிறு குழந்தைகள் இருக்கின்றனவே.

[தாதி, கையில் ஒரு பெரிய அட்டைப் பெட்டியுடன், இடது புற அறையிலிருந்து உள்ளே வருகிறாள்.]

தாதி—விநோத ஆடைகள் வைத்திருக்கும் பெட்டியைக் கடைசியில் கண்டுபிடித்து விட்டேன்.

நோரா—நல்லது ; அதை மேஜைமேல் வை.

தாதி—(பெட்டியை மேஜைமேல் வைத்துக்கொண்டு) ஆனால் அதைப் பல இடங்களில் தைத்துச் சீர்ப்படுத்த வேண்டும்.

நோரா—அதைச் சுக்கு நூருகக் கிழித்து எறிந்துவிட விரும்புகிறேன் நான்.

தாதி—என்ன அசட்டு யோசனை ! அதை ரொம்ப சுலபமாகச் சீர்ப்படுத்தி விடலாம்—கொஞ்சம் பொறுமைதான் வேணும்.

நோரா—ஆம் : நான் போய் எனக்கு ஒத்தாசையாக மிஸிஸ் லிண்டேயையும் அழைத்து வருகிறேன்.

தாதி—என்ன ? மறுபடியும் வெளியிலேயா போகணும் ? இந்தக் குளிரிலும் சாரலிலுமா ? ஜலதோஷம் பிடித்துவிடும், அம்மா, ஜுரமும் வந்துவிடும்.

நோரா—உம், அதைவிட மோசமாக ஏதாவது நிகழ்ந்தாலும் நிகழலாம். குழந்தைகள் எல்லாம் எப்படி யிருக்கின்றன ?

தாதி—பாவம் : அவை யெல்லாம் தங்கள் தங்கள் கிறிஸ்துமஸ் பரிசுகளை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண் டிருக்கின்றன ; ஆனால்...

நோரா—என்னைப் பார்க்கணு மென்று அடிக்கடி கத்துகின்றனவா ?

தாதி—ஆம் : ஏனென்ருல் அம்மாவுடன் கூட இருந்து பழகிவிட்டதால், அம்மா இல்லாமல் அவைகளால் இரண்டு நிமிஷங்கூட இருக்க முடியவில்லை.

நோரா—ஆம்: ஆனால், தாதி, நான் முன்னெல்லாம் இருந்த மாதிரி இனிமேல் அவ்வளவு நாழிகை அவர்களுடன் இருக்க முடியாதே!

தாதி—ஓ! அதனால் என்ன, சின்னக் குழந்தைகளுக்கு எதுவும் வெகு சீக்கிரம் பழக்கமாகிவிடும்.

நோரா—நீ அப்படி நினைக்கிறாயா? அம்மா வீட்டைவிட்டு வெளியேறி விட்டால், அவளை அவர்கள் மறந்து விடுவார்கள் என்று நினைக்கிறாயா நீ?

தாதி—தெய்வமே!—வீட்டைவிட்டு வெளியேறி விட்டாலா?

நோரா—தாதி, நான் ஒரு விஷயத்தைப் பற்றிப் பல தடவைகள் எண்ணி ஆச்சரியப்பட்டிருக்கிறேன்—உன் குழந்தையை அந்நியர்களிடம் விட்டுவைக்க உனக்கு எப்படி மனம் வந்தது? எனக்கு அதை அறிய ஆவலாக இருக்கிறது: சொல்லேன்.

தாதி—சின்ன நோராவின் தாதியாக நான் இருக்க வேண்டினால், என் குழந்தையை அப்படி விடாமல் இருக்க முடியுமா?

நோரா—அது சரி: ஆனால் அதற்கு எப்படி உன் மனம் துணிந்தது?

தாதி—என்ன? துணியாமல் என்ன? அதனால் எனக்கு எவ்வளவு நல்ல இடம் கிடைத்தது பாரேன்! ஒரு ஏழைப் பெண் அது மாதிரி கஷ்டத்தில் சிக்கிக்கொண்டு விட்டால், ஆனந்தத்துடன் தன் குழந்தையை விட்டுவிட மாட்டாளா? தவிரவும் அந்த அயோக்யப் பயல் எனக்காக ஒரு காரியங்கூடச் செய்ய மறுத்துவிட்டான்.

நோரா—ஆனால், உன் பெண் உன்னை அடியோடு மறந்துவிட்டாள் என்று எண்ணுகிறேன்.

தாதி—இல்லே, உண்மையில் அவள் மறக்கவில்லே. அவள் கலியாணத்தின் போதும், மத உறுதிப்பாட்டின் போதும், அதற்கு முந்தி ஒன்றிரண்டு தரமும் அவள் எனக்குக் கடிதம் எழுதினளே !

நோரா—(அவள் கழுத்தைச் சுற்றித் தன் கைகளேப் போட்டுக்கொண்டு) என் பிரியமான ஆன், நான் சின்னவளாக இருந்தபோது, நீதானே எனக்கு நல்ல அம்மாவாக இருந்தாய் !

தாதி—பாவம், கண்ணு, சின்ன நோராவுக்கு என்னேத் தவிர வேறு அம்மாதான் இல்லவே இல்லேயே !

நோரா—என் குழந்தைகளுக்கும் வேறு அம்மா இல்லாமல் போய் விட்டால், நீ நிச்சயம்...நான் என்ன இன்று இப்படிப் பேத்துகிறேன் ! (பெட்டியைத் திறக்கிருள்) நீ குழந்தைகளிடம் போ. நான் இப்பொழுது—நாளேக்கு நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் என்று பார்.

தாதி—உன்னேப் போல் அழகி நடனக் கச்சேரியில் வேறு யாருமே இருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம், அம்மா. (இடது புறம் இருக்கும் அறைக்குள் போகிருள்.)

நோரா—(அட்டைப் பெட்டியி லிருப்பதை வெளியே எடுக்க ஆரம்பிக்கிருள்; ஆனல் சீக்கிரம் பெட்டியைத் தன்னிடமிருந்து தள்ளி விடுகிருள்.) எனக்கு மட்டும் வெளியே கிளம்பத் தைரிய மிருந்தால்...இங்கு யாராவது வராமல் இருக்க வேணுமே ! நான் வெளியே போயிருக்கையில் இங்கு ஒன்றும் நடந்து விடாது என்பது நிச்சயமாகத் தெரிந்தால்...அசட்டுப் பேத்தல்! யாரும் வர மாட்டார்கள். நான் அதைப் பற்றி மட்டும் நினேக்கக் கூடாது. என் கையுறைகளேத் துடைத்து வைக்கிறேன்.

எவ்வளவு அழகான உறைகள்! என் சிந்தனைகளை விட்டு வெளியேறேன்! என் சிந்தனைகளை விட்டு...! ஒண்ணு, ரண்டு, மூணு, நாலு, அஞ்சு, ஆறு...(கூவுகிருள்.) ஆ! யாரோ வருகிறது போல் இருக்கிறது.

[கதவுப் பக்கம் அடைகிருள்: ஆனல் திடசித்தமின்றி நிற்கிருள்.]

[மிஸிஸ் லிண்டே, வெளிக் கூடத்திலேயே தொப்பியையும் போர் வையையும் எடுத்துவிட்டு, உள்ளே வருகிருள்.]

நோரா—ஓ! நீதாளு, கிறிஸ்டின். வெளியிலே வேறு யாரும் இல்லையே? யாராவது இருக்காளோ? நீ வந்தது பற்றி எனக்கு எவ்வளவு சந்தோஷந் தெரியுமோ!

லிண்டே—நீ வந்து என்னைத் தேடினையாமே?

நோரா—ஆம்: நான் அந்த வழியாகப் போய்க்கொண் டிருந் தேன். உண்மையில், நீ எனக்கு உதவி செய்யக்கூடிய விஷயம் ஒன்று இருக்கிறது. நாம் இந்த ஸோபாவில் உட்காருவோமே. இதோ பார். மேல்மாடியில் வசிக்கும் ஸ்டென்போர்க்குகள் வீட்டில் நாளை மாலை ஒரு விநோத நாட்டியக் கச்சேரி நடக்கப் போகிறது. அதற்கு நான் ஒரு செம்படவச் சிறுமியாகப் போய், காப்ரீ என்ற இடத்தில் நான் கற்றுக்கொண்டு வந்த நாட்டியம் ஆட வேணு மென்று தார்வால்ட் விரும்புகிருர். அந்த நாட் டியத்திற்கு டாரேண்டல்லா என்று பெயர்.

லிண்டே—ஓ! நீ அந்த மாதிரி ஆடை அணிந்து போகப் போகிருயா?

நோரா—ஆம்: அதுதான் தார்வால்டின் இஷ்டம். பார், இதோ இருக்கிறது ஆடை; தார்வால்ட் எனக்காக அங்கே செய்யச் சொன்னது இது. ஆனல் இப்போ இது கிழிந்து கிடக்கிறது; எனக்கு இதை எப்படிச் சீர்ப்படுத்துவது என்று...

லிண்டே—அது ஒண்ணுங் கஷ்டமில்லே. கொஞ்சங் கொஞ்சம் தையல் பிரிந்து போயிருக்கிறதே தவிர வேறு ஒண்ணும் கிழியவில்லே. ஊசியும் நூலும் கொடு: அவ்வளவுதான் வேண்டியது.

நோரா—எனக்காகக் கஷ்டப்படுத்திக் கொள்ளுகிற உனக்கு என் வந்தனத்தை...

லிண்டே—கஷ்டமுமில்லே ஒண்ணுமில்லே. (தைத்துக் கொண்டு) அப்படியானல் நீ இந்த ஆடையை நாளேக்கு அணிந்துகொண்டு போகப் போகிருயாக்கும். நான் ஒண்ணு சொல்லுகிறேன், கேளு. நோரா—நான் நடுவில் ஒரு நிமிஷம் வந்து உன் அழகைப் பார்த்துவிட்டுப் போவேன். அடேடே! நான் மறந்தே போய் விட்டேனே! இன்பமான நேற்றைய மாலே விருந்துக்கு என் வந்தனத்தை நான் தெரிவிக்கவே யில்லேயே!

நோரா—(எழுந்து, மேடையில் குறுக்கே நடந்துகொண்டு) உம்...வழக்கம்போல் நேற்று ஒன்றும் அவ்வளவு நன்ருக இல்லே. நீ பட்டணத்துக்கு இன்னும் கொஞ்ச நாள் முந்தி வந்திருக்கணும், கிறிஸ்டின். நிஜமாகவே ஒரு விருந்தை இன்பகரமாகவும் நன்ருகவும் நடத்த தார்வால்டுக்குத் தெரிகிறது.

லிண்டே—உனக்கும் தெரிகிற தென்றே நான் நினேக்கிறேன். அப்பாவுக்குப் பொண்ணுல்லியோ! ஆமாம்: ஆனல், சொல்லு, டாக்டர் ராங்க் எப்பவுமே நேற்றிருந்தது போலத்தான் இருப்பாரா? எவ்வளவு சோர்வாக இருந்தார் அவர்!

நோரா—இல்லே. நேற்று அவருடைய சோர்வு ரொம்ப ஜாஸ்தியாகத் தெரிந்தது. அவர் ஒரு அபாயகரமான வியாதியினுல் பீடிக்கப்பட்டிருக்கிருர் என்று நான் உனக்குச்

சொல்லணும். பாவம், அவருக்கு க்ஷயரோகம்: அதுவும் ரொம்ப மோசமான ரகத்தைச் சேர்ந்ததாம். அவர் தகப்பனுர் செய்யாத காரிய மில்லையாம்: அதனுல்தான் அவர் பிள்ளை குழந்தையாக இருக்கும் போதே வியாதியால் பீடிக்கப்பட்டு விட்டதாம்: தெரிகிறதா?

லிண்டே—(தையலைக் கீழே போட்டுவிட்டு) ஆனுல், அருமை நோரா, உனக்கு இம்மாதிரிச் சமாசார மெல்லாம் எப்படித் தெரிய வந்தது?

நோரா—(நடந்துகொண்டு) உனக்கு மூன்று குழந்தைகள் இருந்தால், உன்னைப் பார்க்கப் பலர் வருகிருர்கள்... பெரிய கலியாணமான ஸ்திரீகளெல்லாம் வருகின்றனர். அவர்களுக்கு இதெல்லாம் பற்றிக் கொஞ்சங் கொஞ்சந் தெரியும்; அவர்கள் சொல்லக் கேட்டு எனக்குத் தெரியும்.

லிண்டே—(தைக்கிருள். சற்று நேரம் மௌனம்.) டாக்டர் ராங்க் இங்கு தினம் வருவதுண்டா?

நோரா—நாள் தவருமல் தினமும் வருவார். அவர் தார்வால்டின் ஆப்த சிநேகிதர்: எனக்கும் ரொம்ப சிநேகந்தான். அவரைக் கிட்டத்தட்ட எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே சொல்லலாம்.

லிண்டே—ஆனுல் இதைச் சொல்லு—அவர் உண்மையிலேயே நேர்மையான மனிதர்தானு? நான் என்ன கேட்கிறேனென்ருல், அவர் உன் பிரியத்தைச் சம்பாதிக்க ஆசைகொண்டு அதற்காக நல்லவர் போல நடந்து கொள்ளுகிறவ ரில்லையா?

நோரா—அதெல்லா மில்லை. உனக்கேன் அப்படித் தோன்றுகிறது?

லிண்டே—நேற்று நீ அவரை எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தபோது, அவர் இந்த வீட்டில் என் பெயரை அடிக்கடி கேட்டிருப்பதாகச் சொன்னார்; ஆனால் பின்னர் உன் கணவருக்கு என்னைப் பற்றி அதிகந் தெரியாது என்று கண்டு கொண்டேன். எனவே டாக்டர் ராங்குக்கு என்னைப் பற்றி எப்படி...?

நோரா—அது சரிதான், கிறிஸ்டின். தார்வால்டுக்கு என்னிடம் அளவு கடந்த பிரேமை; அவர் சொல்லுகிறபடி நான் முழுவதும் தனக்காகவே இருக்கவேண்டுமென்று அவருக்கு ஆசை. அதனால் என் பிறந்த இடத்தில் எனக்குப் பிரியமானவர்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தேனானால் தார்வால்டுக்குப் பொறாமை வந்து விடும்; எனவே, நான் நாளடைவில் அதைப் பற்றிப் பேசுவதையே விட்டுவிட்டேன். ஆனால் எனக்கு அப்போது பிரியமானவர்களா யிருந்தவர்களை யெல்லாம் பற்றி டாக்டர் ராங்குடன்தான் அடிக்கடி பேசுவதுண்டு; நான் அப்படிப் பேசுவதை அவரும் பிரியத்துடனே கேட்டுக் கொண்டிருப்பார்.

லிண்டே—நான் சொல்லுவதைக் கேள், நோரா. நீ பல விஷயங்களில் இன்னமும் குழந்தையைப் போலவே இருக்கிறாய்; நான் பல விஷயங்களில் உன்னை விடப் பெரியவள்; உலக அநுபவமும் எனக்குக் கொஞ்சம் ஜாஸ்தி. நான் இதை உனக்குச் சொல்லுகிறேன்—டாக்டர் ராங்குடன் நீ அதை முடித்துவிட வேணும்.

நோரா—எதை நான் முடித்துவிட வேணும்?

லிண்டே—இரண்டு விஷயங்களை என்று நினைக்கிறேன். நேற்று உனக்குத் தன் உயிலில் பணத்தை வைத்து

விட்டுப் போகவிருந்த ஒரு செல்வக் காதலனைப்பற்றி நீ பேசினுய்—

நோரா—துரதிருஷ்டவசமாக அம்மாதிரிக் காதலன் ஒருவனும் இல்லையே! ஆனல் அதற்கப்புறம்?

லிண்டே—டாக்டர் ராங்க் பணக்காரரா?

நோரா—ஆம், பணக்காரர்தான்.

லிண்டே—அவருடைய பணத்துக்கு வாரிசு யாருமில்லையா?

நோரா—இல்லை: ஒருவருமில்லை; ஆனல்—

லிண்டே—அவர் தினமும் இங்கு வருகிருர்?

நோரோ—ஆம், நான்தான் முன்னரே சொன்னேனே.

லிண்டே—நல்ல மனிதரா யிருந்தால் இப்படிச் செய்யலாமோ?

நோரா—நீ சொல்லுவது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை.

லிண்டே—பொய் சொல்லாதே, நோரா. உனக்கு இருநூற்றைம்பது பவுன் கடன் கொடுத்தது யாரென்று என்னல் யூகிக்க முடியாது என்று நினைக்கிருயா நீ?

நோரா—உனக்குப் புத்தி சரியாக இல்லையா? நீ எப்படி இது மாதிரி நினைக்கலாம்? எங்களுடைய சிநேகிதர், தினம் இங்கு வந்து போய்க்கொண் டிருப்பவர்! அவரிடம் நான் கடன் வாங்கினல் எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று உனக்குத் தெரியவில்லையா?

லிண்டே—அப்படியானல் நிஜமாகவே அவரில்லை?

நோரா—இல்லை; நிச்சயமாக இல்லை. அந்த எண்ணம் ஒரு நிமிஷம் கூட என் மனசில் உதிக்கவில்லை. தவிரவும், அப்போது எனக்குக் கடன் கொடுக்க அவரிடம் பணமுமில்லை; அவருக்குப் பணம் வந்ததே அதற்கப்புறந் தான்.

விண்டே—சரி, அதுவும் உன் அதிர்ஷ்டந்தான், என் அருமை நோரா.

நோரா—ஆம், டாக்டர் ராங்கைப் பணம் கேட்கலா மென்று எனக்குத் தோன்றியே யிராது. ஆனால் நான் கேட்டிருந்தேனானால் நிச்சயம்...

விண்டே—ஆனால், சந்தேகமின்றி, நீ கேட்டிருக்கமாட்டாய்.

நோரா—கேட்டிருக்கமாட்டேன். அவர் உதவியை நாட வேண்டிய அவசிய மிருக்கலா மென்று எண்ணக் காரண மில்லை. ஆனால் இப்போது நான் டாக்டர் ராங்கிடம் சொன்னேனானால், நிச்சயமாக...

விண்டே—உன் கணவருக்குத் தெரியாமலா?

நோரா—மற்றவனுடன் பேரத்தை முடித்துவிட வேணு மோல்லியோ: அதுவும் தார்வால்டுக்குத் தெரியாமல் தானே செய்தாகவேணும்? நான் அவனுடன் பேரத்தை முடித்துவிடத்தான் வேணும்.

விண்டே—ஆம்; நேற்று நானும் உனக்கு அதுதான் சொன்னேன். ஆனால்...

நோரா—(அங்குமிங்கும் நடந்துகொண்டு) ஒரு ஸ்திரீயை விட ஒரு புருஷன் எளிதாக அந்தப் பேரத்தை ஒழுங்கு செய்துவிடுவான்.

விண்டே—ஆம்; அந்தப் புருஷன் உன் கணவனாக இருந்தால்!

நோரா—பேத்தல்! (அசையாமல் நின்றுகொண்டு) நீ ஒரு கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் உன் பத்திரத்தை உன்னிடம் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள், இல்லையா?

விண்டே—ஆம், வழக்கம் அதுதான்.

நோரா—அதைச் சுக்கு நூறாயிரமாகக் கிழித்து அடுப்பில் போட்டு விடலாம்—அந்த அழுக்குப் பிடித்த கடிதத்தை—இல்லையா?

லிண்டே—(அவளை உற்று நோக்குகிறாள், தையலைக் கீழே போட்டுவிட்டு மெல்ல எழுந்திருக்கிறாள்) நோரா, என்னிடமிருந்து நீ எதையோ மறைக்கிறாய்?

நோரா—என்னைப் பார்த்தால் அப்படித் தோன்றுகிறதா உனக்கு?

லிண்டே—நேற்றுக் காலை நாம் சந்தித்ததற் கப்புறம் ஏதோ நடந்திருக்கிறது. நோரா, அதென்ன?

நோரா—(அவளை நெருங்கி) கிறிஸ்டின்! (கவனிக்கிறாள்.) ஷ், தார்வால்ட் வந்துவிட்டார். இப்பொழுது சிறிது நேரம் நீ குழந்தைகளுடன் போய் உட்கார்ந்துகொண்டிரேன். தையல் வேலை நடந்துகொண்டிருப்பதைக் கண்டால் தார்வால்டுக்குப் பிடிக்காது. ஆன் உனக்கு உதவி செய்வாள்.

லிண்டே—(எல்லாவற்றையும் கையில் சுருட்டி யெடுத்துக் கொண்டு) போகிறேன்: ஆனால் நீ எனக்கு விஷயம் முழுவதும் சொல்லும் வரையில் நான் இங்கிருந்து அசையப் போவதில்லை.

[இடதுபுற மிருக்கும் அறைக்குள் போகிறாள். ஹெல்மர் கூடத்தில் இருந்து உள்ளே வருகிறான்.]

நோரா—(ஹெல்மரிடம் போய்) நீ எப்போ வருவாய் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன், அருமைத் தார்வால்ட்.

ஹெல்மர்—யார் அது, தையற்காரியா?

நோரா—இல்லை, கிறிஸ்டின்: என் ஆடையைச் சரிப்படுத்த அவள்தான் எனக்கு உதவி செய்கிறாள். நீ பாரேன் நான் எவ்வளவு ஜோக்காக இருக்கிறேன் என்று.

ஹெல்மர்—இப்போ சொல்லு, நான் அந்த வேஷத்தைப் பற்றி நினைத்தது சரியா யில்லையா என்று.

நோரா—ரொம்ப சரி. ஆனால், நீ சொல்லுகிறபடி நான் கேட்பதும்...நேர்த்தியானதாகத் தோன்றவில்லையா உனக்கு?

ஹெல்மர்—நேர்த்தியா?—கணவன் சொல்வது போல் மனைவி கேட்பதா? சரி, சரி, போக்கிரி நீ! நீ அந்த அர்த்தத்துடன் சொல்லியிருக்க மாட்டாய். ஆனால் எனக்கு உன்னைத் தொந்தரவு செய்வதாக உத்தேசமில்லை; நீ அந்த ஆடையைப் போட்டுப் பார்க்கவேணுமென்று விரும்புகிறா யில்லையா?

நோரா—நீ வேலை செய்யப்போகிறாய் என்று நினைக்கிறேன்.

ஹெல்மர்—ஆம். (அவளிடம் ஒரு கட்டுக் கடிதங்களைக் காட்டுகிறான்.) இதைப் பார். நான் இப்போதான் பாங்குக்குப் போய்விட்டு வருகிறேன். (தன்னறைக்குள் போகத் திரும்புகிறான்.)

நோரா—தார்வால்ட்.

ஹெல்மர்—என்ன?

நோரா—உன்னுடைய சின்ன அணில் உன்னை ஏதாவது வேணுமென்று அழகாகக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டால்...

ஹெல்மர்—எதற்கு?

நோரா—கேட்பதைச் செய்வாயா நீ?

ஹெல்மர்—முதலில் என்ன செய்யவேணுமென்று அறிய விரும்புவேன் நான்.

நோரா—உன் அணில் குறுக்கும் நெடுக்கும் ஓடி, அவளுக்குத் தெரிந்த வேடிக்கையெல்லாம் பண்ணுவாள்—நீ நல்லதனமாக இருந்து அவள் சொல்லுகிறபடி செய்தால்...

ஹெல்மர்—புரியும்படி சொல்லேன்.

நோரா—உன் குயில் எல்லா அறைகளிலும் பாடும்: ஸ்தாயியை உயர்த்தியும் தாழ்த்தியும் ஆலாபனம் பண்ணிக் கொண்டே...

ஹெல்மர்—என் குயில் எப்பவுந்தான் ஆலாபனம் பண்ணிக் கொண்டே இருக்கிறதே!

நோரா—நான் தேவ கன்னிகையாக வந்து உன்னைச் சந்திர வெளிச்சத்தில் மயக்குவேன், தார்வால்ட்.

ஹெல்மர்—நோரா—இன்று காலையில் என்னைச் செய்யச் சொல்லி வேண்டிக்கொண்டாயே! அதையே இப்பவும் கேட்கப் போவதில்லையே?

நோரா—(அவனை நெருங்கி) ஆம், தார்வால்ட், உன்னை நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹெல்மர்—அந்தக் கதையைத் திரும்பவும் ஆரம்பிக்க உனக்குத் தைரியம் இருக்கிறதா?

நோரா—ஆம், என் கண்ணே. நான் கேட்டுக் கொள்ளுகிறபடிதான் நீ செய்யவேணும்; பாங்கில் க்ராக்ஸ்டாட் அவனுடைய வேலையை யிழந்துவிடாமல் நீ பார்த்துக் கொள்ளத்தான் வேணும்.

ஹெல்மர்—என் அருமை நோரா, மிஸிஸ் லிண்டேக்கு அவனுடைய இடத்தைத்தான் கொடுப்பதாக நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

நோரா—ஆம், அந்த விஷயத்தில் நீ ரொம்பத் தயையுடன் தான் நடந்துகொண்டிருக்கிறாய்; ஆனால் க்ராக்ஸ்டாட்டை வைத்துக்கொண்டு வேறு எந்தக் குமஸ்தாவையாவது போகச் சொல்லி விடு.

ஹெல்மர்—இது நம்ப முடியாத அசட்டுப் பிடிவாதமாக இருக்கிறதே! முன்பின் யோசனை செய்யாமல் நீ அவனைப்

பற்றி என்னிடம் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் என்று வாக்களித்து விட்டதற்காக, நான் இப்படி...

நோரா—அதுமட்டும் காரணமில்லை, தார்வால்ட். உனக்காகத் தான் சொல்லுகிறேன். அவன் ரொம்ப இழிவான பத்திரிகைகளுக்கெல்லாம் எழுதுபவன்; அதை நீயே என்னிடம் சொல்லியிருக்கிறாய். அவனால் நமக்குச் சொல்ல முடியாத கெடுதி விளைவிக்க முடியும். அவனிடம் எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது—

ஹெல்மர்—ஹா, எனக்குப் புரிகிறது: சென்று போனதை எண்ணி நீ பயப்படுகிறாய்.

நோரா—என்னது? நீ சொன்னதற்கு என்ன அர்த்தம்?

ஹெல்மர்—நியாயந்தானே! நீ உங்கப்பாவைப் பற்றி நினைத்துக்கொண்டு சொல்லுகிறாய்.

நோரா—ஆம்; ஆம்—நிஜந்தான். அப்பாவைப் பற்றிப் பத்திரிகைகளில் இப்படிப்பட்ட விஷமப் பதர்கள் என்ன எழுதினார்கள் என்று ஞாபகப்படுத்திப் பார்; அவ்வளவு கொடூரமான அபவாதங்களை அவர்மேல் சுமத்தினார்கள். அவரிடத்தில் அன்பு காட்டி உதவியாகவிருந்த உன்னை சர்க்கார் அந்தத் தகவல்களை விசாரிக்க அனுப்பாமலிருந்தால், அவர்கள் அவரை வேலையை விட்டுத் துரத்த ஏற்பாடு செய்திருப்பார்களே!

ஹெல்மர்—என் அருமை நோரா, உங்கப்பாவுக்கும் எனக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. ஒரு பொது உத்தியோகஸ்தர் என்ற முறையில் உன் தகப்பனார் அப்பழுக்கு இல்லாதவராகக் கருதப்படவில்லை. என்னைப் பற்றி இது வரையில் சந்தேகங் கொள்ள இடமே கிடையாது; நான் உத்தியோகம் வகிக்கும் வரையில் என்

கீர்த்திக்கு ஒரு பங்கமும் வராமல் நடந்து கொள்வேன் என்றே நம்புகிறேன்.

நோரா—இந்த மாதிரி மனிதர்கள் என்ன விஷமம் செய்வார்கள் என்று உன்னால் ஒருபோதும் சொல்ல முடியாது. நாம் போதிய பணத்துடன், சௌக்கியமாகவும், சந்தோஷத்துடனும், அமைதியாகவும், கவலையின்றியும் இருக்கவேணும்—நீயும், நானும், குழந்தைகளும், தார்வால்ட்! அதனால்தான் நான் உன்னை இவ்வளவு கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்......

ஹெல்மர்—நீ அவனுக்காகப் பரிந்து பேசுவதால் நான் அவனை ஆபீசில் வைத்துக்கொள்ள முடியாதபடி செய்கிறாய். பாங்கில் நான் க்ராக்ஸ்டாட்டை வேலையிலிருந்து தள்ளிவிடுவதாக உத்தேசம் பண்ணியிருக்கிறேன் என்று எல்லோருக்குந் தெரியும். மானேஜர் தன் பெண்டாட்டியின் வார்த்தைகளைக் கேட்டுத் தன் உத்தேசத்தை மாற்றிவிட்டார் என்று வெளியே தெரிய வந்தால்—

நோரா—தெரியவந்தால் என்ன?

ஹெல்மர்—நிஜந்தான்—எப்படியாவது இந்தப் பிடிவாதக்காரியின் இஷ்டம் பூர்த்தியானால் போதும்—அவ்வளவுதான்! என்னிடம் வேலை செய்பவர்கள் எல்லோரும் என்னைப் பரிகாசஞ் செய்யும்படியாக நான் நடந்து கொள்வேன் என்று நினைக்கிறாயா நீ? எல்லோருடைய வார்த்தைகளுக்கும் செல்வாக்கும் மதிப்பும் கொடுக்கிறவன் நான் என்று ஜனங்கள் நினைக்கும்படி நடந்துகொள்வேனா நான்? அப்படி நடந்துகொண்டு விட்டேனானால் நான் அதன் பலன்களை வெகு சீக்கிரமே அனுபவிக்க வேண்டி வரும், தெரியுமோ! இத்தனையுந் தவிர, நான்

மானேஜராக இருக்கும் வரையில், க்ராக்ஸ்டாட்டை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்பதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது.

நோரா—அதென்ன அது?

ஹெல்மர்—அவசியமானால் நான் அவனுடைய கெட்ட குணங் களை மறந்துவிடலாம்—

நோரா...மறந்து விடுவாய்? இல்லையா தார்வால்ட்?

ஹெல்மர்—அவன் தன் வேலையை நன்றாகத்தான் செய்கிறான் என்றும் கேள்விப்படுகிறேன். ஆனால், நாங்கள் சிறு வர்களாக இருந்தது முதலே அவனை எனக்குத் தெரி யும். அது நான் ஆராயாமல் செய்துகொண்ட சிநேகி தம்; அது இப்பவும் என்னைப் பீடிக்கக்கூடிய சக்தி யுள் ளது. உண்மையை உன்னிடம் ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன்—நானும் அவனும் அந்த நாட்களில் ரொம்ப நெருங்கிப் பழகினோம். ஆனால் இந்த அசட்டு மண்டு பிறர் இருக்கும்போது கூட அடங்கி நடப்பது கிடையாது. இதற்கு மாறாக, அந்தச் சிநேகம் என்னு டன் ரொம்பத் தாராளமாகப் பழக அவனுக்கு இடங் கொடுப்பதாக எண்ணிக்கொண்டு விடுகிறான்: ஒவ்வொரு நிமிஷமும் "டே, ஹெல்மர்! இப்படித்தானேடா இது?" என்று பேச ஆரம்பித்துவிடுகிறான். இது எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்று உனக்குச் சொல்லவும் வேணுமா? அவன் பாங்கில் இருந்தால், மானேஜர் ஸ்தானத்தில் இருக்க எனக்குக் கட்டோடு பிடிக்கவே பிடிக்காது.

நோரா—தார்வால்ட், நீ இதை முழு மனதுடன் சொல்லு கிறாய் என்று நான் நம்பமாட்டேன்.

ஹெல்மர்—மாட்டாயா? ஏன்?

நோரா—ஏனெனில் அது ரொம்பக் குறுகிய மனப்பான்மை யைக் காட்டுகிறது.

ஹெல்மர்—என்ன சொல்லுகிறாய்? குறுகிய மனப்பான் மையா? நான் குறுகிய மனப்பான்மை யுடையவன் என்று நினைக்கிறாய் நீ?

நோரா—இல்லை: அதற்கு எதிராகத்தான் நினைக்கிறேன் நான்—அதனால்தான் அப்படிச் சொன்னேன்.

ஹெல்மர்—எல்லாம் ஒன்றுதான். என் நோக்கம் குறுகியது என்றால், நான் குறுகிய மனப்பான்மை யுள்ளவன் என்று அர்த்தமாகவில்லையாக்கும். குறுகிய மனப் பான்மையா? ரொம்ப சரி—நான் இதை ஒரு வழியாகத் தீர்த்துவிட வேண்டியதுதான். (கூடத்துக் கதவண்டை போய்க் கூப்பிடுகிறான்) ஹெலன்!

நோரா—நீ என்ன செய்யப்போகிறாய்?

ஹெல்மர்—(தன் கையிலிருந்த கடிதங்களைப் புரட்டிப் பார்த் துக்கொண்டு) ஒரு வழியாக அதைத் தீர்த்துவிடுகிறேன். (வேலைக்காரி வருகிறாள்.) இதோ பார். இந்தக் கடி தத்தை எடுத்துக்கொண்டு கீழே போ. ஒரு ஆளைப் பிடித்து இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய்க் கொடுக்கச் சொல்லு; அதன்மேல் விலாசம் இருக்கிறது. ஜல்தி. உடனே. இந்தா, ஆளுக்குக் கூலி.

வேலைக்காரி—அப்படியே. (கையில் கடிதத்துடன் வெளி யேறுகிறாள்.)

ஹெல்மர்—(தன் கடிதங்களை யெல்லாம் அடுக்கிக்கொண்டு) இப்போ என்ன சொல்லுகிறது என் பிடிவாதக் குட்டி?

நோரா—(மூச்சுத் திணற) தார்வால்ட்—அதென்ன கடிதம்?

ஹெல்மர்—க்ராக்ஸ்டாட்டை உத்யோகத்திலிருந்து நீக்கி விட்டதாக உத்தரவு.

நோரா—அவளைத் திரும்பக் கூப்பிடு, தார்வால்ட். இன்னும் நேரம் இருக்கிறது. ஓ! தார்வால்ட், எனக்காக அவளைத் திரும்பக் கூப்பிடு. எனக்காக—உனக்காக—நம் குழந்தைகளுக்காக! நான் சொல்வது காதில் விழுகிறதா, தார்வால்ட்? அவளைத் திரும்பக் கூப்பிட்டுவிடு. அந்த உத்தரவினால் நம் தலையில் என்ன இடி விழும் என்று உனக்குத் தெரியாது.

ஹெல்மர்—இனிப் பிரயோசனமில்லை: நேரமாய்விட்டது.

நோரா—ஆம்: நாழிகையாகிவிட்டது: இனிப் பிரயோசனமில்லை.

ஹெல்மர்—என் அருமை நோரா, நீ எனக்காகப் படும் கவலையை நான் மன்னித்துவிடுகிறேன்; ஆனால் உண்மையில் அது என்னை அவமதிப்பதாகும். நிஜம். பத்திரிகைகளுக்கு எழுதும் ஒரு அற்பனுக்கு நான் பயப்படுவேன் என்று நினைப்பது என்னை அவமதிப்பதாகாதா? இருந்தாலும் நான் உன்னை மன்னித்து விடுகிறேன்; ஏனெனில், இது நீ என்னை எப்படி நேசிக்கிறாய் என்பதின் சின்னந்தானே! (அவளைத் தன் கைகளால் கட்டி அணைகிறான்.) எல்லாம் எப்படியிருக்க வேண்டுமோ அப்படித்தான் இருக்கிறது, என் ஆருயிர் நோரா, எது வந்தாலும் பயப்படாதே: எனக்கு அவசியமானால், தைரியமும் பலமும் இருக்கும். எல்லாவற்றையும் நான் ஒருவனாகவே தாங்கக்கூடிய புருஷன் என்பதைக் காண்பாய் நீ.

நோரா—(பயத்தால் கம்மிய குரலில்) என்ன அர்த்தத்துடன் நீ அப்படிச் சொல்லுகிறாய்?

ஹெல்மர்—எல்லாவற்றையும் என்று நான் சொல்லுகிறேன்—

நோரா—(தெளிந்து) நீ எல்லாவற்றையும் தனியாகச் சுமக்க வேண்டிய அவசியமே வராது.

ஹெல்மர்—அது சரி. நல்லது! நம் சுகதுக்கங்களை நாம், மனிதனும் மனைவியுமாகச் சேர்ந்தநுபவிப்போம். இருவருமாக எல்லாவற்றையுந் தாங்குவோம். அப்படித்தானிருக்க வேணும். (அவள் உடம்பைத் தடவிக்கொண்டு) இப்போ, திருப்தியா உனக்கு? இதோ! இதோ! புறா மாதிரிக் கண்களில் மிரண்ட பார்வை வேண்டாமே! அதெல்லாம் முழுவதும் வீண் கற்பனையே தவிர வேறில்லை. இப்போ நீ போய் டாரெண்டெல்லா நாட்டியமாடி, *தாம்பூரினில் பாடிப் பழகிக்கொள்ள வேணும். நான் உள் ஆபீசுக்குப் போய்க் கதவையும் அடைத்துக் கொண்டு விடுகிறேன்; என் காதில் ஒன்றுமே விழாது; உன்னிஷ்டப்படி சத்தம் போடலாம் நீ. (கதவண்டை போய்த் திரும்புகிறான்). ராங்க் வந்தால், நான் எங்கே யிருக்கேன் என்று அவனுக்குச் சொல்லு.

[அவளைப் பார்த்துத் தலையை யாட்டிவிட்டு, கடிதங்களுடன், தன் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக்கொள்ளுகிறான்.]

நோரா—(சஞ்சலத்தால் திகைத்து, அசைய மாட்டாதவள் போல் நிற்கிறாள்: “குசு குசு” வென்று பேசுகிறாள்.) அவரால் அதைச் செய்ய முடிந்தது. அவர் செய்வார். எதையும் கவனியாமல் அவர் அப்படிச் செய்வார்— வேண்டாம்; அது வேண்டாம், எப்பவும் வேண்டாம்; வேண்டாம். அதைவிட வேறு எதுவானாலும் சரி; அதுமட்டும் வேண்டாம். ஓ! இதற்கு உதவியில்லையா? இதை மாற்ற வழியில்லையா? (மணி அடிக்கிறது).

* தாம்பூரின் - ஒருவகைக் கஞ்சரா வாத்தியம்.

டாக்டர் ராங்க்! அது தவிர எதுவானுலும் சரி: அது மட்டும் வேண்டாம்!

(தன் கைகளால் முகத்தை மூடிக்கொள்ளுகிருள்; தன் கலக்கத்தைக் கட்டுப்படுத்திச் சீர்திருத்திக் கொள்ளுகிருள்; கதவண்டை போய்க் கதவைத் திறக்கிருள். வெளியே கூடத்தில் ராங்க் நின்றுகொண்டிருக்கிருர். அவர் தன் சட்டையைக் கழட்டி மாட்டிக்கொண்டிருக்கிருர். பின் வரும் சம்பாஷணை நடந்து கொண்டிருக்கையில் இருட்ட ஆரம்பிக்கிறது.)

நோரா—வந்தனம், டாக்டர் ராங்க்; மணியடிக்கும்போதே நீங்கள்தான் என்று நினைத்தேன். ஆனுல் நீங்கள் இப்பொழுது தார்வால்டைப் பார்க்கப் போகக்கூடாது; அவர் ஏதோ காரியமாக இருக்கிருர் என்று நினைக்கிறேன்.

டாக்டர்—நீ?

நோரா—(அவரை உள்ளே விட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு) ஓ; உங்களுடன் பேச எனக்கு எப்பொழுதும் சாவகாசம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியாதா?

டாக்டர்—வந்தனம். அந்தச் சாவகாசத்தில் என்னுல் முடிந்ததை நான் உபயோகப்படுத்திக்கொள்ளுகிறேன்.

நோரா—நீங்கள் சொல்லுவதற்கு அர்த்தமென்ன? உங்களால் முடிந்ததை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறீர்களா?

டாக்டர்—ஏன், உனக்குப் பயமாக இருக்கிறதா?

நோரா—அப்படிச் சொன்னது சரியாகத் தோன்றவில்லை எனக்கு. ஏதாவது நேர்ந்துவிடும்போல் இருக்கிறதா?

டாக்டர்—நான் எதிர்பார்த்திருந்ததைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஆனுல் நான் அதை இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்கவில்லையென்பது வாஸ்தவம்.

நோரா—(அவர் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு) நீங்கள் என்ன கண்டுபிடித்துவிட்டீர்கள்? டாக்டர் ராங்க், எனக்குச் சொல்லத்தான் வேணும்.

டாக்டர்—(கணப்புக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு) என்னைப் பற்றிய வரையில் எல்லாம் ஆய்விட்டது: இனி செய்வதற்கு ஒன்றுமில்லை.

நோரா—(பெரிய பாரம் நீங்கியவள்போல் பெருமூச்சுடன்) உங்களைப் பற்றியா அது?

டாக்டர்—பின் யாரைப் பற்றி? ஒருவன் தன்னிடமே பொய் சொல்லிக்கொள்வதில் லாபமென்ன? என்னுடைய நோயாளிகளிலே நான்தான் அதிகத் துர்ப்பாக்கியன், மிஸிஸ் ஹெல்மர். கொஞ்ச காலமாக நான் என்னுடைய தேக ஸ்திதியை வைத்துக் கணக்குப் பார்த்ததில் இன்னும் கொஞ்ச நாள்தான் தள்ளும் போலிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்தில் நான் மயானத்தில் மண்ணோடு மண்ணாய்க் கிடப்பேன் என்று தோன்றுகிறது.

நோரா—பேசுவதற்கு எவ்வளவு குரூரமான விஷயம்!

டாக்டர்—விஷயமே எவ்வளவு குரூரமானது தெரியுமோ! இதையும்விடக் குரூரமான பல விஷயங்களை நான் அதற்குமுன் அனுபவிக்க வேண்டியிருக்குமே என்றுதான் நான் கஷ்டப்படுகிறேன். இன்னும் ஒரே ஒரு தரம்தான் நான் என்னைப் பரிசோதித்துப் பார்த்துக்கொள்ளப் போகிறேன்; அந்தப் பரிசோதனைக்கப்புறம், என் மரணம், மரணாவஸ்தை, எப்போது ஆரம்பிக்கும் என்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்துவிடும். நான் உன்னிடம் சொல்லவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. ஹெல்மருடைய நாகரிகமான சுபாவம் குரூரமான எதைக் கண்டாலும் சொல்ல முடியாத வெறுப்புக்

கொள்ளும்; நான் சாகக் கிடக்கையில் அவன் என் பக்கம் வரக் கூடாது.

நோரா—ஓ! ஆனால், டாக்டர் ராங்க்—

டாக்டர்—அவன் அங்கு வரக் கூடாது என்பது என் விருப் பம். எப்படியானாலும் சரி: அவன் என் மரணப் படுக் கையருகே வரக் கூடாது. நான் அச் சமயம் அவனை வெளியே விட்டுக் கதவைச் சாத்தி விடுவேன். அந்த நிலை வந்து விட்டது என்று தெரிந்தவுடன் நான் உனக்குக் கறுப்புச் சிலுவைகள் போட்ட கார்டுகள் அனுப்புவேன்; அதிலிருந்து நீ என் குரூர முடிவு ஆரம்பித்துவிட்டது என்று அறிந்துகொள்ள வேணும்.

நோரா—இன்று நீங்கள் ரொம்பப் பைத்யக்காரத்தனமாக இருக்கிறீர்கள். உண்மையிலேயே சந்தோஷகரமாக இருக்க மாட்டீர்களா என்று விரும்பினேன் நான்.

டாக்டர்—சாவு என்னைத் தேடி வந்துகொண்டிருக்கும் போது? இன்னொருவனுடைய பாபத்துக்கு நானா பரிகாரம் பண்ணித் தொலைக்க வேண்டும்? அதில் ஏதாவது நியாய முண்டோ? இது மாதிரி ஒவ்வொரு குடும்பத்திலும், ஒரு விதத்தில் இல்லாவிட்டால் இன்னொரு விதத்தில், முன் னோர்களின் தீவினையைப் பின் சந்ததியார் அனுபவித் துத் தீரவேண்டி யிருக்கிறது.

நோரா—(தன் கைகளால் காதைப் பொத்திக்கொண்டு) பேத் தல்! வேறு ஏதாவது வேடிக்கையான சமாசாரத்தைப் பற்றிப் பேசுங்களேன்.

டாக்டர்—ஓ! இதுவும் சிரிக்க வேண்டிய விஷயந்தான்! வேடிக்கைதான். என் தகப்பனாருடைய வாலிபக் கர்மத் தின் பலன் நான் அனுபவிக்க வேண்டி யிருக்கிறதே!

நோரா—(இடது புறம் மேஜையண்டை போய் உட்கார்ந்து கொண்டு) அதாவது உங்கப்பாவுக்கு, தண்ணீர் விட்டான் கீரையும், வாத்து ஈரல் சூப்பும் ரொம்பப் பிடித்தவை என்று சொல்லுகிறீர், இல்லையா?

டாக்டர்—ஆம், காளானும் கூட.

நோரா—ஆம், காளானும், நத்தையும் கூடத்தான் என்று நினைக்கிறேன்.

டாக்டர்—நத்தையும் தின்பார், சொல்லணுமா? அதில்லாமல்...

நோரா—பாட்டில் பாட்டிலாக போர்ட் ஒயினும், ஷாம்பேனும். ஆம்; இவ்வளவு நல்ல பதார்த்தங்கள் நம் மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ள நினைப்பதை எண்ணினால் வருத்தமாகத்தான் இருக்கிறது.

டாக்டர்—அது மட்டுமன்று. அதெல்லாவற்றையும் அநுபவித்துச் சாப்பிட்டவர்களிடம் வஞ்சந் தீர்த்துக் கொள்ளாமல் வேறு யாரையாவது தேடிப் பிடிக்கின்றனவே அதுதான் ரொம்ப வருத்தப்படக்கூடிய விஷயம்.

நோரா—ஆம்: அதில் மிகவும் துக்ககரமான பாகம் அதுதான்.

டாக்டர்—(அவளை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டு)...ம் ...ம்...

நோரா—(கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு அப்புறம்) ஏன் நீங்கள் புன்சிரிப்புச் சிரிக்கிறீர்கள்?

டாக்டர்—இல்லை, நீதானே சிரித்தது.

நோரா—இல்லை, நீங்கள்தான் புன்சிரிப்புச் சிரித்தீர்கள், டாக்டர் ராங்க்.

டாக்டர்—(எழுந்து கொண்டு) நான் எண்ணியதைவிட நீ பெரிய போக்கிரியாக இருக்கிறாயே.

நோரா—எனக்கு இன்று அசட்டு விளையாட்டுப் புத்திதான் இருக்கிறது.

டாக்டர்—பார்க்க அப்படித்தான் தெரிகிறது.

நோரா—(தன் கைகளை அவர் தோள் மேல் போட்டுக் கொண்டு) பிரிய டாக்டர், அருமை டாக்டர் ராங்க், சாவு உங்களை என்னிடமிருந்தும் தார்வால்டினிடமிருந்தும் பிரித்துவிடக் கூடாது.

டாக்டர்—சுலபமாக அந்த நஷ்டத்துக்குப் பரிகாரம் ஏற்பட்டு விடும். போய்விட்டவர்களை மறப்பது மிகவும் சுலபம்.

நோரா—(அவரைக் கவலையுடன் பார்த்துக்கொண்டு) நீங்கள் அப்படித்தான் நம்புகிறீர்களா?

டாக்டர்—ஜனங்களுக்குப் புது நட்பு, புது சம்பந்தம் ஏற்பட்டு விடும்; அப்புறம்...

நோரா—யாருக்குப் புது சம்பந்தங்கள் ஏற்படும்?

டாக்டர்—உனக்கும் ஹெல்மருக்கும், நான் போனபின். உன்னைப் பற்றிய வரையில் நீ புது நட்பை ஆரம்பித்துவிட்டாய் என்றே நான் நம்புகிறேன். அந்த மிஸிஸ் லிண்டே நேற்றிரவு இங்கு எதற்காக வந்தாள்?

நோரா—ஓஹோ! கிறிஸ்டினைக் கண்டு நீங்கள் பொறாமை கொள்ளுகிறீர்களா? நான் நம்பவே மாட்டேன் அதை.

டாக்டர்—ஆம். எனக்குப் பொறாமையாகத்தான் இருக்கிறது. இந்த வீட்டில், அவள் எனக்கு வாரிசாக வந்து விட்டாள். நான் போன பிறகு, இந்த ஸ்திரீ...

நோரா—ஷ்! இரைந்து பேச வேண்டாம். அவள் அந்த அறையில் இருக்கிறாள்.

டாக்டர்—இன்றைக்குமா? நான் சொன்னது பொய்யா? பாரேன்.

நோரா—என் ஆடையைத் தைத்துக் கொடுப்பதற்காகவே இன்று வந்தாள். அட கடவுளே, நீங்கள் ஏன் இப்படிக் காரண காரியந் தெரியாமல் இருக்கிறீர்கள்! (ஸோபா வில் உட்கார்ந்துகொண்டு) இப்போது என்னிடம் பிரிய மாக நடந்துகொண்டால், டாக்டர் ராங்க், நான் நாளைக்கு எவ்வளவு அழகாக நாட்டியம் ஆடுகிறேன் என்று நீங்கள் காணலாம். அதுமட்டுமல்ல; உங்களுக் காகவும்—ஆம், தார்வால்டுக்காகவும்தான்—நான் அவ்வ ளவு நன்றாக ஆடுகிறேன் என்று கற்பனை செய்துகொள் ளலாம். (பெட்டியிலிருந்து பல சாமான்களை யெடுக் கிறாள்.) டாக்டர் ராங்க், இங்கே வந்து இப்படி உட்கா ருங்கள்; நான் உங்களுக்கு ஒன்று காட்டுகிறேன்.

டாக்டர்—(உட்கார்ந்து கொண்டு) என்ன அது?

நோரா—இதைச் சற்று பாருங்களேன்.

டாக்டர்—ஸில்க் ஸ்டாகிங்குகள்.

நோரா—ரோஸ் வர்ணங் கொண்டவை. அவை அழகாக இல் லையா? இங்கு இப்போது கும்பி யிருட்டாக இருக் கிறது; ஆனால் நாளைக்கு—மாட்டேன், மாட்டேன். மாட் டேன்! நீங்கள் பாதங்களை மட்டுந்தான் பார்க்கலாம். ஓ! சரி. கிடந்தாக் கிடக்கு, கால்களையும் வேணுமானால் பாருங்களேன்.

டாக்டர்—ம்...ம்.

நோரா—என்ன அவ்வளவு நுட்பமாகக் கவனிக்கிறீர்களே! அவை எனக்குப் பொருத்தமா யிருக்காது என்று நினைக் கிறீர்களா?

டாக்டர்—அதைப் பற்றி அபிப்பிராயங் கொடுக்க நான் தகுதி யற்றவன்.

நோரா—(ஒரு நிமிஷம் அவரைப் பார்க்கிறாள்.) மானமில்லையா? (அவர் காதின் மேல் லேசாகப் படும்படியாக ஸ்டாகிங்குகளால் தட்டுகிறாள்) உங்களுக்குத் தண்டனை அது தான். (அவைகளை மடித்து வைக்கிறாள்.)

டாக்டர்—இன்னம் வேறு என்ன நேர்த்தியான....விஷயங்களைப் பார்க்க எனக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது?

நோரா—வேறு ஒன்றுகூட இல்லை, இவ்வளவு துடுக்காக இருந்ததற்காக. (பெட்டிக்குள் பார்க்கிறாள்: ஆலாபனம் பண்ணுகிறாள்.)

டாக்டர்—(சிறிது நேரம் மௌனத்திற்குப் பிறகு) நான் இங்கே உட்கார்ந்துகொண்டு இப்படி உன்னுடன் அந்யோந்யமாகப் பேசிக்கொண்டிருக்கையில், நான் இந்த வீட்டிற்குள்ளேயே வராமல் இருந்திருந்தேனானால் நான் எப்படி இருந்திருப்பேன் என்று கற்பனை செய்து பார்க்க முயலுகிறேன்: முடியவில்லை.

நோரா—(முறுவலுடன்) எங்களுடன் நீங்கள் சொந்தக் குடும்பத்தில் இருப்பது போலவே சகஜமாகப் பழகி விட்டீர்கள் என்று நம்புகிறேன்.

டாக்டர்—(தணிந்த குரலில், தனக்கு நேர் எதிரே பார்த்துக் கொண்டு) இதையெல்லாம் விட்டுப் போக வேணுமே யென்று...

நோரா—பேத்தல். நீங்கள் இதையெல்லாம் விட்டுப் போகப் போவதில்லை.

டாக்டர்—(முன் போலவே) என்னுடைய அன்புக்கு அறிகுறியாக ஒன்றும் இல்லாமல், ஞாபகார்த்தம் ஒரு சிறு துரும்புகூட விடாமல்...ம்...நான் போய் விட்டால் என் ஸ்தானத்தை வேறு யாரும் பூர்த்தி செய்துவிட முடி

யும். அப்படி ஒரு விசேஷமு மில்லாமல், என்னை நினைத்து ஒரு சிறு துக்கமும் படுவதற் கில்லாமல் போகி றேன்.

நோரா—இப்போ நான் உங்களை ஒன்று கேட்டால்...வேண் டாம்.

டாக்டர்—என்ன வேணும், கேளேன்.

நோரா—உங்கள் நட்புக்குச் சின்னமாக ஒரு பெரிய அத் தாட்சி—

டாக்டர்—ம்...உம்...

நோரா—நான் சொல்வது என்ன வென்றால் எனக்காக ஒரு பெரிய உதவி கோரினேனானால்...

டாக்டர்—அப்படிக் கேட்டு என்னை இத்தடவையாவது சந் தோஷ மூட்டுவாயா ?

நோரா—ஹா ! உங்களுக்கு இன்னும் அது என்ன என்று தெரியாதே.

டாக்டர்—தெரியாது—ஆனால் நீ சொல்லேன்.

நோரா—உண்மையில் என்னால் முடியாது—டாக்டர் ராங்க். காரண காரியங்களுக் கெல்லாம் மிஞ்சிய காரியம் அது ; அது ஒரு புத்திமதி, உதவி, சகாயம்......

டாக்டர்—எவ்வளவுக் கெவ்வளவு பெரிய காரியமோ அவ்வள வுக் கவ்வளவு நல்லது. நீ எதைப் பற்றிச் சொல்லுகிறாய் என்று எனக்குப் பிடிபடவில்லை. என்னிடம் சொல். நான் உனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவ னில்லையா ?

நோரா—வேறு யாரையும்விடத் தங்களிடம் எனக்கு நம் பிக்கை உண்டு. தாங்கள்தான் எனக்கு மிகவும் உண் மையான ஆப்த நண்பர். அதனால் அதைத் தங்களுக்

குச் சொல்லுகிறேன். என்னவென்றால், டாக்டர் ராங்க், ஒரு விஷயம்—அது மாதிரி நடக்காமல் தடுக்க வேண்டியதுதான் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி. தார்வால்ட் என்னை எவ்வளவு பிரியமாக, எவ்வளவு ஆர்வத்துடன், சொல்ல முடியாத வேகத்துடன், காதலிக்கிறார் என்று உங்களுக்குத் தெரியு மோல்லியோ! தன் உயிரை வேணுமானாலும் எனக்காக அவர் தியாகஞ் செய்ய ஒரு வினாடிகூடத் தயங்க மாட்டார்.

டாக்டர்—(அவள் பக்கம் சாய்ந்து) நோரா—அவன் ஒருவன் தான் அப்படி யென்று நீ நினைக்கிறாயா?...

நோரா—(சற்றுத் திடுக்கிட்டு) ஒருவர்தானா?—

டாக்டர்—உனக்காக உயிரைக் கொடுக்கக்கூடியவன் அவன் ஒருவன்தானா என்றேன்.

நோரா—(துக்கமாக) அவ்வளவுதானா?

டாக்டர்—நான் போவதற்கு முன் உனக்கு அறிவித்துவிட வேணு மென்று நான் தீர்மானித்திருந்தேன். இதை விட வசதியான சமயங் கிடைப்பது அரிது. இப்போ நீ அதை அறிவாய், நோரா, பிறரை நம்புவதைப் போலின்றி, நீ என்னைக் கடைசி வரையில் நம்பலா மென்றும் இதனால் நீ இப்போது அறிவாய்.

நோரா—(தீர்மானத்துடனும் அமைதியுடனும் எழுந்திருக்கிறாள்) நான் அந்தண்டை போகிறேன்.

டாக்டர்—(வழி விட்டுவிட்டு, ஆனால் அசையாது உட்கார்ந்தபடியே) நோரா.

நோரா—(கூடத்துக் கதவண்டை யிருந்தபடி) ஹெலன், விளக்குக் கொண்டு வா. (கணப்பண்டை போகிறாள்) பிரிய

டாக்டர் ராங்க், உண்மையில் நீங்கள் பண்ணியது மகா கொடுமையான காரியம்.

டாக்டர்—பிறர் உன்னைக் காதலிப்பதை விட அதிகமாகக் காதலிப்பதா? அதுவா கொடுமை?

நோரா—இல்லை; ஆனால் வந்து அதை இப்படிச் சொன்னது. அதைச் சொல்ல வேண்டிய அவசியமே யில்லை.

டாக்டர்—என்ன சொல்லுகிறாய்? உனக்கு முன்னரே தெரியுமா?—(வேலைக்காரி விளக்குடன் வருகிறாள். விளக்கை மேஜை மேல் வைத்துவிட்டு வெளியேறுகிறாள்.) நோரா—மிஸிஸ் ஹெல்மர்—என்னிடம் சொல், உனக்கு என் காதலைப் பற்றி இதற்கு முன்னரே தெரியுமா?

நோரா—ஓ! எனக்கு இதைப் பற்றித் தெரியுமா தெரியாதா என்று எப்படித் தெரியும்? உண்மையில் உங்களுக்குச் சொல்ல எனக்குத் தெரியாது—ஆனால் இவ்வளவு மோசமாக நடந்து கொள்வீர்கள் என்று நான் நினைக்கவே யில்லை, டாக்டர் ராங்க்! நாம் எவ்வளவு நேர்த்தியாகப் பழகிக் கொண்டிருந்தோம்.

டாக்டர்—அதிருக்கட்டும்: இப்பொழுது உனக்குத் தெரியும். என் உடலும் ஆவியும் உன்னுடையவை; உன்னிஷ்டப்படி நான் செய்வேன் என்று. எனவே என்ன செய்ய வேண்டு மென்று சொல்லு.

நோரா—(அவரைப் பார்த்துக்கொண்டே) இப்போ நடந்ததற்கெல்லாம் பிறகுமா?

டாக்டர்—என்னால் ஆகவேண்டிய தென்ன என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

நோரா—இனிமேல் என்னால் தங்களிடம் ஒன்றுஞ் சொல்ல முடியாது.

டாக்டர்—அதெல்லாம் சொல்லத்தான் வேணும். நீ அது மாதிரி என்னைத் தண்டிக்கக் கூடாது. உனக்காக ஒரு மனிதனுல் செய்யக்கூடியதை யெல்லாம் செய்ய எனக்கு உத்தரவு கொடு.

நோரா—இனிமேல் நீங்கள் எனக்குச் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. தவிரவும், உண்மையில் இனி எனக்கு யாருடைய உதவியும் வேண்டியதில்லை. நான் சொன்ன தெல்லாம் முழுவதும் வெறும் கற்பனைதான் என்று நீங்களே கண்டுபிடித்தாய்விடும். உண்மையிலேயே கற்பனைதான்—நிஜமாகவே. (ஆடு நாற்காலியில் உட்காருகிருள்: புன்சிரிப்புடன் நிமிர்ந்து அவரைப் பார்க்கிருள்) நீங்கள் ரொம்ப நேர்த்தியான மனிதர், டாக்டர் ராங்க்! —இப்போ விளக்கு வந்துவிட்டதால் வெளிச்சத்தில் உங்களுக்கே வெட்கமாக இல்லையா ?

டாக்டர்—கொஞ்சங்கூட இல்லை. ஆனுல் நான் போவது தான் சரியா ?—திரும்பி வராமல் ?

நோரா—வேண்டாம்: நீங்கள் போகக் கூடாது. உண்மையில் நீங்கள் வழக்கம்போல் வரத்தான் வேணும். நீங்களில்லாமல் தார்வால்டால் காலந்தள்ள முடியாது என்று தெரியுமோல்லியோ ?

டாக்டர்—ஆம், ஆனுல் நீ ?

நோரா—ஓ, நீங்கள் எப்போ வந்தாலும் எனக்கு மட்டில்லாத திருப்தி.

டாக்டர்—அதுதான் என்னைத் தப்பர்த்தம் கொள்ளும்படி செய்தது. நீ எனக்குப் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராக இருக்கிருய். ஹெல்மருடன் இருப்பதை விட

என்னுடன் இருப்பதை நீ ரசித்ததாக நான் அடிக்கடி எண்ணியிருக்கிறேன்.

நோரா—ஆம்—ஒரு சிலரை நாம் மனப்பூர்வமாகக் காதலிக்கிறோம், வேறு சிலரை நாம் எப்போதும் பக்கத்திலிருக்க வேண்டிய நண்பர்களாக விரும்புகிறோம்—இல்லையா?

டாக்டர்— ஆம், அதுவும் உண்மைதான்.

நோரா—நான் என் வீட்டி லிருக்கும் போது, எங்கப்பாவை ரொம்ப நேசித்தேன். ஆனால் எப்பவும் எனக்கு வேலைக்காரிகளின் அறையில் இருப்பதுதான் ரொம்பப் பிடிக்கும்; ஏனெனில் அது ரொம்ப வேடிக்கையாக இருக்கும்: அவர்கள், 'இப்படிச் செய்: அப்படிச் செய்' என்று சதா சொல்லிக்கொண் டிருப்பது கிடையாது; தங்களுக்குள் எவ்வளவோ வேடிக்கையான விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

டாக்டர்—தெரிகிறது: அவர்களுடைய இடத்துக்கு நான் வந்தேனுக்கும்.

நோரா—(குதித்தெழுந்து அவரண்டை போய்) ஓ, பிரிய டாக்டர் ராங்க், நான் அந்த அர்த்தத்தில் சொல்லவேயில்லை. ஆனால் தார்வால்டுடன் இருப்பது கிட்டத்தட்ட அப்பாவுடன் இருப்பது போல இருக்கிறது என்று உங்களுக்கே தெரிய வில்லையா?—

(கூடத்திலிருந்து வேலைக்காரி வருகிறாள்.)

வேலைக்காரி—மன்னிக்கவும், அம்மா. (குசுகுசு வென்று ஏதோ சொல்லுகிறாள்; அவளிடம் ஒரு கார்டைக் கொடுக்கிறாள்.)

நோரா—(கார்டைப் படித்துவிட்டு) ஓ! (தன் பையில் போட்டுக் கொள்ளுகிறாள்.)

டாக்டர்—ஒன்றும் விசேஷமில்லையே?

நோரா—இல்லை, இல்லை, ஒன்றும் விசேஷமில்லை. ஏதோ ஒரு—என்னுடைய புது ஆடையைப் பற்றி...

டாக்டர்—என்ன? உன் ஆடைதான் இங்கு இருக்கிறதே?

நோரா—ஆமாம், அது ஒன்று; இது இன்னொன்றைப் பற்றி. நான் அதைக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். தார்வால்டுக்கு விஷயம் தெரியக் கூடாது......

டாக்டர்—ஓஹோ! அதுதான் அந்தப் பெரிய ரகசியமோ?

நோரா—ஆமாம், நீங்கள் அவரிடம் போங்கள்; தார்வால்ட் உள் அறையில் இருக்கிறார். எவ்வளவு நாழிகை பேசிக் கொண்டிருக்க முடியுமோ அவ்வளவு நாழிகை இங்கு வர விடாமல்......

டாக்டர்—கவலைப்படாதே; அவன் இங்கு வராமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். (ஹெல்மரின் அறைக்குள் போகிறார்.)

நோரா—(வேலைக்காரியிடம்) அவன் சமையலறையில் காத்துக்கொண்டு நின்றிருக்கிறானா?

வேலைக்காரி—ஆம்: அவன் கொல்லைப்புற வழியாய் வந்தான்.

நோரா—வீட்டில் யாருமில்லை யென்று சொல்லவில்லையா நீ?

வேலைக்காரி—சொன்னேன்; அது பிரயோஜனப் படவில்லை.

நோரா—அவன் போக மாட்டேனென்கிறானா?

வேலைக்காரி—ஆம்; உங்களைப் பார்க்காமல் அசையமாட்டேன் என்கிறான், அம்மா.

நோரா—சரி, அவன் உள்ளே வரட்டும்—ஆனால் மெதுவாக வரச் சொல். ஹெலன், நீ இதைப் பற்றி யாரிடமும் ஒன்றும் சொல்லக் கூடாது. இது என் கணவருக்கு ஒரு ஆச்சரியமாக இருக்க வேண்டியது.

வேலைக்காரி—ஆம், அம்மா, எனக்குத் தெரிகிறது. (போகிறாள்.)

நோரா—இந்தப் பயங்கரமான காரியம் நடந்தே தீரும் போலிருக்கிறது! நான் என்ன செய்தாலும் நடக்கத்தான் நடக்கும் போலிருக்கிறது. நடக்காது, நடக்காது, நடக்காது; அது, அப்படி நடக்க முடியாது!—அது நடக்கக் கூடாது!

[ஹெல்மரின் அறைக் கதவைத் தாளிடுகிறாள். வேலைக்காரி, கூடத்துக் கதவை க்ராக்ஸ்டாடுக்காகத் திறந்துவிட்டு, அவன் உள்ளே வந்ததும், சாத்திக்கொண்டு போகிறாள். அவன் கம்பளிக் கோட்டும், உயர்ந்த பூட்ஸுகளும், கம்பளிக் குல்லாயும் அணிந்திருக்கிறான்.]

நோரா—(அவனை அணுகிக் கொண்டே) மெதுவாகப் பேசும், என் கணவர் வீட்டிலிருக்கிறார்.

க்ராக்ஸ்டாட்—அதைப் பற்றி எனக்கென்ன?

நோரா—என்னிடம் உமக்கென்ன வேணும்?

க்ராக்ஸ்டாட்—ஒரு விஷயத்தைப் பற்றித் தகவல்கள்.

நோரா—ஜல்தி சொல்லும், என்ன அது?

க்ராக்ஸ்டாட்—என்னை வேலையைவிட்டு நீக்கிவிட்டதாக அறிக்கை வந்துவிட்டது என்று உங்களுக்குத் தெரியுமா?

நோரா—என்னால் அதைத் தடுக்க முடியவில்லை, மிஸ்டர் க்ராக்ஸ்டாட். உமக்காக என்னால் முடிந்த வரையில் சண்டையிட்டுப் பார்த்தேன்: ஆனால் அது பிரயோஜனப் படவில்லை.

க்ராக்ஸ்டாட்—உங்களிடம் உங்கள் கணவருக்கு அன்பு இவ்வளவுதானா? நான் உங்களை என்ன பாடு படுத்தலாம் என்று தெரிந்தும் அவர் இப்படிச் செய்ய—

நோரா—அதைப்பற்றி அவருக்குத் தெரியும் என்று நீர் எப்படி நினைக்கலாம்?

க்ராக்ஸ்டாட்—நான் உண்மையில் அப்படி நினைக்கவேயில்லை. நமது அருமைத் தார்வால்ட் ஹெல்மருக்கு அவ்வளவு தைரியம் கிடையாது என்று எனக்குத் தெரியாதா என்ன? அவர்...

நோரா—மிஸ்டர் க்ராக்ஸ்டாட், தயவு செய்து என் கணவரைப் பற்றி மரியாதையாகப் பேசவும்.

க்ராக்ஸ்டாட்—சந்தேகமின்றி—அவருக்கு உரிய மரியாதையைத் தர நான் தயார். இவ்வளவு ஜாக்கிரதையாகச் சமாசாரத்தை யாரிடமும் சொல்லாமல் நீங்களே அமுக்கி வைத்துக் கொண்டிருக்கிறீர்களே—நீங்கள் செய்த காரியத்தின் முழு அர்த்தமும் உங்களுக்கு இன்றுவது தெரிகிறதா? இல்லை இன்னமும் நேற்று இருந்தாற்போல் தான் இருக்கிறதா?

நோரா—நீர் சொல்லக் கூடியதைவிட அதிகமாகவே தெரிகிறது.

க்ராக்ஸ்டாட்—ஹா! நான் என்ன ஒரு அசட்டு லாயர்தானே!

நோரா—என்னிடம் உமக்கு என்ன வேணும்?

க்ராக்ஸ்டாட்—நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று பார்த்துவிட்டுப் போக வந்தேன், மிஸிஸ் ஹெல்மர். நான் நாள் முழுவதும் உங்களைப் பற்றியேதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஒரு அற்ப சம்பளக்காரன், ஏழைக் குமாஸ்தா, ஒரு...அதிகஞ் சொல்லுவானேன், என்னைப் போன்ற மனிதனுக்குக்கூட—உணர்ச்சி என்று சொல்லுவார்களே அது கொஞ்சம் இருக்கிறது. தெரியுமோல்லியோ?

நோரா—உணர்ச்சி யிருந்தால் அதைக் காட்டுவதுதானே; என் சிறிய குழந்தைகளைப் பற்றி எண்ணிப் பாரும்.

க்ராக்ஸ்டாட்—நீங்களும் உங்கள் கணவரும் என் குழந்தைகளைப் பற்றி எண்ணிப் பார்த்தீர்களா? ஆனால் அதைப் பற்றிக் கவலைப்படுவானேன்! நீங்கள் இதைப் பற்றி உண்மையில் அதிகக் கவலைப்பட வேண்டாம் என்றுதான் நான் உங்களிடம் சொல்ல விரும்பினேன். என்னைப் பற்றிய வரையில் உங்களைக் குற்றஞ் சாட்டுவதாக எனக்கு உத்தேசமே இல்லை.

நோரா—இருக்காது, நானும் இருக்காது என்றுதான் எண்ணினேன்.

க்ராக்ஸ்டாட்—சிநேக பாவத்தில் எல்லாவற்றையும் ரொம்பச் சௌகரியமாக ஏற்பாடு செய்து விடலாம்; வேறு யாரும் இதைப் பற்றி யறிய ஒரு காரணமும் இல்லை. நம் மூவருக்கும் தெரிந்த ரகசியமாக இருக்கும் இது.

நோரா—என் கணவர் இதைப்பற்றி எதுவும் அறியவே கூடாது.

க்ராக்ஸ்டாட்—அதை நீங்கள் எப்படித் தடுக்க முடியும்? எனக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியை நீங்கள் இப்பவே கொடுத்து விடுவதாகச் சொல்லுகிறீர்களா?

நோரா—இல்லை, இப்போ என்னால் முடியாது.

க்ராக்ஸ்டாட்—கூடிய சீக்கிரம் அந்தப் பணத்தைக் கொடுத்து விட ஏதாவது வழி கண்டுபிடித்திருக்கிறீர்களா?

நோரா—நான் ஒரு வழியும் கண்டுபிடித்து உபயோகிப்பதாக இல்லை.

க்ராக்ஸ்டாட்—எப்படியும், இப்போது அது உங்களுக்கு உபயோகப்படாது. கையில் ஏகப்பட்ட பணத்தை வைத்

துக்கொண்டு நீங்கள் நின்றாலும், நான் பத்திரத்தை விடமாட்டேன்.

நோரா—அதை வைத்துக்கொண்டு நீர் என்ன செய்யப் போகிறீர் என்பதைச் சொல்லும்.

க்ராக்ஸ்டாட்—அதை நான் பத்திரமாக வைத்திருப்பேன்—நானே வைத்துப் பாதுகாப்பேன். இதைப் பற்றிச் சம்பந்த மில்லாதவர் யாருக்கும் அதைப் பற்றி அணுவளவும் தெரியாது. அதைப் பற்றிய சிந்தனை, திக்கற்ற நிலையில், ஏதாவது மூர்க்கமான தீர்மானம் செய்யத் தூண்டி யிருந்தால்—

நோரா—தூண்டத்தான் செய்தது.

க்ராக்ஸ்டாட்—நீங்கள் வீட்டை விட்டு ஓடிப் போவதாக எண்ணி யிருந்தால்—

நோரா—எண்ணினேன்.

க்ராக்ஸ்டாட்—அதைவிட மோசமாக ஏதாவது செய்வதாக நினைத்திருந்தாலும்—

நோரா—உமக் கெப்படித் தெரிந்தது அது?

க்ராக்ஸ்டாட்—அந்த எண்ணத்தை விட்டு விடவும்.

நோரா—நான் அதைப் பற்றி நினைத்தேன் என்று உமக் கெப்படித் தெரிந்தது?

க்ராக்ஸ்டாட்—நாம் எல்லோரும் அநேகமாக முதலில் அதைப் பற்றித்தான் நினைப்போம். நானும் நினைத்தேன்—ஆனால் எனக்குத் துணிச்சல் இல்லை.

நோரா—(ஹீனமாக) எனக்கும் இல்லை.

க்ராக்ஸ்டாட்—(ஏதோ பாரம் நீங்கியவன் போல்) ஆம், அப்படித்தான். இல்லையா—உங்களுக்கும் அதற்கு வேண்டிய தைரியம் இல்லையே?

நோரா—இல்லை, தைரியம் இல்லையே!

க்ராக்ஸ்டாட்—தவிரவும், அது பெரிய அசட்டுத்தனத்தைத் தவிர வேறு என்ன? வீட்டில் முதல் புயல் அடித்து ஓய்ந்துவிட்டது. உங்கள் கணவருக்கு ஒரு கடிதம் எழுதி இதோ என் பையில் வைத்திருக்கிறேன்.

நோரா—அவருக்கு எல்லாவற்றையுஞ் சொல்லியா?

க்ராக்ஸ்டாட்—என்னால் எவ்வளவு இரக்கமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு இரக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

நோரா—(அவசரமாக) அந்தக் கடிதத்தை அவர் பார்க்கக் கூடாது. அதைக் கிழித்து எறிந்துவிடும். நான் உமது பணத்தைக் கொடுக்க ஏதாவது வழி கண்டுபிடித்து விடுகிறேன்.

க்ராக்ஸ்டாட்—என்னை மன்னிக்கவும், மிஸிஸ் ஹெல்மர். நான் இப்போதானே உங்களிடம் சொன்னேன் என்று நினைக்கிறேன்.

நோரா—நான் உமக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியைப் பற்றி மட்டும் சொல்லவில்லை: என் கணவரிடமிருந்து நீர் எவ்வளவு பணம் எதிர்பார்க்கிறீர் என்று மட்டும் சொல்லிவிடும், நான் அந்தப் பணத்தைக் கொடுக்கிறேன்.

க்ராக்ஸ்டாட்—உங்கள் கணவரிடம் நான் ஒரு காசுகூடக் கேட்கவில்லை.

நோரா—பின் என்னதான் வேணும் உமக்கு?

க்ராக்ஸ்டாட்—எனக்கு வேண்டியதைச் சொல்லுகிறேன், கேளுங்கள். இழந்துவிட்ட என் மதிப்பை நான் திரும்பப் பெற வேண்டுகிறேன், மிஸிஸ் ஹெல்மர்; நான் உலகில் முன்னேற விரும்புகிறேன்; அதில் உங்கள்

கணவர் எனக்கு உதவி புரிய வேணும். போன ஒன்றரை வருஷமாக நான் கெட்ட காரியம் ஒன்றிற்கூடப் பட்டுக்கொள்ள வில்லை: அந்த நாட்களெல்லாம் கையில் ஒன்றுமில்லாமல் நான் தவித்திருக்கிறேன். நான் படிப் படியாகச் சிரமப்பட்டு முன்னேறினல் போதுமென்று இருந்தேன். இப்பொழுது என்னை வெளியே தூத்தினல்? நான் மறுபடியும் அந்த அற்ப வேலையைப் பெறுவதோடு மட்டும் திருப்தியடைய மாட்டேன். நான் முன்னுக்கு வரவேணும், தெரிகிறதா? பாங்கில் ஒரு உயர்ந்த பதவியில் என்னை எடுத்துக்கொள்ள வேணும்; உங்கள் கணவர் எனக்கு ஒரு இடம் பண்ணித் தரவேணும்.

நோரா—அதை அவர் ஒருநாளும் செய்ய மாட்டார்!

க்ராக்ஸ்டாட்—அவர் செய்வார்; அவரை எனக்குத் தெரியும்; ஆட்சேபிக்க அவருக்குத் தைரியம் கிடையாது. நான் மறுபடியும் அவருடன் வேலை செய்ய ஆரம்பித்து விட்டேனுல், நீங்களே பாருங்களேன்! ஒரு வருஷத்துக்குள் நான் மானேஜருக்கு மிகவும் வேண்டியவனுக ஆகிவிடுவேன். அப்புறம் பாங்கை நடத்துபவர் நில்ஸ் க்ராக்ஸ்டாடுதான், தார்வால்டு ஹெல்மரில்லை.

நோரா—அப்படி வந்து நீர் என்றும் காணமாட்டீர்!

க்ராக்ஸ்டாட்—நீங்கள் அப்படிக் காண முடியாமல் செய்து விடுவதாய்...

நோரா—அதற்கு வேண்டிய தைரியம் எனக் கிப்போது இருக்கிறது.

க்ராக்ஸ்டாட்—ஓ, நீர் என்னைப் பயமுறுத்த முயலுவதில் பிரயோஜனமில்லை. ஒரு அழகிய ஸ்திரீ...

நோரா—பார்த்தால் தெரியும், நீர்தான் பார்க்கப் போகிறீரே!

க்ராக்ஸ்டாட்—பனிக்கட்டிக்கு அடியிலா? குளிர்ந்து கறுத்த ஜலத்துக்குக் கீழேயா? அப்புறம் வஸந்த காலத்தில் யாரும் அறிய முடியாதபடி அழுகி, கோரமாய், உங்கள் தலை மயிர்கள் உதிர்ந்துபோய், மிதக்கவா?—

நோரா—இப்படி என்னை உம்மால் பயமுறுத்த முடியாது.

க்ராக்ஸ்டாட்—உங்களாலும் என்னைப் பயமுறுத்த முடியாது. ஜனங்கள் அம்மாதிரிச் செய்வதில்லை, மிஸிஸ் ஹெல்மர். தவிரவும் அதனால் என்ன பிரயோஜனம்? எப்படியும் அவர் என் கைக்குள் அகப்பட்டுத்தான் கிடக்க வேணும்.

நோரா—அப்புறம்? நானில்லாதபோது...

க்ராக்ஸ்டாட்—உங்கள் புகழ் அப்பவும் என் கையில்தானிருக்கும் என்பதை மறந்து விட்டீர்களா? (நோரா பேசாமல் அவனைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள்) சரி, இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். அசட்டுத்தனமாக எதையாவது செய்து விடாதேயுங்கள். ஹெல்மர் என் கடிதத்தைக் கண்டதும், எனக்கு ஒரு கடிதம் அனுப்புவார் என்று எதிர்பார்ப்பேன். உங்கள் கணவரால்தான் நான் இப்படி மறுபடியும் தீய வழிகளில் பிரவேசிக்க வேண்டியிருக்கிறது என்பதையும் மறந்துவிட வேண்டாம். நான் அவரை என்றும் மன்னிக்க மாட்டேன். போய் வருகிறேன், மிஸிஸ் ஹெல்மர். (கூடத்து வழியே வெளியேறுகிறான்.)

நோரா—(கூடத்துக் கதவண்டை போகிறாள்; ஒருக்களித்தாற் போல் திறந்து வைத்துக்கொண்டு, கவனிக்கிறாள்.) அவன் போய்விட்டான். அவன் கடிதப் பெட்டியில் கடிதத்தைப் போடவில்லை. ஓ, இல்லை! இல்லை! அது

சாத்தியமில்லை! (கதவைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திறக்கிறாள்.) அது என்ன அது? அவன் வெளியே நின்றுகொண் டிருக்கிறான். அவன் கீழே யிறங்கிப் போகவில்லையே! செய்யலாமா, வேண்டாமா என்று தயங்குகிறானா? அவனால் கூட—

[பெட்டிக்குள் ஒரு கடிதம் விழும் சப்தம் கேட்கிறது; பிறகு க்ராக்ஸ்டாடின் காலடிச் சத்தம் அவன் படி யிறங்கி நடக்கும் வரையில் காதில் விழுகிறது. நோரா வாயைப் பொத்திக் கொண்டு கூச்சலிடுகிறாள்; அறையில் குறுக்கே ஸோபாவுக்குப் பக்கத்தி லிருக்கும் மேஜையண்டை ஓடுகிறாள். சற்று நேரம் மௌனம்.]

நோரா—அந்தக் கடிதப் பெட்டியில்—(கூடத்துக் கதவு வரையில் மெல்ல நடந்து போகிறாள்.) அதோ கிடக்கிறது— தார்வால்ட், தார்வால்ட், இனிமேல் நமக்கு உய்ய வழி கிடையாது!

(மிஸிஸ் லிண்டே இடதுபுற அறையிலிருந்து, கையில் ஆடையுடன் வருகிறாள்.)

லிண்டே—இதோ, பாக்கியைத் தைக்க இனிமேல் இன்று எனக்குக் கண் தெரியவில்லை. அதை வேண்டுமானால் போட்டுப் பார்க்கிறாயா?

நோரா—(மிகவும் கம்மிய குரலில்) கிறிஸ்டின், இங்கே வா.

லிண்டே—(ஆடையை ஸோபாவின் மேல் எறிந்துவிட்டு) என்ன நேர்ந்தது? உனக்கு என்ன? உன்னைப் பார்த்தால் ரொம்பக் கலக்க மடைந்தவளாகத் தோன்றுகிறதே!

நோரா—இங்கே வா. அந்தக் கடிதத்தைப் பார்த்தாயோ? அதோ பார்—கடிதப் பெட்டியின் கண்ணாடி வழியாகத் தெரிகிறது, பார்.

லிண்டே—ஆம், அதோ ஒரு கடிதம் இருக்கிறது.

நோரா—அந்தக் கடிதம் க்ராக்ஸ்டாடிடமிருந்து வந்திருக்கிறது.

லிண்டே—நோரா!—உனக்குப் பணம் கடன் கொடுத்தவன் க்ராக்ஸ்டாட்தானா?

நோரா—ஆம், இனிமேல் தார்வால்டுக்கு எல்லாம் தெரிந்துவிடும்.

லிண்டே—ஆமாம், நோரா, அவருக்குத் தெரிவதுதான் உத்தமம்.

நோரா—உனக்கு விஷயம் முழுவதும் தெரியாது. நான் ஒரு பொய்க் கையெழுத்திட்டேன்.

லிண்டே—தெய்வமே!—

நோரா—நான் இதை உனக்கு மட்டும் சொல்ல விரும்புகிறேன், கிறிஸ்டின்—நீதான் எனக்குச் சாட்சியாக இருக்க வேண்டும்.

லிண்டே—உனக்குச் சாட்சியா? என்ன அர்த்தம் அதற்கு? நான் என்ன......?

நோரா—எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டால்—அது சாதாரணமாகவே நேர்ந்துவிடும்—

லிண்டே—நோரா!

நோரா—அல்லது வேறு ஏதாவது நேருமானாலும்—நான் இங்கு இருக்க முடியாதபடி ஏதாவது நேர்ந்துவிட்டாலும்—

லிண்டே—நோரா! நோரா! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?

நோரா—யாராவது எல்லாப் பாரத்தையும், எல்லாக் குற்றத்தையும், தன் மேலேயே ஏற்றிக்கொண்டு சுமக்க முன் வந்தால்—புரிகிறதா?

லிண்டே—ம்...ம்...ஆனால் நீ அப்படி அநுமானிக்க......?

நோரா—அப்பொழுது நீதான் எனக்குச் சாட்சி. அது உண்மை யில்லை என்று நீ சொல்ல வேணும், கிறிஸ்டின். எனக்கு இப்பொழுது பைத்திய மொன்றுமில்லை; என் புத்தி ஸ்வாதீனத்தை இன்னும் இழந்துவிடவில்லை; என்னைத் தவிர இதைப் பற்றி வேறு யாருக்கும் இது வரையில் ஒன்றுந் தெரியாது: நான், நானே தனியாக, இதைச் செய்தேன். ஞாபகம் இருக்குமா?

லிண்டே—இருக்கும், இருக்கும். ஆனால் எனக்கு இதெல் லாம் புரியவே யில்லை.

நோரா—உனக்கு எப்படிப் புரிய முடியும்? ஒரு ஆச்சரியமான காரியம் நிகழப் போகிறது!

லிண்டே—என்ன ஆச்சரியமான காரியம்?

நோரா—ஆம்; மகா ஆச்சரியகரமான சம்பவம்! ஆனால் பயங் கரமானதுங் கூட: அது நிகழக் கூடாது: நிகழவே கூடாது.

லிண்டே—நான் உடனே போய் க்ராக்ஸ்டாடைப் பார்க்கி றேன்.

நோரா—வேண்டாம், நீ அவனிடம் போகாதே. அவன் உனக்குக் கெடுதி ஏதாவது விளைவிப்பான்.

லிண்டே—ஒரு காலத்தில் அவன் எனக்காகச் சந்தோஷத் துடன் என்ன காரியம் வேணுமானாலும் செய்திருப் பான்......

நோரா—யார்? அவனா?

லிண்டே—அவன் வீடு எங்கே?

நோரா—எனக்கெப்படித் தெரியும்?—ஆம் (தன் சட்டைப் பையில் தேடிக்கொண்டு) அவனுடைய கார்டு இதோ இருக்கிறது. ஆனால் அந்தக் கடிதம், அந்தக் கடிதம்—!

ஹெல்மர்—(தன் அறையிலிருந்து கதவைத் தட்டிக் கொண்டே கூப்பிடுகிறான்) நோரா?

நோரா—(கவலையுடன் கூவுகிறாள்) ஓ! யாரது? என்னது? என்ன வேணும்?

ஹெல்மர்—என்ன ரொம்பப் பயப்படுகிறாயே! நாங்கள் உள்ளே வரவில்லை; நீதான் கதவைத் தாளிட்டிருக்கிறாயே! உன் ஆடையைப் போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கிறாயா?

நோரா—ஆமாம், அதுதான். நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் தெரியுமோ, தார்வால்ட்!

லிண்டே—(க்ராக்ஸ்டாடின் கார்டை வாசித்துவிட்டு) அவன் அடுத்த முக்கில்தான் வசிக்கிறான்.

நோரா—ஆம். ஆனால் அதனால் உபயோகமென்ன? எனக்கு நம்பிக்கையில்லை. கடிதம் பெட்டியில் கிடக்கிறதே!

லிண்டே—அதன் சாவி உன் கணவரிடந்தான் இருக்கிறதா?

நோரா—ஆம், எப்பொழுதுமே.

லிண்டே—க்ராக்ஸ்டாட் ஏதாவது சாக்குச் சொல்லி அந்தக் கடிதம் வாசிக்கப்படுவதன் முன் திருப்பிப் பெற வேணும்.

நோரா—ஆனால் வழக்கமாகத் தார்வால்ட் இத்தனை நாழிகைக்குத்தான் கடிதப் பெட்டியைத் திறந்து—

லிண்டே—நீதான் அவரைத் தடுக்க வேணும். அவருடன் கூடவேயிரு. நான் என்னால் கூடிய சீக்கிரம் திரும்பி வந்து விடுகிறேன்.

(அவசர அவசரமாகக் கூடத்துக் கதவு வழியாக வெளியேறுகிறாள்.)

நோரா—(ஹெல்மரின் கதவண்டை போய், அதைத் திறந்து எட்டிப் பார்க்கிறாள்.) தார்வால்ட்!

ஹெல்மர்—(உள் அறையிலிருந்து) என்ன? என்னுடைய அறைக்குள் வர இனிமேல் நான் துணியலாமா? வா, ராங்க், நீயும் வா, இப்போ பாரேன்—(நிலைப்படியில் நின்றபடி) ஆனால் இதென்ன இது?

நோரா—எது என்ன?

ஹெல்மர்—நீ ரொம்ப அழகான புது ஆடை அணிந்து முழுதும் மாறி யிருப்பாய் என்று ராங்க் சொன்னானே!

டாக்டர்—நான் அப்படித்தான் நினைத்தேன்: ஆனால் தப்பாக அப்படி நினைத்துவிட்டேன் போ லிருக்கிறது.

நோரா—என்னை அந்த ஆடையில் பார்க்க நாளை வரையில் யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்!

ஹெல்மர்—ஆனால், என் அருமை நோரா, நீ ரொம்பக் களைத்துப் போயிருக்கிறாயே. ரொம்ப நேரமாக நாட்டியம் ஆடிப் பழகிப் பார்த்துக்கொண்டாயா?

நோரா—இல்லையே, இன்னும் ஆடிப் பார்க்கவே யில்லை.

ஹெல்மர்—ஆனால் நீ இங்கு பழகிப் பார்ப்பது அவசியமில்லையா?......

நோரா—ஆம், அவசியந்தான். நான் அந்த நாட்டியம் ஆடிப் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் உன் உதவியின்றி அதைப் பழகிப் பார்க்க என்னால் முடியாது, தார்வால்ட்; அநேகமாக முழுவதும் எனக்கு மறந்தே போய்விட்டது.

ஹெல்மர்—ஓ! அதனாலென்ன? நாம் இருவருமாக உட்கார்ந்தால் அதை வெகு சீக்கிரம் ஞாபகப்படுத்திக் கொண்டு விடலாம்.

நோரா—ஆம், தார்வால்ட்: நீதான் எனக்கு உதவி செய்ய வேணும். என்னுடன் கூட இருந்து உதவி செய்வதாக

வாக்களி. அங்கு கூடியிருக்கும் ஜனங்களை நினைத்தால்—எனக்குப் பயமாக இருக்கிறது......இன்று முழுவதும் நீ என்னுடனேதான் இருக்கவேணும். வேறு ஒரு வேலையும் செய்யக்கூடாது—கையில் பேனுவைக் கூட எடுக்கக் கூடாது. சத்தியஞ் செய்து கொடுப்பாயா, தார்வால்ட் ?

ஹெல்மர்—சத்தியமாக உன்னுடனேயே இருக்கிறேன்: வேறு ஒரு காரியமும் செய்யவில்லை. இன்று மாலை முழுவதும் உன்னை விட்டு அசைவதில்லை. ஆனால் முதலில் நான் போய்—(கூடத்துக் கதவுப் பக்கம் போகிறான்.)

நோரா—அங்கே என்ன செய்யப் போகிறாய் ?

ஹெல்மர்—ஏதாவது கடிதம் வந்திருக்கிறதோ என்று பார்த்து விட்டு வருகிறேன்.

நோரா—வேண்டாம், வேண்டாம்! பார்க்கவேண்டாம், தார்வால்ட் !

ஹெல்மர்—ஏன் வேண்டாம் ?

நோரா—தார்வால்ட், வேண்டாம்! ஒரு கடிதமும் வரவில்லை.

ஹெல்மர்—இரேன், நான் பார்க்கிறேன். (கடிதப் பெட்டிப் பக்கம் போகத் திரும்புகிறான். நோரா, பியானோவில், டாரெண்டெல்லா பாட்டின் முதல் அடியை ஆரம்பிக்கிறாள். ஹெல்மர் கதவுப் படியில் நின்றுவிடுகிறான்.) ஆஹா !

நோரா—நீ உதவி செய்யவில்லையென்றால் நாளைக்கு என்னால் நாட்டியமாட முடியாது.

ஹெல்மர்—(திரும்பி அவளை அணுகுகிறான்) நிஜமாகவே அதைப் பற்றி உனக்கு அவ்வளவு பயமா, கண்ணே !

நோரா—ஆம், ரொம்பப் பயமாகத்தா னிருக்கிறது. நாம் இப்பவே ஆரம்பிக்கலாமோ? சாப்பிடப் போகுமுன், கொஞ்ச நேரம் இருக்கிறதே. உட்காரு, பியானோவில் பாட்டைப் பாடு, தார்வால்ட்; நான் ஆடுவதில் தப்பிருந்தால் திருத்து.

ஹெல்மர்—அது உன்னிஷ்ட மென்றால், சந்தோஷத்துடன் ...... (பியானோவுக் கெதிரே உட்காருகிறான்.)

நோரா—(பெட்டியிலிருந்து ஒரு "தாம்பூரி" னையும், பல வர்ணங்கள் தீட்டப்பட்ட ஒரு போர்வையையும் எடுக்கிறாள். அவசர அவசரமாகப் போர்வையைப் போர்த்திக் கொள்ளுகிறாள். பிறகு மேடையில் முன் வந்து கூவுகிறாள்.) இப்போ வாசிக்க ஆரம்பிக்க வேணும். நான் நாட்டியமாடப் போகிறேன்.

[ஹெல்மர் பாட்டை வாசிக்கிறான். நோரா ஆடுகிறாள். டாக்டர் ராங்க், பியானோவுக் கருகில், ஹெல்மருக்குப் பின் நின்று கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறார்.]

ஹெல்மர்—(பியானோவில் வாசித்துக்கொண்டே) மெல்ல, இன்னும் மெதுவாக!

நோரா—மெல்ல ஆடத் தெரியவில்லையே!

ஹெல்மர்—இவ்வளவு வேகமாக ஆடக்கூடாது, நோரா!

நோரா—இப்படித்தான் ஆட வேண்டும்.

ஹெல்மர்—(பியானோ வாசிப்பதை நிறுத்திவிட்டு) இல்லை, இல்லை—அது கொஞ்சம்கூடச் சரியில்லை.

நோரா—(சிரித்துக்கொண்டு; தாம்பூரினை அப்படியும் இப்படியும் ஆட்டிக்கொண்டு) நான்தான் சொன்னேனே!

டாக்டர்—பாட்டை அவளுக்குத் தக்கபடி நான் வாசிக்கிறேனே!

ஹெல்மர்—(எழுந்துகொண்டு)—ஆம், நீ வாசி. அப்போ நான் அவள் நாட்டியத்தைத் திருத்துவது சுலபம்.

[டாக்டர் ராங்க் பியானோ வண்டை உட்கார்ந்து பியானோ வாசிக்கத் தொடங்குகிறார். நோரா படிப்படியாக வேகமாக நாட்டியம் ஆடுகிறாள். ஹெல்மர் கணப்புக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு அவள் நாட்டியத்தில் குறைகளைச் சொல்லி அடிக்கடி குறிக்கிட்டுத் திருத்துகிறான். ஆனால் அவள் அவன் சொல்வதைக் காதில் வாங்குவதாகத் தெரியவில்லை; அவள் தலைமயிர் அவிழ்ந்து தோள்மேல் விழுகிறது. அதையும் கவனியாமல் அவள் நாட்டிய மாடுகிறாள். மிஸிஸ் லிண்டே உள்ளே வருகிறாள்.]

லிண்டே—(நிலைப் படியில் கட்டுண்டவள் போல் நின்றுகொண்டு) ஓ!......

நோரா—(நாட்டியத்தை நிறுத்தாமல்) என்ன வேடிக்கை, கிறிஸ்டின்?

ஹெல்மர்—என் அருமை நோரா, உன் உயிரே இதைப் பொறுத்து நிற்பது போலல்லவா நீ நாட்டிய மாடுகிறாய்!

நோரா—அப்படித்தான் இருக்கிறது, நிஜந்தான்.

ஹெல்மர்—நிறுத்து, ராங்க்; இது வெறும் பைத்தியம். நில்லு, நான் சொல்லுகிறேன். (டாக்டர் ராங்க் பியானோவை மூடுகிறார்; நோரா திடீரென்று ஆடுவதை நிறுத்துகிறாள். ஹெல்மர் அவளை அணுகுகிறான்.) எனக்கு அதை நம்பவே முடியவில்லை. நான் உனக்குச் சொல்லிக் கொடுத்தது எல்லாவற்றையும் மறந்துவிட்டாயே!

நோரா—(தாம்பூரினை எறிந்துவிட்டு) அதுதான் சொன்னேனே!

ஹெல்மர்—அடியிலிருந்தே மறுபடியுஞ் சொல்லித்தர வேண்டியதுதான்.

நோரா—ஆம், அது அவசியந்தான்; உனக்கும் தெரிகிற தோல்லியோ! கடைசி நிமிஷம் வரையில் நீ என்னுடன் இருந்து, சொல்லிக்கொடுக்க வேணும்; செய்கிறேன் என்று சொல், தார்வால்ட்!

ஹெல்மர்—நீ என்னை நம்பலாம்—சொல்லித் தருகிறேன்.

நோரா—என்னைத் தவிர நீ வேறு ஒன்றையும் பற்றி நினைக்கவே கூடாது—இன்றும் சரி, நாளைக்கும் சரி, வேறு ஒரு வேலையும் செய்யக் கூடாது. ஒரு கடிதங்கூடப் பிரித்துப் பார்க்கக் கூடாது; கடிதப் பெட்டியைக் கூடத் திறக்கக் கூடாது.

ஹெல்மர்—ஹா, அந்தப் பயலைப் பற்றி உனக்கு இன்னும் பயமாக இருக்கிறதா?

நோரா—ஆம், எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது.

ஹெல்மர்—நோரா, உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே, அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்து கடிதப் பெட்டியில் கிடக்கிறது என்று.

நோரா—எனக்குத் தெரியாது; இருக்கிறது என்றே நினைக்கிறேன். நீ அது மாதிரி எதையும் இப்பொழுது வாசிக்கக் கூடாது. இதெல்லாம் முடியும் வரையில் உனக்கும் எனக்கும் இடையே ஒன்றும் வரக்கூடாது.

டாக்டர்—(ஹெல்மரிடம் ரகசியமாக) அவளுக்கு எதிர்த்துச் சொல்லாதே.

ஹெல்மர்—(அவளைத் தன் கைகளால் கட்டிக்கொண்டு) குழந்தையின் இஷ்டப்படியே நடக்கட்டும். ஆனால் நாளை இரவு, நீ நாட்டியம் ஆடி முடிந்த பிறகு—

நோரா—அப்போ உன்னிஷ்டப்படி செய்—
(வலதுபுற மிருக்கும் கதவு வழியாக வேலைக்காரி வருகிறாள்.)

வேலைக்காரி—சாப்பாடெல்லாம் தயார், அம்மா.

நோரா—ஷாம்பேனும் எடுத்து வை, ஹெலன்.

வேலைக்காரி—சரி, அம்மா. (போகிறாள்.)

ஹெல்மர்—ஹல்லோ, இன்று என்ன விருந்தா?

நோரா—ஆம், ஷாம்பேன் விருந்து—பொழுது விடியும் வரையில். (இரைந்து) கொஞ்சம் மிட்டாய்களும் எடுத்து வை, ஹெலன்—நிறைய, இன்று மட்டும்!

ஹெல்மர்—இந்தா, இந்தா, இவ்வளவு குழந்தைத்தனமாகப் பதறிக்கொண்டு இருக்காதே. வழக்கம் போல என் சின்னக் குயிலாகவே இருக்க வேண்டும்.

நோரா—ஆம், கண்ணே, அப்படியே இருக்கிறேன். ஆனால், இப்பொழுது உள்ளே போ நீ. நீங்களுந்தான், டாக்டர் ராங்க். கிறிஸ்டின், நீதான் என் தலையை வாரிப் பின்னி விடவேணும்.

டாக்டர்—(அவர்கள் வெளியே போய்க்கொண் டிருக்கையில் ஹெல்மரிடம் ரகசியமாக) விசேஷம் ஒன்றுமில்லையே? அவள் எதையாவது எதிர்பார்த்து இப்படி நடக்கிறாளா?

ஹெல்மர்—அதெல்லாம் ஒன்றுமில்லை, டாக்டர். நான் உனக்குச் சொல்லிக் கொண்டிருந்தேனே அதுதான்: குழந்தை மாதிரி இப்படியெல்லாம் இருப்பது அவள் சுபாவம். (அவர்கள் வலதுபுற அறைக்குள் போகிறார்கள்.)

நோரா—என்ன?

லிண்டே—ஊரிலில்லையாம்.

நோரா—உன்னைப் பார்த்தவுடனேயே எனக்குத் தெரிந்து விட்டது.

லிண்டே—நாளை மாலை திரும்பி வருகிறானும். நான் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறேன்.

நோரா—நீ இதில் குறுக்கிட்டிருக்க வேண்டிய அவசியமேயில்லை. நீ எதுவும் நேருவதைத் தடுக்க வேண்டாம். என்ன சொன்னாலும், ஒரு ஆச்சரியமான சம்பவத்தை எதிர்பார்த்திருப்பது நேர்த்தியாகத்தான் இருக்கிறது.

லிண்டே—நீ எதை எதிர்பார்த்துக் காத்துக்கொண் டிருக்கிறாய்?

நோரா—ஓ, உனக்குப் புரியாது. நீயும் அவர்களிடம் போ. நான் இதோ வந்து விடுகிறேன். (மிஸிஸ் லிண்டே சாப்பாட்டு அறைக்குள் போகிறாள். தன்னைத் திடப்படுத்திக் கொள்ள முயலுபவள் போல் சிறிது நேரம் அசையாமல் நிற்கிறாள் நோரா. பிறகு தன் கடிகாரத்தைப் பார்க்கிறாள்.) மணி ஐந்து. நள்ளிரவுக்கு ஏழு மணி நேரம் இருக்கிறது. அதற்கடுத்த நள்ளிரவுக்கு இருபத்தி நாலு மணி நேரம். பிறகு டாரெண்டெல்லா முடிந்துவிடும். இருபத்தி நாலும், ஏழும்? உயிர் வாழ இன்னும் முப்பத்தோரு மணி நேரம்.

ஹெல்மர்—(வலதுபுறக் கதவுப் படியிலிருந்து) என் சின்னக் குயில் எங்கே?

நோரா—(நீட்டிய கைகளுடன் அவனை அணுகி) இதோ இருக்கிறாளே!

# அங்கம் 3

[அதே இடம் - மேடையின் மத்தியில் மேஜை போடப்பட் டிருக்கிறது: அதைச் சுற்றி நாற்காலிகள். மேஜை மேல் ஒரு விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது. வெளிக் கூடத்துக்குப் போகும் கதவு திறந்து கிடக்கிறது. மேல் மாடியிலிருந்து நாட்டிய கானம் காதில் விழுகிறது. மிஸிஸ் லிண்டே மேஜையருகில் உட்கார்ந்துகொண்டு ஒரு புத்தகத்தின் ஏடுகளைச் சும்மா புரட்டிக்கொண் டிருக்கிறாள்; அவள் வாசிக்க முயலுகிறாள்: ஆனால் அவள் மனத்தில் சிந்தனைகள் கட்டுக் கடங்கவில்லை. சற்று நேரத்திற் கொருதரம் எதையோ எதிர்பார்ப்பது போலக் கதவுப் பக்கம் திரும்பிக் கவனிக்கிறாள்.]

லிண்டே—(தன் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு) இன்னம் இல்லையா—நாழிகை அநேகமாக ஆய்விட்டதே. அவன் வாராம லிருந்துவிட்டால்—(மறுபடியும் கவனிக்கிறாள்) ஹா! அதோ வந்துவிட்டான். (வெளிக் கூடத்துக்குப் போய் ஜாக்கிரதையாக வெளிக் கதவைத் திறக்கிறாள். வெளியே மாடிப் படியில் காலடிச் சத்தம் மெதுவாகக் கேட்கிறது. அவள் குசுகுசு வென்று பேசுகிறாள்.) உள்ளே வா, இங்கு யாருமில்லை.

க்ராக்ஸ்டாட்—(வாசற்படியில் நின்றபடி) என் வீட்டில் உன் கடிதத்தைப் பார்த்தேன். இதற்கு அர்த்த மென்ன?

லிண்டே—நான் உன்னுடன் பேச வேணும். ரொம்ப அவசியமான...

க்ராக்ஸ்டாட்—நிஜந்தானா? நான் இங்கு வரவேணு மென்பதும் அதிக அவசியந்தானா?

லிண்டே—நான் வசிக்கு மிடத்தில் சந்திப்பது முடியாத காரியம்; என் அறைக்குப் போகத் தனி வழிகூடக் கிடை

யாது. உள்ளே வா; இங்கு நாம் மட்டுந்தான் இருக்கிறோம். வேலைக்காரி தூங்கிவிட்டாள். ஹெல்மர்கள் இருவரும் மேலே நாட்டியக் கச்சேரிக்குப் போயிருக்கின்றனர்.

க்ராக்ஸ்டாட்—(அறைக்குள் வந்துகொண்டு) நிஜமாகவே இன்றிரவு ஹெல்மர் நாட்டியக் கச்சேரிக்கா போயிருக்கிறான்?

லிண்டே—ஆம், ஏன் போகக் கூடாது?

க்ராக்ஸ்டாட்—நிஜந்தான், ஏன் போகக் கூடாது?

லிண்டே—இப்போ, நில்ஸ், நீயும் நானும் பேச வேணும்.

க்ராக்ஸ்டாட்—நாமிருவரும் பேச ஏதாவது சமாசாரம் இருக்கிறதா?

லிண்டே—நாம் பேச எத்தனையோ இருக்கிறது.

க்ராக்ஸ்டாட்—நான் இருக்குமென்று நினைத்திருக்க மாட்டேன்.

லிண்டே—நிஜந்தான்: நீ என்றுவது என்னைச் சரியாக அறிந்துகொண் டிருந்தால்தானே!

க்ராக்ஸ்டாட்—உலகமே அறிந்ததைத் தவிர உன்னைப் பற்றி வேறு ஏதாவது அறிந்துகொள்வதற்கு இருந்ததா என்ன?—அன்பில்லாத ஸ்திரீ ஒருத்தி, பணம் படைத்த ஒருவன் வந்ததும், அவனுக்காகத் தன் காதலனைத் தூரத்திவிடுவது வழக்கந்தானே! அறிந்துகொள்ள வேறென்ன இருக்கிறது?

லிண்டே—நான் அன்பே யில்லாதவள் என்று நீ நிச்சயமாக முடிவுகட்டிவிட்டாயா, நில்ஸ்? நானும் மனப்பூர்வமாக, மனச் சந்தோஷத்துடன், அப்படிச் செய்தேன் என்று எண்ணுகிறாயா நீ?

க்ராக்ஸ்டாட்—இல்லையா ?

லிண்டே—நில்ஸ், நிஜமாகவே நீ அப்படி நினைத்துவிட்டா யா ?

க்ராக்ஸ்டாட்—நீ சொல்வது உண்மையானால், நீ ஏன் எனக்கு அப்படிக் கடிதம் எழுதினாய் ?

லிண்டே—நான் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. நான் உன்னை விட்டுப் பிரிய நேர்ந்தபோது, நீ என்னைப் பற்றி எண்ணி யிருந்ததை யெல்லாம் மாற்ற முயலுவது என் கடமை யல்லவா ?

க்ராக்ஸ்டாட்—(கையைப் பிசைந்துகொண்டு) ஓ! அப்படி யா—இது எல்லாம்—பணத்துக்காகத் தானே !

லிண்டே—நாதியற்ற ஒரு தாயாரும், இரு சிறு சகோதரர் களும் எனக் கிருந்ததை நீ மறந்துவிடக் கூடாது. உனக் காக எங்களால் காத்திருக்க முடியவில்லை, நில்ஸ்; தவிர வும், நீ அப்போது சம்பாதிக்க ஆரம்பிக்கக்கூட இல்லை.

க்ராக்ஸ்டாட்—அதெல்லாம் இருக்கலாம் : ஆனால் வேறு ஒரு வனுக்காக என்னைத் துறக்க உனக்கு உரிமையில்லை.

லிண்டே—நிஜம் : எனக்கு அது தெரியவில்லை. நான் என் னையே பல தடவைகள் கேட்டுப் பார்த்துக்கொண் டிருக் கிறேன்—எனக்கு அந்த உரிமை உண்டா என்று.

க்ராக்ஸ்டாட்—(கொஞ்சம் மிருதுவாக) நான் உன்னை இழந்த தும், என் காலுக் கடியிலிருந்து பூமியே நழுவி விட் டது போலிருந்தது. இப்போ என்னைப் பார்—கப்பல் உடைந்து, கடலில் விழுந்து, ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு தத்தளிக்கும் மனிதனாக இருக்கிறேன் நான்.

லிண்டே—ஆனால் உதவி அருகிலே யிருக்கலாம்.

க்ராக்ஸ்டாட்—உதவி அருகில்தான் இருந்தது: ஆனால் நீ வந்து குறுக்கே நின்றாய்.

லிண்டே—எனக்குத் தெரியாது, நில்ஸ். இன்றுதான் நான் அறிந்தேன்—பாங்கில் உன்னுடைய இடத்தில்தான் வேலை செய்யப்போகிறேன் என்று.

க்ராக்ஸ்டாட்—நீ சொன்னால் அதை நிஜமென்றே நம்புகிறேன். ஆனால் இப்பொழுது அதைத் தெரிந்து கொண்டதும், எனக்காக நீ அந்த வேலையை விட்டுவிடப் போகிறாயா?

லிண்டே—இல்லை: அதனால் உனக்கு ஒரு லாபமும் வராது.

க்ராக்ஸ்டாட்—ஓ! லாபம், லாபம்—நானா யிருந்தால், லாபமோ இல்லையோ, வேலையை விட்டுவிடுவேன்.

லிண்டே—நான் கொஞ்சம் முன் யோசனையுடன் நடக்கக் கற்றுக்கொண் டிருக்கிறேன். வாழ்க்கையும், தரித்திரத்தால் உலகத்தில் அடிபட்ட அநுபவமும், எனக்கு அதைக் கற்றுக் கொடுத்திருக்கின்றன.

க்ராக்ஸ்டாட்—வாழ்க்கை, நான் அழகான வார்த்தைகளில் மயங்கக்கூடாது என்று கற்றுக் கொடுத்திருக்கிறது.

லிண்டே—அப்படியானால் வாழ்க்கை உனக்கு நல்ல பாடந் தான் சொல்லிக் கொடுத்திருக்கிறது. ஆனால் நீ செய்கைகளில் நம்பித்தானே ஆகவேண்டும்.

க்ராக்ஸ்டாட்—ஏன் அப்படிச் சொல்லுகிறாய் நீ?

லிண்டே—நடுக் கடலில் ஒரு கட்டையைப் பற்றிக்கொண்டு நிற்பதாகச் சற்று முன்......

க்ராக்ஸ்டாட்—நான் அப்படிச் சொல்லத் தக்க காரணம் இல்லையா?

லிண்டே—நானும் நடுக்கடலில் ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு மிதப்பவள்தானே—நான் யாருக்கும் அழ வேண்டியதில்லை, யாருக்காகவும் கவலைப்பட வேண்டிய தில்லை.

க்ராக்ஸ்டாட்—நீயாகத் தேடிக்கொண்டதுதானே அது?

லிண்டே—எனக்கு வேறு வழியில்லை—அப்போது.

க்ராக்ஸ்டாட்—சரி: இப்பொழுது என்ன?

லிண்டே—நில்ஸ், நடுக் கடலில் திசை தெரியாது தவிக்கும் நாமிருவரும் சேர்ந்துகொண்டால் என்ன?

க்ராக்ஸ்டாட்—நீ என்ன சொல்லுகிறாய்?

லிண்டே—ஒரு கட்டையின் மேல் நிற்கும் இருவர் கரை சேருவது, இருவர் தனித் தனிக் கட்டையில் மிதந்து கரை சேருவதைவிட சுலபம் என்று உனக்குத் தோன்ற வில்லையா?

க்ராக்ஸ்டாட்—கிறிஸ்டின்!

லிண்டே—நான் எதற்காக இந்தப் பட்டணம் வந்தேன் என்று நினைக்கிறாய் நீ?

க்ராக்ஸ்டாட்—என்னைப் பற்றி நீ நினைத்துப் பார்த்ததாகச் சொல்லுகிறாயா நீ?

லிண்டே—வேலையின்றி உயிர்வாழ எனக்கு மனமில்லை. என் ஆயுள் முழுவதும், எனக்கு அறிவு தெளிந்த நாள் முதற்கொண்டு, நான் வேலை செய்தே வந்திருக்கிறேன்; அதுதான் என் பெரிய, ஒரே இன்பம். ஆனால் இப் போது நான் உலகில் தனிமையாக இருக்கிறேன்—என் வாழ்வு பயங்கரமான சூனியமாகிவிட்டது—நான் நாதி யற்றவ ளாகிவிட்டேன். நில்ஸ், நான் ஒருவருக்காக, ஒரு இலட்சியத்துடன் உழைக்க விரும்புகிறேன்.

க்ராக்ஸ்டாட்—நான் அதை நம்பவில்லை. இது ஒரு ஸ்திரீயின் அர்த்தமற்ற பெருந்தன்மையைத் தவிர வேறில்லை. இல்லாவிட்டால் நீ இப்படிப்பட்ட தியாகஞ் செய்யத் துணிய மாட்டாய்.

லிண்டே—என்னிடம் பெருந்தன்மை யென்பதை நீ இதற்கு முன் கண்டதுண்டா?

க்ராக்ஸ்டாட்—நிஜமாகவே உன்னால் அப்படிச் செய்ய முடியுமா? சொல்லு—என்னுடைய வாழ்வின் முழு விவரங்களும் உனக்குத் தெரியுமா?

லிண்டே—தெரியும்.

க்ராக்ஸ்டாட்—என்னைப் பற்றி இங்கு என்ன நினைக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?

லிண்டே—நான் உன்னை அங்கீகரித்திருந்தால், நீ வேறு மனிதனாக இருந்திருப்பாய் என்று நீ சொல்லுவதாக நான் எண்ணுகிறேன்.

க்ராக்ஸ்டாட்—நான் வேறு மனிதனாக இருந்திருப்பேன் என்பதில் சந்தேக முண்டோ?

லிண்டே—இப்போ அதைத் திருத்தி யமைக்க முடியாதா?

க்ராக்ஸ்டாட்—கிறிஸ்டின், நீ தீர யோசித்துத்தான் இப்படிச் சொல்லுகிறாயா? ஆம், அப்படித்தான் என்று எனக்குத் தோன்றுகிறது. உன் முகத்தில் தெரிகிறதே. அப்படியானால், உண்மையிலேயே உனக்குத் தைரிய மிருக்கிறதா?......

லிண்டே—நான் யாருக்காவது தாயாராகக் காலந்தள்ள வேணும்; உன் குழந்தைகளுக்கு ஒரு தாய் அவசியம், நாமும் ஒருவரை யொருவர் விரும்புகிறோம். நில்ஸ், எனக்கு உன் உண்மைக் குணத்தில் நம்பிக்கை யிருக்கிறது—உன்னுடன் கூட நான் எதற்கும் துணிவேன்.

க்ராக்ஸ்டாட்—(அவள் கையைப் பிடித்துக்கொண்டு)வந்தனம், கிறிஸ்டின்: உலகின் கண்களில் நான் மறுபடியும் பரிசுத்தமாக வழி தேடுவேன். ஹா, ஆனால் நான் மறந்தே போய்விட்டேனே—

லிண்டே—(உற்றுக் கேட்டுக்கொண்டு)ஷ்...டாரெண்டெல்லா நாட்டியம், போ நீ! போ!

க்ராக்ஸ்டாட்—என்ன? ஏன்? என்ன அது?

லிண்டே—மேலே, அந்தப் பாட்டு காதில் விழுகிறதா? அது முடிந்தவுடன் அவர்கள் திரும்பிவிடுவார்கள்.

க்ராக்ஸ்டாட்—ஆம், ஆம்—நான் போகிறேன். ஆனால் அதெல்லாம் பிரயோசனமில்லை. இந்த ஹெல்மரைப் பற்றி நான் என்ன செய்திருக்கிறேன் என்று தெரியுமோ உனக்கு?

லிண்டே—ஆம், எனக்கு அதெல்லாம் தெரியும்.

க்ராக்ஸ்டாட்—அதையும் மீறி என்னை அங்கீகரிக்க உனக்குத் தைரியம்...

லிண்டே—கரையேற வழியற்ற மனிதன் எவ்வளவு மோசமாக நடந்துகொள்ளுவான் என்று எனக்குத் தெரிகிறது.

க்ராக்ஸ்டாட்—நான் செய்ததை மீட்க முடியுமானால்......

லிண்டே—மீட்க முடியாது. உன் கடிதம் அதோ கடிதப் பெட்டியில் கிடக்கிறது.

க்ராக்ஸ்டாட்—நிஜந்தானா?

லிண்டே—நிஜந்தான், ஆனால்—

க்ராக்ஸ்டாட்—(அவளை உன்னிப்பாகக் கூர்ந்து பார்த்துக்கொண்டு) இதற்கெல்லாம் அர்த்தம் இவ்வளவுதானா? உன் சிநேகிதியை எப்படியாவது காப்பாற்றிவிட

வேணுமென்று இந்தப் பாடு! உண்மையைச் சொல்லு. இவ்வளவுதானு?

லிண்டே—நில்ஸ், ஒரு தரம் பிறருக்காகத் தன்னையே விற்றுக்கொண்ட ஸ்திரீ மறுபடியும் தன்னை விற்றுக்கொள்ளத் துணிந்து முன்வர மாட்டாள்.

க்ராக்ஸ்டாட்—என் கடிதத்தைத் திருப்பித் தரச்சொல்லிக் கேட்கிறேன்.

லிண்டே—வேண்டாம், வேண்டாம்.

க்ராக்ஸ்டாட்—ஆம். நான் நிச்சயம் என் கடிதத்தைத் திருப்பித் தரச்சொல்லிக் கேட்கிறேன்; நான் இங்கேயே ஹெல்மர் வரும் வரையில் காத்திருக்கிறேன்; 'என் கடிதத்தைத் திருப்பிக் கொடு—அதை வாசித்துப் பார்க்கக் கூடாது—அது என் உத்யோகத்தைப் பற்றி'—என்று...

லிண்டே—வேண்டாம், நில்ஸ். நீ உன் கடிதத்தைத் திருப்பிக் கேட்காதே.

க்ராக்ஸ்டாட்—ஆனல், சொல்லு, நீ அதற்காகத்தானே இன்று நான் உன்னை இங்கு சந்திக்கும்படி ஏற்பாடு செய்தாய்?

லிண்டே—ஆம், என்னுடைய பயத்தில் முதலில் அப்படித்தான் உத்தேசித்தேன். அதற் கப்புறம் இருபத்திநாலு மணி நேரம் ஆகிவிட்டது; இவ் வீட்டில் பல கொடூரமான நடவடிக்கைகளைக் கண்டேன் நான். ஹெல்மருக்கு எல்லாம் தெரியத்தான் வேணும். இந்த இன்பக் கலப்பற்ற ரகசியம் வெளி வரட்டும்; இவ்வளவு ஒளி மறைவுக்கும், ரகசியத்துக்கும் நடுவில் இருவரும் அந்யோந்யமாக இருக்க முடியாது.

க்ராக்ஸ்டாட்—ரொம்ப சரி, ஆனால் பொறுப்பெல்லாம் உன்னுடையது. எப்படியும் நான் செய்யக்கூடியது ஒன்று தான்: அதை நான் உடனே செய்கிறேன்.

லிண்டே—(வெளியே எதையோ கவனித்துக்கொண்டு) ஜல்தி போ! நாட்டியக் கச்சேரி முடிந்துவிட்டது; இனி ஒரு நிமிஷங்கூட நாமிருவரும் சேர்ந்தாற்போல் இங்கு தங்குவது பிசகு.

க்ராக்ஸ்டாட்—நான் கீழே உனக்காகக் காத்துக்கொண்டிருப்பேன்.

லிண்டே— ம்... இரு. என் வீட்டு வரையில் வந்துவிட்டுப் போகலாம்.

க்ராக்ஸ்டாட்—என் வாழ்க்கையில் இதற்குமுன் ஒன்றும் நான் இவ்வளவு அதிர்ஷ்டம் படைத்ததில்லை; (வெளிக் கதவு வழியாக வெளியேறுகிறான். அறைக்கும் கூடத்துக்கும் இடையே உள்ள கதவு திறந்தே இருக்கிறது.)

லிண்டே—(அறையை ஒழுங்குபடுத்தி வைக்கிறாள். தன் போர்வையையும் தொப்பியையுந் தயாராக வைக்கிறாள்.) அடேயப்பா, என்ன வித்தியாசம்! என்ன வித்தியாசம்! ஒருவருக்காக உழைத்து அவருக்காக உயிர் வாழ்வது—இன்பமூட்டுவதற்கு ஒரு குடும்பம்! உண்மையில், நான் செய்வேன். அவர்கள் சீக்கிரம் வரக்கூடாதோ! (கவனிக்கிறாள்.) ஹா! அதோ வந்துவிட்டார்கள். நான் தயாராக இருக்கிறேன்.

[தன் தொப்பியையும் போர்வையையும் கையில் எடுத்துக்கொள்ளுகிறாள்; ஹெல்மர், நோரா இருவருடைய குரலும் வெளியே கேட்கிறது; ஒரு சாவி திருப்பும் சத்தம்: ஹெல்மர் நோராவை உள்ளே தள்ளிக்கொண்டு வருகிறான். அவள் ஒரு இதாலிய ஆடை அணிந்திருக்கிறாள்: ஒரு பெரிய

கறுப்பு ஷால் போர்த்தி யிருக்கிறாள்: அவன் மாலை ஆடை அணிந்திருக்கிறான்: அவனுடைய கறுப்பு அங்கி திறந்து பறந்துகொண் டிருக்கிறது.]

நோரா—(கதவுப் படியில் பின்னுக் கிழுத்தபடி, அவனுடன் சண்டை யிடுகிறாள்) வேண்டாம், வேண்டாம், வேண்டாம்! என்னை உள்ளே அழைத்துப் போகாதே! நான் மறுபடியும் மாடிக்குப் போக விரும்புகிறேன்; இவ்வளவு சீக்கிரம் திரும்ப எனக் கிஷ்டமில்லை.

ஹெல்மர்—என் ஆருயிர் நோரா—

நோரா—தயவு செய்து, தார்வால்ட். தயவுசெய்து, தயவு செய்து—இன்னம் ஒரே ஒரு மணி நேரம்.

ஹெல்மர்—இன்னம் ஒரு நிமிஷங்கூட வேண்டாம், இனிய நோரா. நாம் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டபடிதான் செய்தாய்விட்டதே. அறைக்குள் வா; இங்கு வெளியே நின்றுகொண் டிருந்தால் ஜலதோஷம் வந்துவிடும். (அவள் எவ்வளவு தடுத்தும் லட்சியம் பண்ணாமல், ஆனால் மிருதுவாக, அவளை உள்ளே அழைத்து வருகிறான்.)

லிண்டே—குட் ஈவனிங்......

நோரா—கிறிஸ்டின்!

ஹெல்மர்—இவ்வளவு நாழிகை கழித்து, என்ன விசேஷம், மிஸிஸ் லிண்டே?

லிண்டே—ஆம், என்னை மன்னிக்கவும்: நோராவை அவளுடைய ஆடையில் பார்க்கவேணுமென்று நான் ரொம்ப ஆவலாக இருந்தேன்.

நோரா—எனக்காக இங்கே உட்கார்ந்து காத்துக்கொண் டிருந்தாயா?

லிண்டே—ஆம்: துரதிருஷ்ட வசமாக, நான் வரும்போது ரொம்ப நேரமாகிவிட்டது. நீ முன்னாடியே மாடிக்குப் போய் விட்டாய். உன்னைப் பார்க்காமல் போகக் கூடாது என்று நினைத்தேன்.

ஹெல்மர்—(நோராவின் போர்வையை எடுத்துவிட்டு) ஆம், அவளை நன்றாகப் பாருங்கள். அவள் பார்க்கத் தகுந்தவளாகத்தான் இருக்கிறாள்: அவள் அழகாயில்லையா, மிஸிஸ் லிண்டே?

லிண்டே—ஆம், நிஜமாகவே அழகாகத்தான் இருக்கிறாள்.

ஹெல்மர்—அவள் ரொம்ப ரொம்ப அழகா யில்லையா? கச்சேரியில் எல்லோரும் அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் என்ன பிடிவாதம்! என்ன பிடிவாதம், இந்த இனிய குஞ்சுக்கு! அவளை நாம் என்ன செய்வது? நான் அவளை மல்லுக் கட்டாயப்படுத்தி அழைத்து வர வேண்டி யிருந்தது என்று சொன்னால் உங்களால் நம்பக் கூட முடியாது.

நோரா—தார்வால்ட், பின்னர் நீ வருந்துவாய், ஒரு அரை மணி நேரமாவது அங்கு தங்க விடவில்லையே யென்று!

ஹெல்மர்—அவள் சொல்லுவதைக் கேளுங்களேன், மிஸிஸ் லிண்டே. அவள் தன் டாரெண்டெல்லா நாட்டியத்தை ஆடிவிட்டாள்—அதற்குத் தக்க மதிப்புடன் — ஆனால் அது கலைகளின் எல்லையை மீறி அதிக விறு விறுப்பாகப் போய்விட்டது என்று நினைக்கிறேன் நான். ஆனால் எல்லோரும் நன்றாயிருக்கிறது, நன்றாயிருக்கிறது என்று தான் சொனனார்கள். அவள் ஜயத்துக்கு அப்புறம், அதைக் கெடுத்துக்கொண்டு, அவள் அங்கிருப்பதற்கு நான் சம்மதிப்பேனா? என்னுடைய அழகிய காப்ரிச் சிறுமியை—இல்லை—என்னுடைய பிடிவாதக் காப்ரிக்

குட்டியை அழைத்துக்கொண்டு, அறையை ஒரு தரம் சுற்றி வந்து, இந்தப் பக்கம், அந்தப் பக்கம் பார்த்து வணங்கிவிட்டு, ஒரு நிமிஷத்தில் வெளியேறி விட்டேன்—அழகி மறைந்து விட்டாள். வெளியேறுவதும் அழகாக இருக்க வேண்டாமா? மிஸிஸ் லிண்டே—அது தான் என்னால் நோராவுக்கு விளங்கச் செய்ய முடியவில்லை. பூ! இந்த அறை எவ்வளவு உஷ்ணமாக இருக்கிறது! (அங்கியை நாற்காலி மேல் போட்டுவிட்டுத் தன் அறையின் கதவைத் திறக்கிறான்.) ஹலோ? இங்கே ஒரே இருட்டாக இருக்கிறதே! ஓ! ஆமாம்: என்னை மன்னிக்கவும். (உள்ளே போய், சில மெழுகு வத்திகளைக் கொளுத்துகிறான்.)

நோரா—(அவசரமாக, மூச்சுத் திணற, ரகசியமாய்) என்ன?

லிண்டே—(தணிந்த குரலில்) நான் அவருடன் பேசினேன்.

நோரா—ம்...ம்...

லிண்டே—நோரா, அதைப் பற்றி எல்லாவற்றையும் நீ உன் கணவனுக்குத் தெரிவித்துவிட வேணும்.

நோரா—(பாவமில்லாத குரலில்) எனக்குத் தெரியும்.

லிண்டே—க்ராக்ஸ்டாடைப் பற்றிய வரையில் நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை; ஆனால் நீ அவருக்குச் சொல்லத்தான் வேணும்.

நோரா—நான் சொல்ல மாட்டேன்.

லிண்டே—அப்படியானால் அந்தக் கடிதம் சொல்லிவிடும்.

நோரா—வந்தனம், கிறிஸ்டின். இப்பொழுது நான் என்ன செய்யவேணு மென்று எனக்குத் தெரியும். உஷ்...!

ஹெல்மர்—(மறுபடியும் உள்ளே வந்து) என்ன! மிஸிஸ் லிண்டே, அவளைப் பார்த்தாய்விட்டதா?

லிண்டே—ஆம், இப்போ நான் போய் வரட்டுமா?

ஹெல்மர்—என்ன, அதுக்குள்ளேயா? இந்தப் பின்னல் உங்களுடையதா?

லிண்டே—(அதை வாங்கிக்கொண்டு) ஆம், வந்தனம், நான் அதை மறந்தே போய்விட்டேன்.

ஹெல்மர்—ஓ! நீங்கள் பின்னல் செய்கிறேளா?

லிண்டே—ஆம்.

ஹெல்மர்—தெரியுமா? உங்களுக்குப் பூ வேலை செய்யத் தெரிய வேண்டும்.

லிண்டே—நிஜமாகவா? ஏன்?

ஹெல்மர்—அதுதான் உங்களுக்குத் தகுந்தது. நான் காட்டுகிறேன், பாருங்கள். பூப் போட வேண்டியதை இப்படி இடது கையில் வைத்துக் கொள்ளவேணும், ஊசியை —இப்படி—வலது கையில்—பார்க்க எவ்வளவு அழகாக இருக்குந் தெரியுமோ?

லிண்டே—ம்...தெரிகிறது.

ஹெல்மர்—ஆனால் பின்னலில் ஒன்றும் அழகே யில்லை; பாருங்களேன்--கைகள் இரண்டையும் நெருக்கிக் கோணல் கோணலாக வைத்துக் கொள்ளவேணும்: ஊசிகள் மேலுங் கீழும் போய்க்கொண்டிருக்கும்—சீனு தேசத்துப் பொம்மைகள் மாதிரி...எங்களுக்குக் கொடுத்த ஷாம்பேன் மிகவும் நன்றா யிருந்தது.

லிண்டே—சரி—குட் நைட், நோரா. வரட்டுமா நான்! இனிமேல் பிடிவாதம் பிடிக்காதே.

ஹெல்மர்—அதுதான் சரி, மிஸிஸ் லிண்டே.

லிண்டே—குட் நைட், மிஸ்டர் ஹெல்மர்.

ஹெல்மர்—(அவளுடன் கதவு வரையில் போய்க்கொண்டே) குட் நைட், குட் நைட். ஜாக்கிரதையாக வீடு போய்ச் சேருவீர்கள் என்று நம்புகிறேன். நான் கூட வரு வேன்—ஆனால் உங்களுக்குப் போக ரொம்பத் தூரம் இல்லையே. குட் நைட், குட் நைட். (அவள் வெளியே போகிறாள்; கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே வரு கிறான்.) ஹா—கடைசியில் கிளம்பினாள். என்ன தொந் தரவுக்காரி தெரியுமோ, அந்த ஸ்திரீ!

நோரா—உனக்கு ரொம்பக் களைப்பாக இல்லையா, தார்வால்ட்?

ஹெல்மர்—இல்லை, கொஞ்சங்கூட இல்லை.

நோரா—தூக்கமும் வரவில்லையா?

ஹெல்மர்—இல்லை: அதற்கு நேர்மாறாக நான் ரொம்ப உற் சாகமாக இருக்கிறேன். நீ? உன்னைப் பார்த்தால் களைத் துத் தூங்கி வழிவது போலிருக்கிறது.

நோரா—ஆம், எனக்கு ரொம்பக் களைப்பாகத்தா னிருக்கிறது. இப்பவே தூங்கிப்போக விரும்புகிறேன் நான்.

ஹெல்மர்—பார்த்தாயா, அங்கே இன்னம் அதிக நாழிகை தங்கக் கூடாது என்று நான் சொன்னது சரிதானே?

நோரா—நீ செய்வது எல்லாம் சரிதான், தார்வால்ட்.

ஹெல்மர்—(அவள் நெற்றியில் முத்தமிட்டு) இப்போதான், என் சின்னக் குயில் நியாயமாகப் பேசுகிறது. டாக்டர் ராங்க் இன்று எவ்வளவு குஷியாக இருந்தார் என்று கவனித்தாயோ நீ?

நோரா—நிஜமா? இருந்தாரா? நான் அவருடன் பேசவே யில்லை.

ஹெல்மர்—நானும் ரொம்பக் கொஞ்சந்தான் பேசினேன்; ஆனால் இவ்வளவு குஷாலாக அவரை நான் கண்டு பல

நாள் ஆகிவிட்டது. (கொஞ்ச நேரம் அவளை உற்றுப் பார்க்கிறான்: அப்புறம் அவளை அணுகுகிறான்.) நாம் மட்டும் தனியாக நம் வீட்டில் இருப்பது ஆனந்தமாக இருக்கிறது. உன்னுடன் தனியாக—வசீகரமான அழகியாகிய உன்னுடன்—

நோரா—என்னை அது மாதிரிப் பார்க்காதே, தார்வால்ட்.

ஹெல்மர்—என்னுடைய அருமையான பொக்கிஷத்தை நான் ஏன் பார்க்கக் கூடாது—என்னுடைய, எனக்கே சொந்தமான அழகை, நான் ஏன் பார்க்கக் கூடாது?

நோரா—(மேஜையின் எதிர்ப்பக்கம் போய் நின்றுகொண்டு) இன்றிரவு இந்த மாதிரி சமாசாரங்களை நீ என்னிடம் சொல்லக் கூடாது.

ஹெல்மர்—(அவளைத் தொடர்ந்துகொண்டு) தெரிகிறதே, டாரெண்டெல்லா இன்னும் உன் ரத்தத்தை விட்டகலவில்லை. அது உன்னை என்றுமில்லாத வசீகரமுள்ளவளாகச் செய்கிறது. கவனி—இப்போ விருந்தாளிகள் எல்லாரும் போக ஆரம்பித்துவிட்டனர். (இன்னும் தணிந்த குரலில்) நோரா—இன்னும் சற்று நேரத்தில் வீடு சந்தடி யின்றி அமைதியாக இருக்கும்.

நோரா—ஆம், நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

ஹெல்மர்—ஆம், என்னுடைய அருமை நோரா. உனக்குத் தெரியுமா? நான் இது மாதிரி உன்னுடன் ஒரு கச்சேரிக்கு வந்திருக்கும் போது 'நான் ஏன் உன்னுடன் ஜாஸ்தி பேசுவதில்லை? அதிகம் உன்னுடன் ஏன் கலப்பதில்லை? மறைவாக யாரும் கவனியாமலிருக்கும்போது மட்டும் ஒன்றிரண்டு தரம் திரும்பிப் பார்ப்பது ஏன்? தெரியுமா? ஏனென்றால், நான் என்னையே ஏமாற்றிக் கொள்ளப் பார்க்கிறேன்: எனக்குள்ளே கற்பனை

செய்து பார்க்கிறேன்—நாம் யாரும் அறியாமல் ரகசியக் காதலர்கள் என்றும், நீ ரகசியத்தில்தான் என் மனைவி யென்றும், நமக்குள் இருக்கும் தொடர்பை யாரும் அறிய மாட்டார்கள் என்றும் கற்பனையில் நான் தீர்மானித்துக் கொள்ளுகிறேன்.

நோரா—ஆம், ஆம்—நீ எப்பவுமே என்னைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண் டிருக்கிருய் என்று எனக்குத் தெரியும்.

ஹெல்மர்—நாம் கிளம்பும்போது, உன் அழகிய தோள்களை நான் போர்வையைப் போட்டு மூடும்போது, உன் அழகிய கழுத்தை மறைக்கும்போது—அப்போது, நான், நீ என்னுடைய புது மனைவி யென்றும், கலியாணமாகி அப்போதுதான் வந்திருக்கிறோம் என்றும், நம்முடைய வீட்டிற்குள் உன்னை அப்போதுதான் முதல் தடவை அழைத்து வருகிறேன் என்றும், உன்னுடன் முதன் முதலாகத் தனியாக இருக்கப் போகிறேன் என்றும், கற்பனை செய்துகொள்ளுகிறேன். இன்று மாலை முழுவதும் உன்னைத் தவிர எனக்கு வேறு ஆசையே யில்லை. டாரெண்டெல்லா நாட்டியத்தின் வசீகரமான பாவங்களைக் கவனிக்கையில், என் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது; என்னுல் அதைச் சகிக்க முடியவில்லை; அதனுல்தான் உன்னை அதி சீக்கிரமே இங்கு அழைத்து வந்துவிட்டேன்......

நோரா—போ, தார்வால்ட்! என்னை விட்டுவிடு. நான் மாட்டேன்.......

ஹெல்மர்—என்ன அது? விளையாடுகிருயா, என் சின்ன நோரா? மாட்டாயா? நீ மாட்டாயா? நான் உன் கணவனில்லையா?....(வெளிக் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்கிறது.)

நோரா—(திடுக்கிட்டு) காதில் விழுந்ததோ?

ஹெல்மர்—(வெளிக் கூடத்துக்குள் போய்) யாரது?

டாக்டர்—(வெளியே யிருந்து) நான்தான். நான் ஒரு விநாடி உள்ளே வரலாமோ?

ஹெல்மர்—(கோபமாக — ஆனால் மெல்ல) ஓ! என்ன வேணும், இவனுக்கு இப்போ? (உரக்க) ஒரு நிமிஷம், வந்துவிட்டேன்! (கதவைத் திறக்கிறான்.) வா, நீ எங்கள் அறையைப் பாராமலே போகாமல் வந்ததுபற்றிச் சந்தோஷம்.

டாக்டர்—உன் குரல் கேட்டாப் போல் இருந்தது; பார்த்து விட்டுத்தான் போகலாமே என்று தோன்றிற்று. (சுற்று முற்றும் விரைவாக ஒரு தரம் பார்த்துவிட்டு) ஹா! இந்தப் பழக்கமான அறைகள்! இங்கே நீங்கள் இருவரும் சந்தோஷமாகவும், சௌக்கியமாகவும் இருக்கிறீர்கள்.

ஹெல்மர்—உன்னைப் பற்றிய வரையில் மாடியில் ரொம்ப நன்றாக......

டாக்டர்—ஆம், நன்றாகக் கவனித்துக் கொண்டேன். ஏன் செய்யக்கூடாது? இந்த உலகில் அநுபவிக்க வேண்டிய இன்பத்தை யெல்லாம் நுகரவேண்டியதுதானே! எவ்வளவு நம்மால் முடியுமோ—எவ்வளவு நாள் முடியுமோ ...மது நன்றாக இருந்தது—

ஹெல்மர்—அதுவும் ஷாம்பேன்—

டாக்டர்—அதை நீயுங் கவனித்தாயா? நான் எவ்வளவு ஷாம்பேன் சாப்பிட்டேன் தெரியுமோ? என்னாலேயே நம்ப முடியவில்லை!

நோரா—தார்வால்டும் இன்றிரவு ஏகப்பட்ட ஷாம்பேன் சாப்பிட்டார்.

டாக்டர்—ஓ! அவனுமா?

நோரா—ஆம், அதற்கப்புறம் அவருக்குக் குஷி பிறந்துவிடும்.

டாக்டர்—ஆ! நல்ல வேலை செய்து முடித்த நாளில் இரவை நன்றாகக் கழிப்பதற்குத் தடை யேது?

ஹெல்மர்—நல்ல வேலையா? என்னைப் பற்றிய வரையில் இன்றைப் பொழுதைப் பற்றி அப்படிச் சொல்ல முடியாது.

டாக்டர்—(அவன் முதுகில் ஒரு தட்டுக் கொடுத்துவிட்டு) உனக்குத் தெரியுமா, நான் இன்று நல்ல வேலை செய்து முடித்தேன்.

நோரா—டாக்டர் ராங்க், இன்று என்ன நீங்கள் ஏதாவது விஞ்ஞான ஆராய்ச்சியில் ஆழ்ந்திருந்தேளோ?

டாக்டர்—ஹா! ஆம்.

ஹெல்மர்—இதைக் கேளேன், நோரா என்னவோ விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றிப் பேசுகிறாளே!

நோரா—கண்டுபிடித்தது என்ன என்று கேட்கலாமோ?

டாக்டர்—கேட்கலாம்.

நோரா—முடிவு என்ன?

டாக்டர்—நல்ல முடிவு—டாக்டருக்கும் நோயாளிக்கும் சரியான முடிவு—தீர்மானமான முடிவு—

நோரா—(அவசரமாக, உன்னிப்பாய்) தீர்மானமாகவா?

டாக்டர்—சந்தேகப்பட முடியாத முடிவு. அதனால் அதற்கப்புறம் நான் இன்று மாலை இன்பத்தை இழந்திருக்க முடியுமா?

நோரா—ஆம், இந்த இன்பம உங்களுக்கு உரியதுதான், டாக்டர் ராங்க்.

ஹெல்மர்—நானும் அப்படித்தான் நினைக்கிறேன்—அதாவது காலையில் அதற்குப் பலனில்லாம லிருக்கும் பட்சத்தில்...

டாக்டர்—ஓ, ஆனால் வாழ்வில் யாருக்கும் ஒன்றுங் கொடுக்காமல் ஒன்றுங் கிட்டாது : எதற்கும் பலனுண்டு.

நோரா—டாக்டர் ராங்க்—உங்களுக்கு விநோத ஆடை நாட்டியக் கச்சேரிகள் பிடிக்குமா?

டாக்டர்—பிடிக்கும், அங்கு நிறைய அழகிகள் இருந்தால்.

நோரா—எனக்குச் சொல்லுங்கள், நாமிருவரும் அடுத்த நாட்டியக் கச்சேரிக்கு என்ன உடுத்திக்கொண்டு போவோம்?

ஹெல்மர்—அட, சபல புத்தி யுள்ளவளே!—அதற்குள் அடுத்த நாட்டியத்தைப் பற்றி யோசனை ஆரம்பமாகி விட்டதா?

டாக்டர்—நாமிருவருமா? ஆம், என்னால் சொல்ல முடியுமே—நீ ஒரு நல்ல தேவதையாகப் போவாய்—

ஹெல்மர்—ஆம், சரி: ஆனால் அதற்குத் தகுந்த ஆடையாக எதை அணிந்து போவது என்று சொல்ல முடியுமா?

டாக்டர்—உன் மனைவி தினசரி இருக்கிறபடியே போனால் போதுமே.

ஹெல்மர்—அட, எவ்வளவு அழகாகச் சொல்லிவிட்டாய் அதை! ஆனால் நீ யெப்படி இருப்பாய் என்று உன்னால் சொல்ல முடியாதா?

டாக்டர்—முடியும், என் ஆருயிர் நண்பா! நான் அதைப் பற்றியும் தீர்மானித்து விட்டேன்.

ஹெல்மர்—என்ன?

டாக்டர்—அடுத்த கச்சேரியில் நான் யார் கண்ணிலும் பட மாட்டேன்.

ஹெல்மர்—நல்ல வேடிக்கைதான் அது!

டாக்டர்—ஒரு பெரிய கறுப்புத் தொப்பி—உன்னை யார் கண்ணிலும் படாமல் மாயமாக மறைத்துவிடும் தொப்பிகளைப் பற்றி நீ கேள்விப்பட்ட தில்லையா? அவற்றில் ஒன்றை அணிந்துகொண்டு விட்டால், உன்னை யாரும் பார்க்கவே முடியாது.

ஹெல்மர்—(சிரிப்பை யடக்கிக் கொண்டு) ஆம், நீ சொல்லுவதும் சரிதான்.

டாக்டர்—அடேடே! நான் வந்த காரியத்தை மறந்தே போய் விட்டேனே! ஹெல்மர், ஒரு சுருட்டுக் கொடு—நல்ல கறுப்பு ஹவாணு சுருட்டு ஒன்று கொடு.

ஹெல்மர்—இந்தா. (தன் சுருட்டுப் பெட்டியைக் கொடுக்கிறுன்.)

டாக்டர்—(ஒரு சுருட்டை எடுத்து இரண்டு நுனிகளையும் வெட்டுகிறுர்.) வந்தனம்.

நோரா—(நெருப்புக் குச்சியைக் கொளுத்திக்கொண்டு) நான் நெருப்புத் தருகிறேன்.

டாக்டர்—வந்தனம். (அவள் சுருட்டைப் பற்ற வைக்க நெருப்புக் குச்சியைத் தூக்கிப் பிடிக்கிறுள்.) இப்போ நான் போய் வரட்டுமா, வந்தனம்!

ஹெல்மர்—வந்தனம், கிழட்டு நண்பா!

நோரா—நிம்மதியாகத் தூங்குங்கள், டாக்டர் ராங்க்.

டாக்டர்—உன் ஆசீர்வாதத்துக்கு வந்தனம்.

நோரா—எனக்கும் அப்படியே ஆசீர்வதிக்கக் கூடாதா?

டாக்டர்—உனக்குமா? சரி. நான் நன்ருகத் தூங்க வேணு மென்று விரும்பினுல்! வெளிச்சத்திற்கு ஒரு வந்தனம். (அவர்க ளிருவரையும் பார்த்துத் தலையை யாட்டி விட்டு வெளியேறுகிருர்.)

ஹெல்மர்—(அடங்கிய குரலில்) நிறையக் குடித்து விட்டான் போல் இருக்கிறது.

நோரா—(வேறெங்கேயோ கவனமாக) இருக்கலாம். (ஹெல் மர் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சாவிக் கொத்தை எடுத்துக்கொண்டு வெளிக் கூடத்திற்குள் போகிருன்.) தார்வால்ட்! அங்கே என்ன பண்ணப் போகிருய்?

ஹெல்மர்—கடிதப் பெட்டியைக் காலிபண்ண வேணும்: அது நிரம்பி இருக்கிறது: நாளைக்குக் காலை நியூஸ் பேப்ப ரைப் போட அதில் இடமில்லை.

நோரா—இன்றிரவு வேலை செய்யப் போகிருயா?

ஹெல்மர்—இல்லை: உனக்குத்தான் தெரியுமே! இதென்ன இது? யாரோ கடிதப் பெட்டிப் பூட்டை மறுசாவி போட்டுத் திறக்க முயன்றிருக்கிரு...

நோரா—மறு சாவியா?

ஹெல்மர்—ஆம், யாரோ தெரியவில்லை: இதற்கென்ன அர்த் தம்? நம்ப வேலைக்காரி இப்படி இருப்பாளென்று நான் எதிர்பார்க்க...இதோ ஒரு உடைந்த கொண்டை யூசி இருக்கிறது, பூட்டுக்குள்: நோரா, இது உன்னுடைய ஊசி.

நோரா—(அவசரமாக) அப்படியானுல் குழந்தைகள் ஏதாவது விஷமம் பண்ணி யிருக்கும்...

ஹெல்மர்—இப்படிப்பட்ட பழக்கங்கள் எல்லாம் குழந்தைக ளுக்குப் படியாமல் நீ பார்த்துக்கொள்ள வேண்டும்.

அப்பா, கடைசியில் — திறந்தாய்விட்டது. (கடிதப் பெட்டியி லிருப்பதை யெல்லாம் எடுத்துக்கொள்ளுகிறான். சமையலறைப் பக்கம் திரும்பி) ஹெலன்!— ஹெலன்! வாசற்படி விளக்கை அணைத்துவிடு. (அறைக்குள் திரும்பிச் செல்லுகிறான். கூடத்துக்குப் போகும் கதவைச் சாத்துகிறான். கை நிறையக் கடிதங்களுடன் கைகளைத் தூக்கிக் காட்டுகிறான்.) இதைப் பார்—இங்கே எத்தனை கடிதங்கள் இருக்கின்றன என்று. (அதைப் புரட்டிக்கொண்டு) இதென்னது இது?

நோரா—(ஜன்னலண்டை) அந்தக் கடிதம்—வேண்டாம், தார்வால்ட், வேண்டாம்.

ஹெல்மர்—இரண்டு கார்டுகள்—டாக்டர் ராங்கினுடையவை.

நோரா—டாக்டர் ராங்கினுடையவையா?

ஹெல்மர்—டாக்டர் ராங்க். பெட்டியில் மேலே யிருந்தன அவை. அவன் வெளியே போகும் போது வைத்து விட்டுப் போயிருக்க வேண்டும்.

நோரா—அதில் ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா?

ஹெல்மர்—பெயருக்கு மேல் ஒரு பெரிய கறுப்புச் சிலுவை போடப்பட்டுள்ளது—பாரேன்—எவ்வளவு குரூரமான யோசனை! அவன் தன்னுடைய சாவைத் தானே அறிவிப்பது போலிருக்கிறது.

நோரா—அவர் அப்படித்தான் செய்திருக்கிறார்.

ஹெல்மர்—என்ன? உனக்கு அதைப் பற்றி ஏதாவது தெரியுமா என்ன? உன்னிடம் ஏதாவது சொன்னானா?

நோரா—ஆம், இந்தக் கார்டுகள் வந்தால், அவர் நம்மிடம் விடைபெற்றுக்கொள்வதாக அர்த்தமென்று சொன்னார். தன் அறையில் கதவை உள்ளே தாளிட்டுக்கொண்டு, தனியாகச் சாவதாக அவர் உத்தேசம்.

ஹெல்மர்—பாவம்! எனது ஒரு நண்பன் அவன்! ரொம்ப நாள் அவன் நம்முடன் இருக்கமாட்டான் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம்! அவன் அடிபட்ட மிருகம் போல் போய் ஒளிந்துகொள்ளு கிறான்.

நோரா—சாவு வருவதாக இருந்தால், அது வரும்போது ஒரு வார்த்தை கூடப் பேசாதிருப்பதுதான் சரி யென்று தோன்றவில்லையா உனக்கு — என்ன, தார்வால்ட்?

ஹெல்மர்—(குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டு) அவன் நம் வாழ்க்கையுடன் சேர்ந்தவனாகவே பழகிவிட்டான். நம்மை விட்டு அவன் போவான் என்று என்னால் நம்ப முடியவில்லை. நம்முடைய ஒளி மிகுந்த ஆனந்தத்துக்கு அவனுடைய தனிமையும் துக்கங்களும் ஒரு இருண்ட பகைப்புலமாக இருந்தன. சரி, அதுதான் உத்தம மாக இருக்கலாம்—அவனைப் பற்றிய வரையில். (அசை யாது நின்றபடி) நமக்குங் கூடத்தான், நோரா. இனி மேல் நமக்கு வேறு யாரு மில்லை — நீயும் நானுந்தான். (அவளைக் கைகளால் சுற்றி அணைத்துக்கொள்ளுகி றான்.) என் அருமை நாயகி, உன்னை என்னால் என் மனம் வேண்டும் வரையில் இறுக்கிப் பிடித்துக் கொள்ள முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை, தெரியுமா, நோரா, உனக்கு? நான் அடிக்கடி எண்ணிப் பார்த்திருக்கிறேன்: உனக்கு மகத்தான ஆபத்து வந்து, நான் என் இரத்தத்தையும், எல்லாவற்றையும் தியாகம் செய்து, உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அடிக்கடி விரும்பியிருக்கிறேன்.

நோரா—(அவன் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, தீர்மானமாகவும் தீவிரமாகவும் சொல்லு

கிருள்.) இப்போ நீ உன் கடிதங்களைப் படிக்கவேணும், தார்வால்ட்.

ஹெல்மர்—வேண்டாம், வேண்டாம் : இன்றிரவு வேண்டாம். நான் உன்னுடன் இருக்க விரும்புகிறேன். என் ஆருயிர்க் காதலி.

நோரா—உனது நண்பனின் சாவைப் பற்றிய எண்ணத்துடன் —

ஹெல்மர்—நீ சொல்வது சரி; அது நம் இருவரையும் பிடித்துவிட்டது. நம் மிருவருக்கும் இடையே ஏதோ குரூபமான தொன்று வந்துவிட்டது — சாவின் பயங்கரத்தைப் பற்றிய நினைவு. நாம் அதை நம் மனத்தை விட்டு அகற்ற முயலவேணும். அது வரையில்—நாமிருவரும் தனித் தனி அறைகளிலேயே இருப்போம்.

நோரா—(அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு) குட்நைட், தார்வால்ட்—குட்நைட்!

ஹெல்மர்—(அவள் நெற்றியில் முத்தமிட்டு) குட்நைட், என் சின்னக் குயிலே, நன்ருகத் தூங்கு, நோரா. என் கடிதங்களை யெல்லாம் நான் முழுக்க வாசிக்கப் போகிறேன். (தன் கடிதங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு தன் அறைக்குள் போய், கதவைச் சாத்திக் கொள்ளுகிருன்.)

நோரா—(சஞ்சலத்துடன் கைகளை நீட்டிக்கொண்டு அங்குமிங்கும் அலைகிருள். ஹெல்மரின் அங்கியை எடுத்து மேலே போட்டுக்கொள்ளுகிருள். கம்மிய குரலில் வேகமாக, விக்கி விக்கிப் பேசுகிருள்.) மறுபடியும், இவனை என்றும் பார்ப்பதில்லை. என்று மில்லை! (தலைக்கு மேல் போர்வையை எடுத்துப் போட்டுக்கொள்ளுகிருள்.) என் குழந்தைகளையும் மறுபடி பார்க்காமல் —

என்றும் பார்க்காமல்! என்றுமில்லை! எப்போதுமில்லை! ஹா! குளிர்ந்த இருண்ட ஜலம்—அகாதமான ஆழம் — அது முடிந்துவிட்டால் நலம்! எப்போ முடியும்! அவன் கையில் இருக்கிறது அது! இப்போ அதை வாசித்துக்கொண் டிருக்கிறான். போய்வருகிறேன், தார்வால்ட், என் குழந்தைகளே! (கூடத்தின் வழியே வெளியே ஓடத் தயாராக இருக்கிறாள். ஹெல்மர் அவசரமாகத் தன் கதவைத் திறக்கிறான். கையில் ஒரு பிரித்த கடிதத்துடன் நிற்கிறான்.)

ஹெல்மர்—நோரா!

நோரா — ஹா!

ஹெல்மர்— என்ன இது? இந்தக் கடிதத்தில் இருப்பது என்னவென்று தெரியுமா உனக்கு?

நோரா—உம்...தெரியும். நான் போகிறேன்! நான் வெளியே போகிறேன்! ...

ஹெல்மர்— (அவளைத் தடுத்துக்கொண்டு) நீ எங்கே போகப் போகிறாய்?

நோரா—(தப்பிக்க முயன்றுகொண்டு) நீ என்னைக் காப்பாற்ற வேண்டாம், தார்வால்ட்!

ஹெல்மர்—(தள்ளாடிக்கொண்டு) நிஜமா? இதில் நான் படித்ததெல்லாம் நிஜமா? என்ன பயங்கரம்! இல்லை, இல்லை— இதெல்லாம் நிஜமாக இருப்பது சாத்தியமில்லை.

நோரா—நிஜந்தான். உலகில் வேறு எதையும் விட அதிகமாக நான் உன்னைக் காதலித்தேன்.

ஹெல்மர்—ஓ! இந்தக் குருட்டுச் சாக்கெல்லாம் யாருக்கு வேணும்?

நோரா—(அவனை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்து)—தார்வால்ட்!

ஹெல்மர்—இழிவடைந்தவளே! நீ என்ன காரியம் செய்து விட்டாய்?

நோரா—நான் போகிறேன், விடு. எனக்காக நீ கஷ்டப்பட வேண்டாம். என் குற்றத்தை நீ உன்மேல் சுமத்திக் கொள்ள வேண்டாம்.

ஹெல்மர்—தயவுசெய்து பயமுறுத்த இந்த மாதிரி நாடகம் ஆட வேண்டாம். (வெளிக் கதவைப் பூட்டுகிறான்.) நீ இங்கே யிருந்து இந்தக் காரியத்தை முழுவதும் விவரமாக விளக்கவேணும். நீ என்ன செய்துவிட்டாய் என்று தெரிகிறதா உனக்கு? எனக்குப் பதில் சொல். நீ என்ன செய்திருக்கிறாய் என்று தெரிகிறதா உனக்கு?

நோரா—(ஒரே நிலையாக அவனையே பார்க்கிறாள்; அவள் முகத்தில் வெறுப்பு பிறந்து வளர்கிறது) ஆம். இப்போதான் எனக்கு முழுவதும் தெரிய ஆரம்பிக்கிறது.

ஹெல்மர்—(அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டு) எவ்வளவு பயங்கரமாக ஞானம் உதயமாயிருக்கிறது! இந்த எட்டு வருஷங்களும் — என் பெருமைக்கும் சந்தோஷத்துக்கும் காரணமாக இருந்த இவள்— ஒரு கபடக்காரி, புளுகுண்ணி—அதையும் விட மோசமான— ஒரு குற்றவாளி. சொல்ல முடியாத குரூரம்! என்ன... வெட்கம்! வெட்கம்! (நோரா பேசவில்லை: அவனையே ஒரு நிலையாகப் பார்க்கிறாள். அவன் அவளுக்கு எதிரே நிற்கிறான்.) இந்த மாதிரி ஏதாவது நடக்குமென்று நான் எதிர்பார்த்திருக்க வேண்டியதுதான். நான் எதிர்பாராதது தப்புத்தான்! உங்கப்பனுடைய தீக்குண மெல்லாம்

—நேர்மை யின்மை யெல்லாம்—பேசாதே!—அதெல்லாம் உனக்கும் வந்துவிட்டது. பக்தியில்லை, ஒழுக்கமில்லை, கடமை யில்லை—அடாடா! அவர் செய்ததை யெல்லாம் வெளிப்படுத்தாமல் சரிப்படுத்தினேனே, அதற்கு, எனக்கு எப்படிப்பட்ட தண்டனை! உனக்காகச் செய்தேன் நான்; நீ எனக்குப் பிரதி இப்படிச் செய்து விட்டாய்.

நோரா—ஆம், இப்படித்தான்.

ஹெல்மர்—இப்போது நீ என் இன்பம், சுகம் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டாய். என் வாழ்வைக் குலைத்து விட்டாய். நினைக்கப் பயங்கரமாக இருக்கிறது. பழி பாவத்துக் கஞ்சாத ஒரு மனிதன் கையில் நான் மாட்டிக்கொண்டு விட்டேன்; அவன் தன்னிஷ்டம் போல் என்னை இனி ஆட்டி வைக்கலாம்: என்னை என்ன வேணுமானாலுஞ் செய்யச் சொல்லலாம்: எனக்கு என்ன உத்தரவு வேண்டுமானாலும் இடலாம்—நான் மாட்டேன் என்று சொல்ல முடியாது. நான் இப்படிப் படுகுழியில் விழவேணும்— ஒரு புத்தியில்லாத ஸ்திரீயினால்!

நோரா—நான் போய்விட்டால், நீ, சுயேச்சையாக இருக்கலாம்.

ஹெல்மர்—அழகாகப் பேசி மடக்கவேண்டாம், தயவுசெய்து. உங்கப்பா கூடத்தான் எப்பவும் இப்படி வார்த்தைகள் தயாராக வைத்திருப்பார். நீ சொல்லுவது போல் நீ போய்விட்டால், அதனால் எனக்கு நன்மை யாகிவிடுமா, சொல்லேன்? கொஞ்சங்கூட லாபமில்லை. அவன் இந்த விஷயத்தைக் கண்டவிடத்தி லெல்லாம் வெளியிடலாம்: அவன் அப்படி வெளியிட்டால், உன்னுடைய குற்றத்துக்கு நானும் உடந்தையாக இருந்ததாக ஜனங்

கள் தப்பாகச் சந்தேகிப்பார்கள். அநேகமாக எல்லோரும் நான்தான் உன்னை இந்தக் காரியம் செய்யத் தூண்டியது என்று நினைப்பார்கள். இதற்கெல்லாம் காரணம் யார்? நீதான்—நான் போற்றி வளர்த்து இவ்வளவு நாளாகப் பாராட்டினேனே, அவளேதான். இப்போ தெரிகிறதா எனக்கு நீ எவ்வளவு உபகாரம் செய்திருக்கிறாய் என்று?

நோரா—(வெறுப்புடன் அமைதியாக) தெரிகிறது.

ஹெல்மர்—இதெல்லாம் உண்மை யென்று நம்பும்படியாக இல்லை. நாம் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேணும். அந்தப் போர்வையை எடுத்துவிடு. அதை எடுத்துவிடு: சொல்லுகிறேன் நான். நான் எப்படியாவது அவனைச் சாந்தப்படுத்தி யாகவேணும். எதைக் கொடுத்தாலும் விஷயம் வெளி வராமல் தடுக்கவேணும். உன்னையும் என்னையும் பற்றிய வரையில் ஒன்றும் நம்மிடையே வராதது போல், நாம் முன்னிருந்தது போலவே—உலகத்தோர் கண்ணில்—காணப்பட வேணும். நீ என் வீட்டிலேதான் தங்க வேண்டும், வேறு வழியில்லை: ஆனால் நீ நம் குழந்தைகள் பக்கம் போகக் கூடாது: அவர்களை உன்னிடம் ஒப்புவிக்க எனக்குத் தைரியமில்லை. நான் காதலித்த ஒருத்தியிடம் இதுமாதிரி நான் பேசவேண்டியிருக்கும் என்று நான் நினைக்கவே யில்லை... இப்பவும் எனக்கு... இல்லை: அதெல்லாம் முடிந்துவிட்டது. இந்த நிமிஷம் முதல் இன்பம் என்பதில்லை. அதைப்பற்றி நாம் கவலைப்படக் கூடாது; மிஞ்சிக் கிடப்பதை, உடைந்து சிதறிய தூள்களைப் பத்திரப்படுத்திப் போற்றுவதே—வெளிப் பார்வைக்கு மெட்டுவிடாம லிருப்பதே...... நம் கவலை.

(வெளிக் கதவு மணி யடிக்கிறது காதில் விழுகிறது.)

ஹெல்மர்—(திடுக்கிட்டு) அதென்ன? இவ்வளவு நாழிகை கழித்து! இன்னும் என்ன கஷ்டம்? அவன் வர—? நோரா, நீ மறைந்துகொள். உனக்கு உடம்பு சரியாக இல்லை என்று சொல்.

(நோரா அசையாமல் நிற்கிறாள். ஹெல்மர் போய் வெளிக் கதவைத் திறக்கிறான்.)

வேலைக்காரி—(தூங்கி விழித்த முகத்தினளாய், கதவண்டை வருகிறாள்) அம்மாவுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

ஹெல்மர்—அதை என்னிடங் கொடு. (கடிதத்தை வாங்கிக் கொண்டு கதவைச் சாத்துகிறான்.) ஆம், அவனிட மிருந்துதான். அதை நான் உன்னிடம் கொடுப்பதாக இல்லை: நானே வாசித்துப் பார்க்கிறேன்.

நோரா— ...ம்...வாசியேன்.

ஹெல்மர்—(விளக்கண்டை நின்றுகொண்டு) அதைப் பிரிக்க— எனக்குத் தைரியங்கூட இல்லை. நம் மிருவரையும் பாழாக்க வந்திருக்கிறதோ, என்னவோ? இல்லை, பார்த் துத் தெரிந்துகொள்ளத்தானே வேணும். (கடிதத்தைக் கிழித்துப் பிரிக்கிறான். ஒரு சில வரிகளைப் படிக்கிறான்: உள்ளே வைத்திருக்கும் ஒரு கடிதத்தைப் பார்க்கிறான்: ஆனந்தக் கூச்சலிடுகிறான்.) நோரா! (முகத்தை அவன் பக்கம் ஏதோ கேள்வி கேட்பவள் போல் திருப்பு கிறாள்.) நோரா—இல்லை—அதை நான் மறுபடியும் வாசிக்கவேணும்—ஆம் நிஜந்தான்! நான் பிழைத்தேன், நோரா! நான் பிழைத்தேன்!

நோரா—நான்?

ஹெல்மர்—நீயுந்தான்; நீயும் நானும், நாமிருவரும் காப்பாற் றப்பட்டுவிட்டோம். பார், இதோ, அவன் உன் பத் திரத்தைத் திருப்பி யனுப்பி யிருக்கிறான். தான் செய்த

தற்கு வருந்துவதாகவும்—தன் வாழ்வில் ஒரு இனிய மாறுதல்—என்ன எல்லாமோ சொல்லுகிறான். அதைப் பற்றிக் கவனிப்பானேன் நாம்! நாம் பிழைத்தோம், நோரா! இனிமேல் உனக்கு யாரும் ஒரு தீங்கும் இழைக்க முடியாது! ஓ! நோரா! நோரா! இல்லை: முத லில் நான் இதை அழித்துவிடவேணும். இரு, பார்ப் போம்—, (பத்திரத்தைப் பிரித்து ஒரு விநாடி பார்க் கிறான்.) வேண்டாம், வேண்டாம், நான் அந்தப் பிராரப் தத்தைப் பார்ப்பானேன்! என்னைப் பற்றிய வரையில் இதெல்லாம் ஒரு கெட்ட சொப்பனம் போலப் போய் விடட்டும். (பத்திரம், கடிதங்கள் எல்லாவற்றையும் கிழித்து கணப்புக்குள் எறிகிறான். அவை எரிவதைப் பார்க்கிறான்.) அப்பா—இனிமேல் அவை இல்லை. அவன் சொல்லுகிறான்: கிறிஸ்துமஸுக்கு முதல் நாள் முதல் நீ—இந்த மூன்று நாட்களும் உனக்கு எவ் வளவு திகிலுடன் கழிந்திருக்க வேணும், நோரா!

நோரா—இந்த மூன்று நாட்களும் நான் என்னுடனேயே மகா கடினமான மல் யுத்தம் செய்திருக்கிறேன்...

ஹெல்மர்—என்ன வேதனைப் பட்டிருப்பாய், அதிலிருந்து தப்ப வழி தெரியாமல்—ஆனால் வேண்டாம், அந்தப் பயங்கரங்களை யெல்லாம் நாம் ஞாபகப்படுத்திப் பார்க் கவே வேண்டாம். 'எல்லாம் முடிந்துவிட்டது; அதெல் லாம் முடிந்துவிட்டது!' என்று மட்டும் ஆனந்த ஆர வாரஞ் செய்வோம். இதைக் கேள், நோரா. அதெல் லாம் முடிந்துவிட்டது என்று உன்னால் அறிந்துகொள்ள முடியவில்லையா? இதென்ன இது? ஏன் அந்த வெறுப்புக்கொண்ட, நிலையான முகம் இன்னமும்? என் அருமை நோரா! எனக்குப் புரிகிறது; நான்

உன்னை மன்னித்துவிட்டேன் என்று நம்ப உன்னால் முடியவில்லை; அதுதானே? ஆனால், அது நிஜம், நோரா, சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் நீ செய்த தெல்லாவற்றையும் மன்னித்துவிட்டேன். நீ செய்தது எல்லாம், உனக்கு என்னிடம் உள்ள காதலால் செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியும்.

நோரா—அது நிஜம்.

ஹெல்மர்—ஒரு மனைவி தன் கணவனை எப்படிக் காதலிக்க வேண்டுமோ அப்படி நீ என்னைக் காதலித்திருக்கிறாய். சரியான வழி எது என்று தீர்மானிக்கப் போதுமான அறிவு உனக்கில்லை. பொறுப்புடன் உன்னால் நடந்து கொள்ளத் தெரியவில்லை என்பதற்காக, எனக்கு உன்னிடம் உள்ள அன்பு குறைந்துவிட்டது என்று எண்ணுகிறாயா என்ன? இல்லை, இல்லை. நீ என் மேல் எல்லாப் பொறுப்பையும் போட்டுவிடு. உன்னை நான் சரியானபடி சொல்லி, நடத்தி வைத்துக்கொள்ளுவேன். இந்தத் தீர்மானமற்ற, சஞ்சலமுள்ள பெண் தன்மை என் மனத்தை இரட்டிப்பாக வசீகரிக்கிறது. எல்லாம் போய் விட்டது, கவிழ்ந்துவிட்டது என்ற பீதியில் நான் முதலில் சொன்ன கொடூரமான வார்த்தைகளை மறந்துவிடு. அதைப்பற்றி இனி நினைக்காதே. நான் உன்னை மன்னித்துவிட்டேன், நோரா; சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் உன்னை மன்னித்துவிட்டேன்.

நோரா—வந்தனம், என்னை மன்னித்ததற்கு வந்தனம். (வலது புறக் கதவு வழியே வெளியேறுகிறாள்.)

ஹெல்மர்—வேண்டாம், போகாதே—(எட்டிப் பார்க்கிறான்) உள்ளே என்ன பண்ணிக்கொண்டிருக்கிறாய்?

நோரா—(உள்ளேயிருந்து) என் விநோத நாட்டிய ஆடையை அவிழ்த்துக்கொண் டிருக்கிறேன்.

ஹெல்மர்—(திறந்த கதவண்டை நின்றுகொண்டு) ஆம், எடுத்துவிடு. சாந்தப்படுத்திக் கொள். அமைதியாக இரு. பயந்துபோன என் சின்னக் குயிலே...பயப்படாதே இனிமேல்! உன்னை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். எனது அகன்ற சிறகுகளால் உன்னைப் பாதுகாத்துக் கொள்வேன். (கதவுப் பக்கம் மேலும் கீழும் நடந்து கொண்டு) நம் வீடு எவ்வளவு சௌக்கியமாக இருக் கிறது, நோரா! உனக் கிருப்பிடம் இங்கிருக்கிறது. பருந்தினால் துரத்தப்பட்ட புறாவைப் போன்ற உன்னை நான் இங்கே வைத்துக் காப்பாற்றுவேன்; படபட வென்று பயத்தால் அடித்துக்கொள்ளும் உன் ஹிரு தயம் அமைதி பெறட்டும். அமைதி மறுபடியும் வரும்; நோரா, கொஞ்சங் கொஞ்சமாய் வரும்: என்னை நம்பு நீ. இதெல்லாவற்றையும் நாளைக் காலையில் முற்றிலும் வேறு விதமாகப் பார்ப்பாய் நீ: கூடிய சீக்கிரம் எல்லாம் முந்தி யிருந்தது போலவே யாகிவிடும். உன்னை மன்னித்து விட்டேன் என்று நான் சொல்லுவதற்குக்கூட அவசிய மிராது; உனக்கே நான் மன்னித்துவிட்டேன் என்பது நிச்சயமாகத் தெரியவரும். நான் உன்னை வெறுத்து உதறி விடுவேன் என்றாவது, உன்னை நிந்திப்பேன் என் றாவது நீ நினைக்கலாமா? உண்மையான மனிதனின் மனது எப்படிப்பட்டது என்று உனக்குத் தெரியாது, நோரா! சொல்ல முடியாதபடி இனிமையும், திருப்தியும் உதிக்கிறது எனக்கு—ஒருவன் தன் மனைவியைத் தானாகவே, முழு மனசுடன் மன்னித்துவிட்டான் என்று நினைக்கும்போது ஏதோ புளகாங்கிதமாக இருக்

கும்; அவள் முன்னிலும் அவனுக்கு அதிக உரித்தான வளாகிருள்; அவன் அவளுக்குப் புத்துயிர் அளித்தவ ளுகிருன் ஒரு விதத்தில்; இன்ஞெரு விதத்தில் அவள் அவனுக்கு மனைவி மட்டுமின்றிக் குழந்தையாகவும் ஆகி விடுகிருள். இதற்கப்புறம் நீயும் எனக்கு அது மாதிரித் தான், திக்கற்றுப் பயந்த என் சின்ன அருமைக் குயிலே! ...எதைப்பற்றியும் நீ இனிக் கவலைப்படாதே, நோரா; இது மாத்திரம் ஞாபகம் வைத்துக்கொள்: என்னிடம் உண்மையுடன் நடந்துகொள்: ஒன்றையும் என்னிட மிருந்து மறைத்து வைக்காதே; நான் உன்னைச் சகல விஷயங்களிலும் சரியான வழியில் திருப்ப முயலுவேன் —இதென்ன இது? தூங்கப் போகவில்லையா? நோரா! உன் ஆடைகளைக் களைந்து வேறு ஆடை அணிந்து கொண்டுவிட்டாயா?

நோரா—(தினசரி ஆடையில்) ஆம், தார்வால்ட், நான் என் ஆடைகளை மாற்றிவிட்டேன்.

ஹெல்மர்—ஆனல் ஏன்? எதற்காக? இவ்வளவு நாழிகை கழித்து?

நோரா—நான் இன்றிரவு தூங்கமாட்டேன்.

ஹெல்மர்—ஆனல், என் அருமை நோரா—

நோரா—(தன் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு) அப்படி யொன்றும் நாழிகை யாகிவிடவில்லை. இங்கே இப்படி உட்காரு, தார்வால்ட். நீயும் நானும் பேசுவதற்கு ரொம்ப விஷயம் இருக்கிறது. (மேஜைக்கு ஒரு புற மாக உட்காருகிருள்.)

ஹெல்மர்—நோரா—இதென்ன?—ஏன் முகத்தைப் பற்றில் லாமல் திடப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிருய்?

நோரா—உட்காரு, கொஞ்ச நாழிகை பிடிக்கும்; உன்னுடன் பேசவேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

ஹெல்மர்—(மேஜையின் எதிர்ப்புறத்தில் உட்காருகிறான்.) என்னைப் பயமுறுத்துகிறாயே, நோரா!—நீ சொல்லுவது எனக்குப் புரியவில்லை.

நோரா—இல்லையா? அதுதான். என்னை உனக்குப் புரியவில்லை. நானும் உன்னை—இன்றிரவுக்கு முன்—அறிந்து கொள்ளவில்லை. வேண்டாம்—குறுக்கே பேசாதே. நான் சொல்லுவதை நீ காதுகொடுத்துக் கேட்க வேணும்: அவ்வளவுதான். தார்வால்ட், கணக்குத் தீர்க்கும் நாள் இன்று.

ஹெல்மர்—என்ன அர்த்தம் நீ சொல்வதற்கு?

நோரா—(சற்று நேரம் மௌனமாயிருந்து) நாம் இதுமாதிரி இங்கு உட்கார்ந்திருப்பது உனக்கு விசித்திரமாகப் படவில்லையா?

ஹெல்மர்—அதென்ன அது?

நோரா—நமக்குக் கலியாணமாய் எட்டு வருஷம் ஆகிவிட்டது. நீயும் நானும்—கணவனும் மனைவியும்—இன்றுதான் இவ்வளவு நாட்களில் முதன்முதலாக உண்மையான சம்பாஷணையைத் தொடங்கி யிருக்கிறோம் என்று தெரியவில்லையா உனக்கு?

ஹெல்மர்—உண்மையான சம்பாஷணையா?

நோரா—இந்த எட்டு வருஷங்களில்—அதைவிடக் கொஞ்சம் கூடுதலாகவே ஆச்சு—நம் சிநேகத்தின் ஆரம்பத்திலிருந்தே நாம் எந்த முக்யமான விஷயத்தைப் பற்றியும் ஒரு வார்த்தைகூடப் பேசினது கிடையாது.

ஹெல்மர்—என்றும், எப்போ பார்த்தாலும் என் கவலைகளை உன்னிடஞ் சொல்லி, உன்னையும் நான் கஷ்டப்படுத்துவேன் என்று நீ நினைக்கலாமா ?

நோரா—நான் உன் தொழிலைக் குறிப்பிட்டுப் பேசவில்லை. தீவிரமாக எவ்விஷயத்தையும் ஆராய்ந்து உண்மையைக் காண நாம் முயன்றதே இல்லை என்றுதான் சொல்லுகிறேன்.

ஹெல்மர்—ஆனால், என் அருமை நோரா, அதனால் உனக்கேதாவது லாப மிருந்திருக்குமா ?

நோரா—அதுதான் நானுஞ் சொல்லுகிறேன். நீ என்னை என்றும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. எனக்குப் பெரிய தீங்கு செய்துவந்திருக்கிறீர்கள், தார்வால்ட்—முதலில் எங்கப்பா : பின்னர் நீ.

ஹெல்மர்—என்ன? நாங்க ளிருவருமா ? உலகில் வேறு யாரையும்விட உன்னை அதிகமாக நேசித்த நாங்களா உனக்கு அநியாயஞ் செய்தோம் ?

நோரா—(தலையை ஆட்டிக்கொண்டு) நீ என்னை ஒருநாளும் காதலித்ததில்லை. என்னுடன் நேசமா யிருப்பதிலே சந்தோஷம் உண்டு என்று மட்டுந்தான் நீ நினைத்தாய்.

ஹெல்மர்—நோரா, என்னென்னவோ சொல்லுகிறாயே ?

நோரா—அதுதான் நிஜம், தார்வால்ட். நான் வீட்டில் அப்பாவுடன் இருக்கும்போது, எல்லாவற்றையும், சகல விஷயங்களையும் பற்றி, அவர் தன் அபிப்பிராயத்தைச் சொல்லுவார் : அதனால் அவர் அபிப்பிராயந்தான் என் அபிப்பிராயமும் ; என் அபிப்பிராயம் அவருடையதிலிருந்து எப்பொழுதாவது வேறுபட்டால் அதை நான் மறைத்து வைத்துக் கொள்வேன் : ஏனெனில் மறுதலித்தால் அவருக்குப் பிடிக்காது. அவர் என்னைத்

தன்னுடைய பொம்மைக் குழந்தை யென்பார்: நான் என்னுடைய பொம்மைகளுடன் விளையாடியதைப் போலவே அவர் என்னுடன் விளையாடுவார்: அப்புறம், நான் உன்னுடன் வாழ வந்தபோது—

ஹெல்மர்—நம் கலியாணத்தைப் பற்றிக் குறிப்பிடவா இந்த வார்த்தையை உபயோகிக்கிறாய்?

நோரா—(அமைதியாக, சஞ்சலமின்றி) நான் சொல்லுவது இதுதான். நான் அப்பா கையிலிருந்து உன் கைக்கு மாற்றப்பட்டேன். உன் நோக்கப்படி நீ எல்லாவற்றையும் ஏற்பாடு செய்தாய்: நானும் உன் நோக்கங்களையே பெற்றுக்கொண்டேன்—அல்லது அடைந்தது போலப் பாசாங்கு பண்ணினேன். எது என்று நிச்சயமாக எனக்குத் தெரியவில்லை.—ஒரு சமயம் இப்படித் தோன்றுகிறது: ஒரு சமயம் அப்படித் தோன்றுகிறது. என் பழைய வாழ்வை எண்ணிப் பார்க்கும் போது ஒரு பிச்சைக்காரி போல நான் வாழ்ந்திருக்கிறேன் என்று தோன்றுகிறது. நான் உனக்கு வேடிக்கைகள் செய்து காட்டத்தான் வாழ்ந்திருக்கிறேன், தார்வால்ட். ஆனால் உனக்கு அதுதான் பிடித்திருந்தது. நீயும் எங்கப்பாவும் என்னைப் பற்றிய வரையில் மகா பாவம் பண்ணிவிட்டீர்கள், என் வாழ்வை வீணாக்கி விட்டேன் என்பது உன் குற்றந்தான்.

ஹெல்மர்—என்ன அநியாயம்! நன்றியே யில்லாம லிருக்கிறாய், நோரா! நீ இங்கு சந்தோஷமாக இருக்கவில்லையா?

நோரா—இல்லை, எப்பவும் சந்தோஷமாக இருந்ததில்லை. சந்தோஷமாக இருந்ததாக நினைத்திருக்கிறேன். ஆனால் உண்மையில் அப்படி யிருந்ததே யில்லை.

ஹெல்மர்—இல்லையா? சந்தோஷமாக இருந்ததில்லையா?

நோரா—இல்லை, வேடிக்கையாக இருந்திருக்கிறோம்: வேறில்லை. நீ எப்பவும் என்னுடன் தயையுடன்தான் நடந்துகொண் டிருக்கிறாய். ஆனால் நம் வீடு வெறும் விளையாட்டறையாகத்தான் இருந்திருக்கிறது. நான் என் வீட்டில் அப்பாவின் பொம்மைக் குழந்தையாக இருந்ததுபோல் இங்கு உன் பொம்மை மனைவியாக இருந்தேன்; இங்கே குழந்தைகள்தான் என் பொம்மைகள், அவர்களுடன் நான் விளையாடுவதை அவர்கள் எவ்வளவு வேடிக்கை யென்று நினைத்தார்களோ, அவ்வளவு வேடிக்கையாகத்தான் நானும் உன்னுடன் விளையாடுவதை எண்ணினேன். நம் கலியாணம் இதைத் தவிர வேறில்லை, தார்வால்ட்.

ஹெல்மர்—நீ சொல்லுவதிலும் ஏதோ கொஞ்சம் உண்மையிருக்கிறது. ஆனால் அதை அவ்வளவு பெரிதாகவும் கோணலாகவும் சொல்ல வேண்டாம் நீ. ஆனால் இனிமேல் வேறு விதமாக இருக்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளலாம். விளையாட்டுக் காலம் முடிந்து விட்டது, இனி பாடம் படிக்கவேண்டிய காலம்.

நோரா—யாருடைய பாடம்? என்னுடையதா? குழந்தைகளுடையதா?

ஹெல்மர்—உன்னுடையதும், குழந்தைகளுடையதுந்தான், என் அருமை நோரா.

நோரா—பாவம், தார்வால்ட், உனக்குத் தக்க மனைவியாக இருக்க எனக்குக் கற்றுக்கொடுக்க நீ சரியான மனிதனில்லை......

ஹெல்மர்—அதை நீயா சொல்லுகிறாய்?

நோரா—நான்—நான் குழந்தைகளைச் சரியான வழியில் வளர்க்க எப்படித் தகுதி பெற்றவள்?

ஹெல்மர்—நோரா!

நோரா—நீயே சற்றுமுன் சொல்லவில்லையா? குழந்தைகளை வளர்க்க நீ என்னை நம்பமாட்டேன் என்று?

ஹெல்மர்—ஏதோ கோபத்தில் சொன்னேன் அது! நீ அதைக் கவனிக்கலாமா?

நோரா—உண்மையில் நீ சொன்னதுதான் ரொம்ப சரி. நான் அதற்குத் தகுந்தவ ளில்லைதான். அதற்கு முன் நான் இன்னொரு காரியம் செய்ய ஆரம்பிக்க வேணும். நான் எனக்கே முதலில் பாடம் கற்பித்துக்கொள்ள முயல வேணும்—அதில் உதவி செய்ய உன்னால் முடியாது. நானாக, எனக்காக, அதைச் செய்துகொள்ள வேணும். அதனால்தான் உன்னை இப்போது விட்டுவிட்டுப் போகப் போகிறேன்.

ஹெல்மர்—(குதித்தெழுந்து) என்ன சொல்லுகிறாய்?

நோரா—நான் தன்னந் தனியளாக இருக்கவேணும்— நான் என்னையே அறிந்துகொள்ளவும், உலகைப் பற்றிப் பூரா வும் அறிந்துகொள்ளவும் விரும்பினால் தனிப் பாதை யிலேதான் நடக்கவேணும். நான் இனியும் உன்னுடன் வசிக்க முடியாம லிருப்பது இதனால்தான்.

ஹெல்மர்—நோரா! நோரா!

நோரா—நான் இங்கிருந்து கிளம்பிவிடப் போகிறேன்—இப் பொழுது—உடனே—இந்த நிமிஷமே! இன்றிரவு கிறிஸ்டின் எனக்கு இடங் கொடுப்பாள் என்று நம்புகி றேன்—

ஹெல்மர்—உனக்குப் புத்தி ஸ்வாதீனமாக இல்லையா, என்ன? நான் அதை அநுமதிக்கமாட்டேன்! நீ போகக் கூடாது.

நோரா—இனிமேல் என்னிடம் உன் "கூடாது" எல்லாம் பிரயோசனப்படாது. எனக்குச் சொந்தமானதை மட்டும் நான் எடுத்துச் செல்லுவேன். உன்னுடையது எதுவும் எனக்கு வேண்டாம்—இப்பவும் சரி, இனிமேலும் சரி.

ஹெல்மர்—இதென்ன பைத்தியக்காரத்தனம்!

நோரா—நாளைக்கு என் வீட்டுக்குப் போவேன் நான்—அதாவது, என் பழைய வீட்டுக்கு. அங்கேதான் எனக்கு ஏதாவது செய்ய வேலை கிடைக்கும்.

ஹெல்மர்—கண்ணில்லாத அசட்டுப் பெண்ணே!

நோரா—நான் கொஞ்சம் அறிவு தேட முயலவேண்டும், தார்வால்ட்.

ஹெல்மர்—உன் வீட்டையும், கணவனையும், குழந்தைகளையும் துறந்துவிட்டுப் போகிறதற்கோ அறிவு? ஜனங்கள் என்ன சொல்லுவார்கள் என்று நீ யோசனை பண்ணவில்லையே!

நோரா — நான் அதையெல்லாம் எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனக்கு எது அவசியம் என்பது மட்டுந்தான் தெரியும்.

ஹெல்மர்—ஒரே கோரமாக வன்றோ இருக்கிறது! இப்படித் தான் உன் முக்கியமான கடமைகளையெல்லாம் உதறி எறிவாயா?

நோரா—என்னுடைய முக்கியமான கடமைகள் என்னவென்று நினைக்கிறாய் நீ?

ஹெல்மர்—நான் சொல்ல வேணுமா? உன் கணவனுக்கும் உன் குழந்தைகளுக்கும் செய்யவேண்டிய கடமைகள்

நோரா—வேறு முக்கியமான புனிதமான கடமைகளும் எனக்குண்டு.

ஹெல்மர்—நான் சொன்னதைவிடப் பரிசுத்தமான கடமைகள் வேறு கிடையாது. நீ சொல்வது என்ன கடமையை?

நோரா—எனக்கும் நானே செய்துகொள்ள வேண்டிய கடமைகள் இல்லையா?

ஹெல்மர்—அதற் கெல்லாம் முந்தி, நீ கவனிக்க வேண்டியது இதுதான்—நீ ஒரு மனைவி: ஒரு தாய்.

நோரா—அதில் இனிமேல் எனக்கு நம்பிக்கையில்லை. எதற்கும் முந்தியதாக நான் இதைத்தான் வைப்பேன்: நான் உன்னைப் போலவே ஒரு புத்தியுள்ள மனுஷ்ய ஜீவன்; ஆனால் உன்னளவு அறிவு எனக்கு இல்லை யென்றால், முதலில் நான் அறிவு படைத்தவளாக முயலவேணும். தார்வால்ட், ஜனங்கள் எல்லோரும் உன் கட்சியைத் தான் ஆதரிப்பார்கள்: புத்தகங்களில்கூட உன் கக்ஷி தான் எழுதப்பட்டிருக்கிறது என்றும் எனக்குத் தெரியும். ஆனால் இனிமேல் பலர் சொல்வதைக் கொண்டும், புத்தகங்களில் எழுதப்பட் டிருப்பதைக் கொண்டும் நான் திருப்தி யடைய மாட்டேன். நான் சுயமாகவே யோசனை செய்து, தீர்மானித்து, ஞானம் பெற முயலவேண்டும்.

ஹெல்மர்—உன் இடம் உன் வீட்டில், உன் குடும்பத்தில்தான் என்று சுயமாகவே உனக்குத் தெரியவில்லையா? இதில் உனக்கு நேர் வழி காட்ட மதம், கொள்கை, பக்தி யில்லையா உனக்கு?

நோரா—மதம், சமயம், பக்தி யென்றால் என்ன என்றே எனக்குத் தெரியாதென்று நினைக்கிறேன்.

ஹெல்மர்—என்ன சொல்லுகிறாய் நீ!

நோரா—நான் மத உறுதிப்பாடு செய்யப்பெற்ற பொழுது பாதிரி எனக்குச் சொன்னதைத் தவிர வேறு ஒன்றுந் தெரியாது. அவர் மதம் என்றால் இது, அது, இன்னொன்று என்று என்னவெல்லாமோ சொன்னார். நான் இதையெல்லாம் விட்டுவிட்டுப் போனபின், தனிமையில் அந்த விஷயத்தையும் தீர விசாரிக்க முயலுவேன். பாதிரி சொன்னது சரிதானா, என்னைப் பற்றிய மட்டில் நிஜந்தானா, என்று அறிய முயலுவேன்.

ஹெல்மர்—உன் வயதுப் பெண் ஒருத்தியிடம் நான் இது மாதிரிக் கேள்விப் பட்டதேயில்லை! மதம் உன்னைச் சரியான வழியில் திருப்ப முடியாவிட்டால், நான் உன் மனச்சாட்சியை எழுப்ப முயலுகிறேன். உனக்கு எது தப்பு, எது சரியென்று தெரியாதா? ஒழுக்கங் கூடக் கிடையாதா? இல்லை—எனக்குப் பதில் சொல்—உனக்குக் கிடையாது என்று நான் எண்ணலாமா?

நோரா—தார்வால்ட், அதற்குப் பதில் சொல்லுவது சுலபமல்ல. நிச்சயமாய், எனக்குத் தெரியவில்லை. அவ்விஷயம் என்னை முற்றிலுந் தடுமாறச் செய்கிறது. நீயும் நானும் வெவ்வேறு கண்களுடன் அதைக் காண்கிறோம் என்று மட்டும் எனக்குத் தெரிகிறது. சட்டம், நான் நினைத்தபடியில்லை: அது வேறுவிதமானது என்றும் நான் இப்போதான் அறிகிறேன். ஆனால் அந்தச் சட்டம் சரியானதுதான் என்று ஒப்புக்கொள்ள நான் மறுக்கிறேன். சட்டப்படி பெண்ணுக்குத் தன் தகப்பன், சாகக் கிடக்குந் தகப்பன், கவலைப்படாமலிருக்கச் செய்யவும், தன் கணவனின் உயிரைக் காப்பாற்றவும் உரிமையில்லையென்று ஏற்படுகிறது. என்னால் இதை நம்ப முடியவில்லை.

ஹெல்மர்—குழந்தை மாதிரிப் பேசுகிருய் நீ. நீ வசிக்கும் உலகத்தின் நிலைமையை, போக்கை நீ இன்னமும் கண்டபாடில்லை.

நோரா—இல்லை: தெரியவில்லை. ஆனுல் இப்போ கண்டறிந்து கொள்ள முயலப் போகிறேன். யார் சொல்வது சரி—நான் சொல்வதா, மற்றவர் சொல்வதா, என்றறிய விரும்புகிறேன் நான்.

ஹெல்மர்—உனக்குப் புத்தி சரியாயில்லை நோரா! உனக்குப் பித்துப் பிடித்துவிட்டது, நீ பேத்துகிருய்: உன் புத்தி பிறழ்ந்துவிட்டது என்றுதான் நான் நம்ப வேண்டி யிருக்கிறது.

நோரா—என் மூளை என்றும் இதற்கு முன் இவ்வளவு கலக்க மற்றும் சுறுசுறுப்பாயும் இருந்ததே கிடையாது.

ஹெல்மர்—கலக்கமற்ற மனசுடன் நீ உன் குழந்தைகளையும், கணவனையும் விட்டுவிட்டுப் போகப் போகிருயா?

நோரா—ஆம், போகிறேன்.

ஹெல்மர்—அப்படியானுல் அதற்கு ஒரே ஒரு அர்த்தந்தான் உண்டு.

நோரா—அதென்ன?

ஹெல்மர்—உனக்கு இனிமேல் என்னிடம் காதலில்லை.

நோரா—இல்லை, அதுதான் விஷயம்.

ஹெல்மர்—நோரா!—உன்னுல் அதை இவ்வளவு கடூரமாய்ச் சொல்ல முடிகிறதா?

நோரா—எனக்கும் வருத்தமாகத்தா னிருக்கிறது, தார்வால்ட். நீ என்றும் என்னிடம் தயையுடன், பிரியமாக இருந்திருக்கிருய், ஆனுல் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. இனிமேல் எனக்கு உன்னிடம் காதலில்லை.

ஹெல்மர்—(இழந்து விட்ட அமைதியைத் திரும்ப அடைந்து கொண்டு) அதுவும் கலக்கமற்ற, தீர்மானமான உண்மை தான்?

நோரா—ஆம். கொஞ்சங்கூடச் சந்தேகத்திற் கிடமில்லை. அதனுல்தான் நான் இனி இங்கு தங்க மாட்டேன் என்கிறேன்.

ஹெல்மர்—உன் காதலை இழக்க நான் என்ன செய்தேன் என்று உன்னுல் சொல்ல முடியுமா?

நோரா—உம்......முடியும். இன்றிரவுதான்...நான் நினைத்த ஆச்சரியகரமான சம்பவம்—நிகழவில்லை........நான் நினைத்திருந்த மாதிரி மனிதனல்ல நீ என்று கண்டு கொண்டேன்.

ஹெல்மர்—இன்னும் விவரமாகச் சொல்: எனக்குப் புரிய வில்லை.

நோரா—நான் எட்டு வருஷங்களாகப் பொறுமையுடன் காத் திருந்தேன்: கடவுளுக்குத் தெரியும்: ஆச்சரியகரமான சம்பவங்கள் தினசரி நடைபெறுமா? அப்புறம் இந்தத் துரதிர்ஷ்டம் என் தலையில் வந்து விடிந்தது: நான் அந்த ஆச்சரியகரமான சம்பவம் நடைபெறும் என்று உடனே எதிர்பார்த்தேன். க்ராக்ஸ்டாடினுடைய கடிதம் வெளியே பெட்டியில் கிடக்கும்போது, நீ அவனுடைய நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு விடுவாய் என்று நான் நினைக்கவே யில்லை. 'விஷயத்தை உலக மறிய வெளிப்படுத்திவிடு' என்று சொல்லிவிடுவாய் என்றுதான் நான் நிச்சயமாக நம்பியிருந்தேன். விஷயம் வெளிப்பட்டதும்—

ஹெல்மர்— ஆம், அப்பொழுது என்ன? உலகத்தில் அவதூறுக்கும், அவமானத்துக்கும் என் மனைவியைக் காட்டிக் கொடுத்த பின்? என்ன?

நோரா—அது வெளி வந்தபின்—நான் நம்பினேன்—நீ முன் வந்து குற்றத்தை உன்மேல் ஏற்றுக்கொள்வாய் : 'நான் தான் பொறுப்பாளி' என்று சொல்லிவிடுவாய் என்று நம்பினேன்.

ஹெல்மர்—நோரா!

நோரா—அப்படி உன் தியாகத்தை நான் அங்கீகரித்திருக்க மாட்டேன் என்றுதானே சொல்லுகிறாய்? ஆம், அங்கீகரிக்கத்தான் மாட்டேன். ஆனால் நீ சொல்வதற் கெதிராக நான் சொல்லுவதை யார் நம்புவார்கள்? அந்த ஆச்சரியமான தியாகத்தைத்தான் நான் எதிர்பார்த்துப் பயந்தேன்: அதெல்லாம் நேராது தடுக்கத்தான் நான் தற்கொலை செய்துகொள்ள எண்ணினேன்.

ஹெல்மர்—உனக்காக இரவு பகலாக உழைக்க நான் தயார், நோரா—உனக்காகத் துக்கத்தையும், ஏழ்மையையும் பாராட்டாதிருக்கத் தயார். ஆனால் தன் காதலுக்காகக் கூட எந்த மனிதனும் தன் நாணயத்தை, கௌரவத்தை இழக்கத் தயாராக இருக்க மாட்டான்.

நோரா—இந்தத் தியாகத்தை லட்சக்கணக்கான ஸ்திரீகள் மட்டும் செய்திருக்கின்றனரே?

ஹெல்மர்—ஓ! நீ புத்தியற்ற குழந்தை மாதிரி நினைக்கிறாய், பேசுகிறாய்!

நோரா—இருக்கலாம். ஆனால் நீ?—நான் கூட வாழச் சம்மதிக்க வேண்டிய மனிதன்—நீ நினைக்கிறபடி இப்படி நினைக்கவுங் கூடாது: நீ பேசுகிறபடி பேசவும் கூடாது. உன் பயம் தெளிந்தவுடன்—அதுவும் என்னைப் பற்றிய

கவலையால் வந்த பயமில்லை, உனக்கு என்ன நேர்ந்து விடுமோ என்ற பயம்—அது தெளிந்தவுடன், நீ நம் மிடையே ஒன்றும் வரவே வராதது போல், பழைய படியே இருக்க முயன்றாய். நான் முன் போலவே, உன் னுடைய சின்னக் குயிலி, உன் பொம்மை.—உன் விளை யாட்டுப் பொம்மையை நீ முன்னைவிட அதிக ஜாக்கிரதை யாக வைத்துக்கொள்ளுவாய்: ஏனெனில் அது உடைந்துவிடக் கூடியதாய், மெல்லிசாக இருப்பதைக் கண்டுவிட்டாய்—(எழுந்து) தார்வால்ட்! எட்டு வருஷங் கள் நான் யாரோ ஒரு அந்நியனுடன் வாழ்ந்து—அவனுக்கு மூன்று குழந்தைகளும் பெற்று விட்டேன்—ஓ! அதைப் பற்றி எண்ண எனக்குச் சகிக்கவில்லை! என்னைச் சுக்குச் சுக்காகக் கிழித்துக்கொண்டுவிடலாமா என்று தோன்றுகிறது!

ஹெல்மர்—(துக்கமாய்) தெரிகிறது, தெரிகிறது. நம்மிரு வருக்கு மிடையே ஆழங்காணாத ஒரு கடல் தோன்றி விட்டது. அதை மறுப்பதற்கில்லை. ஆனால், நோரா, அந்த வெள்ளத்தைத் தூர்த்து மூடிவிட முடியாதா?

நோரா—இப்போ இருக்கிறபடி, உனக்குத் தக்க மனைவி யில்லை நான்.

ஹெல்மர்—நான் வேறு மனிதனாக மாற என்னிடம் சக்தி யில்லையா?

நோரா—இருக்கலாம்—உன் பொம்மை உன்னிடமிருந்து பிடுங்கப்பட்டுவிட்டால்—

ஹெல்மர்—ஆனால், பிரிவது! உன்னிட மிருந்து பிரிவது! வேண்டாம், வேண்டாம், நோரா! என்னால் முடியாது.

நோரா—(வலது புறம் அறைக்குள் போய்க்கொண்டு) பிரிய வேண்டு மென்பது அதனாலேயே உறுதிப்படுகிறது.

(அவள் போர்வையுடனும், தொப்பியுடனும், கையில் ஒரு சிறிய பையுடனும் திரும்பி வருகிருள். பையை மேஜைக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலிமேல் வைக்கிருள்.)

ஹெல்மர்—நோரா! நோரா! இப்ப வேண்டாமே! நாளை வரையில் பாரேன்.

நோரா—(போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு) இரவை ஒரு அந்நியனுடைய அறையில் என்னுல் கழிக்க முடியாது.

ஹெல்மர்—ஆனுல், அண்ணன் தங்கை போல நாம் இங்கு இருக்க முடியாதா?

நோரா—(தொப்பியை யணிந்துகொண்டு) அப்படி அதிக நாள் இருக்கமாட்டோம் என்று உனக்கே தெரியாதா? (சால்வையை மடித்துப் போட்டுக் கொள்கிருள்.) வந்தனம், தார்வால்ட், நான் குழந்தைகளைப் பார்க்கப் போகிறதில்லை. என்னைவிட நல்லவர்கள் கையில் அவை இருக்கின்றன என்று எனக்குத் தெரியும். நானிருக்கிற நிலையில், என்னுல் அவர்களுக்கு ஒரு உபயோகமும் இல்லை.

ஹெல்மர்—ஆனுல் என்றைக்காவது ஒரு நாள், நோரா—என்ருவது?

நோரா—நான் எப்படிச் சொல்ல முடியும்? எனக்கு என்ன நேரும் என்று எனக்கே தெரியாதே.

ஹெல்மர்—ஆனுல் நீ என் மனைவி, உனக் கென்ன நேரிடினும், நீ என் மனைவி.

நோரா—கேள், தார்வால்ட். ஒரு மனைவி, நான் இப்போது சொல்வது போல், தன் கணவனைத் துறந்துவிட்டுப் போனுல், அவளுக்கு அதற்கப்புறம் அவனிடம் யாதொரு உரிமையும் கிடையாது என்று கேள்விப்பட்

டிருக்கிறேன். அது என்னவானாலும், உன் சுதந்திரத்தை உனக்கு நான் திருப்பி யளித்துவிட்டேன். ஏதோ கட்டுப்பட்டவனாக நீ நினைக்க வேண்டிய அவசியமே யில்லை. நானும் கட்டுப்பட்டவளாக நினைப்பதில்லை. இரு கட்சிக்கும் பூர்ண சுதந்திரம் வேண்டும். பார், இதோ உன் மோதிரம். என்னுடையதைக் கொடுத்துவிடு.

ஹெல்மர்—அதுவுமா?

நோரா—அதுவுந்தான்.

ஹெல்மர்—இதோ இருக்கிறது.

நோரா—சரி! இப்போ எல்லாம் முடிந்துவிட்டது. சாவிகளை இதோ வைத்திருக்கிறேன். வீட்டிலிருப்பதெல்லாம், என்னைவிட, வேலைக்காரிகளுக்குச் சரியாகத் தெரியும். நாளைக்கு, நான் அவளைவிட்டுக் கிளம்பியதும், கிறிஸ்டின் இங்கு வந்து, நான் என் வீட்டிலிருந்து என்னுடன் கொண்டுவந்த என் உடைமைகளை யெல்லாம் மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு போவாள். அவைகளை என்னிடம் அனுப்ப ஏற்பாடு செய்துவிடுகிறேன் நான்.

ஹெல்மர்—எல்லாம் முடிந்து விட்டதா! முடிந்து விட்டதா!-நோரா, நீ என்னைப் பற்றி மறுபடியும் நினைத்துப் பார்க்கவே மாட்டாயா?

நோரா—உன்னையும், குழந்தைகளையும், இவ் வீட்டையும் பற்றி நான் அடிக்கடி நினைப்பேன் என்று உனக்குத் தெரியும்.

ஹெல்மர்—நான் உனக்கு எழுதலாமா, நோரா?

நோரா—இல்லை, வேண்டாம். நீ எழுதக் கூடாது.

ஹெல்மர்—ஆனால் உனக்கு ஏதாவது—அனுப்பவாவது—

நோரா—ஒன்றும் கூடாது—வேண்டவே வேண்டாம்—

ஹெல்மர்—உன்னிடம் பணமில்லாது போனால் நான் உதவி யாவது—

நோரா—வேண்டாம், அந்நியன் ஒருவனிடமிருந்து நான் எதுவும் வாங்கிக்கொள்ள முடியாது.

ஹெல்மர்—நோரா—நான் இனி அந்நியனைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாதா உனக்கு?

நோரா—(பையை எடுத்துக்கொண்டு) ஆ! தார்வால்ட், அப்படி ரொம்ப அதிசயமான ஆச்சரியமான சம்பவம் இனிமேல்தான் நிகழவேணும்.

ஹெல்மர்—என்ன அந்தச் சம்பவம் என்று சொல்லேன்!

நோரா—நீயும் நானும் அவ்வளவு மாறிப் போய்—ஓ! தார்வால்ட், இனிமேல் அதிசயங்கள் நிகழும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.

ஹெல்மர்—ஆனால் எனக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறதே! சொல்லு—எவ்வளவு மாறி யிருக்க......

நோரா—நாம் இருவரும் சேர்ந்து வாழ்ந்தால் அது உண்மை மணவாழ்க்கையாக இருக்கும்படி. போய் வருகிறேன். (கூடத்து வழியாக வெளியேறுகிறாள்.)

ஹெல்மர்—(கதவுக் கருகில் ஒரு நாற்காலியில் விழுகிறான். கைகளால் முகத்தை மூடிக்கொள்ளுகிறான்.) நோரா! நோரா! (சுற்றுமுற்றும் பார்க்கிறான். எழுந்திருக்கிறான்.) காலி! அவள் போய்விட்டாள். (அவன் மனத்திலே ஒரு ஆசை, நம்பிக்கை உதிக்கிறது.) எல்லாவற்றையும் விட அதிசயமொன்று—?

(கீழேயிருந்து ஒரு கதவு 'படார்' என்று சாத்தப்படும் சத்தம் கேட்கிறது.)

---